www.padippakam.com

Canada..........1.25$ France............8.00F
Germany.........2.25DM India...............12,00Rs
Norway..........12.00Kr Srilanka.........20.00Rs
Switzerland........ 2,5 United Kingdom......



# எரிமலை

JANUARY 1994

The International Tamil Newsmagazi




படிப்பகம்

www.padippakam.com


அழகொளிரும்
எவர்சில்வர் பாத்திரங்கள்
உபகரணங்கள்

அவை
உங்களுக்கும் 'அவர்களுக்கும்'
மன நிறைவான

**பரிசுப் பொருள்கள்**

**குமரன்ஸ்**

KUMARANS



இலங்கையின்
**லீலா**
தயாரிப்புகளுக்கான
மொத்த இறக்குமதியாளர்கள்,
விற்பனையாளர்கள்

**142 HOE STREET**
**WALTHAMSTOW**
**LONDON E17 4QR**
**TEL: 081 - 5214955**
**FAX: 081 - 521 9482**

**69 HOLLOWAY ROAD**
**HIGHBURY & ISLINGTON**
**LONDON N7 8JZ**
**TEL: 071 - 609 1912**
**FAX: 071 - 609 0501**


படிப்பகம்

www.padippakam.com





கிளின்டன்
சாதனையும்
சோதனையும்

■ 25 அட்டைச் செய்தி

# 93 இல் உலகம்



சிஹானுக்
முடிசூடல்


நேயர் நெஞ்சம்........ 5
எண்ணம்........ 7
ஜோதியுடன கலந்தது ஜோதி........ 11
இலங்கை:
யும்மமும் தேர்தலும்........ 19
ஆசியா:
மாற்றமையையும் பிராந்திய பாதுகாப்பு........ 21
இந்தியா:
புதிய ஆண்டில் புது வேகம்........ 23
கலை:
அரங்கேற்ற விழாக்கள்........ 24
சிறப்பு கட்டுரை:
வரலாற்று நாயகி தாசி அஞ்சுகம்........ 27
தமிழ்நாடும் தலைநகரும்:
ஜெய ஜெய ஜெய ஹே........ 29
புகைப்பட கண்காட்சி:
ஸல்காடோ........ 31
ஜெர்மனி
2 லட்சம் அகதிகள் தலைமறைவு........ 35
சிறுகதை:
ஞானம்........ 36
புத்தக விமர்சனம்........ 41
குறுக்கெழுத்துப் போட்டி........ 42
ஜன்னல்........ 44


■ 12 கலை
கவிஞனுக்குக் கவிதாஞ்சலி
சென்னையிலொரு
புது 'ரஸாநுபவம்'





படிப்பகம்

www.padippakam.com

**Nazhikai**
The International Tamil Newsmagazine
VOL. I, NO. 2, January 1994

**EDITOR:**
S. Mahalingasivam

**CONTRIBUTING EDITORS:**
S. Swaminathan, Wimal Sockanathan, M. Pushparajan, Dharshini Somasundaram, Yamuna Rajendran

**LAYOUT ARTIST:**
K. Krishnarajah

**TECHNICAL ASST:**
K. Nagasothy

**EDITORIAL OFFICE:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
U.K.
Tel: 081 - 961 5962
Fax: 081 - 961 5962

**PUBLISHERS:**
Newsmedia International Limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH
U.K.

**PRINTERS:**
Set Line Data Ltd
London

Cover printed at ABILITY PRINTING, Harrow, Middlesex.

**Subscription For 12 Issues**

UK: .................... £14.00
Europe/India/SriLanka: .................... £15.00
All other countries: .................... £20.00

**Please complete the form and return to**

Newsmedia International limited
Park Royal House
23 Park Royal Road
London
NW10 7JH

**Name:** . . . . . . . . . . . . . . . . .

**Address:** . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

. . . . . . . . . . . . . . . . . . . . . .

**Tel:** . . . . . . . . . . . . . . . . . . .

**Sending here with a cheque / draft / Money order for the amount of . . . . . .**

அன்புள்ள வாசக நேயர்களுக்கு;

புத்தாண்டு, பொங்கல் வாழ்த்துக்கள்.

'நாழிகை' முதலாவது இதழ் கடந்த ஆகஸ்டில் வெளியானது. நாம் அதில் குறிப்பிட்டபடியே, அச்சேற்றுவதில் மிகுந்த சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று.

அவை நம்மை விஞ்சின.

செப்டம்பர், அக்டோபர் இதழ்களை முழுமையாகத் தயாரித்தும் அவற்றை அச்சேற்றிவிட இயலவில்லை.

இப்பொழுது செய்துகொண்டுள்ள ஏற்பாடுகளில் இந்த ஜனவரி இதழ் வெளிவருகிறது. இனிநம்மால் வெல்லமுடியும் என்றே நம்புகிறோம்.

முழு அளவில் ஆரம்பித்து, தொடர்ந்து வெளிவராததில் ஏற்பட்ட சுமைகள் அதிகம். எனினும், உலகின் எல்லாப்பகுதிகளிலுமேயிருந்து கிடைத்த வரவேற்பு, அவற்றைத்தாங்கி நம்பிக்கையோடு நடக்க உந்தலாகிறது.

உங்களுக்கு ஏற்பட்ட தடங்கல்களுக்கும் மன்னிக்குக.

வணக்கம்.

ஆசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com



RANJITH MANO
& CO

SOLICITORS

Immigration.
Refugee Application,
Family Disputes
&
Conveyancing
Accident Claim,
Licensing,
Housing Problem,
Landlord & Tenant Dispute,
Tenancy Agreement,
Mortgage Arrears,
Harassments,
Notice to Quit.
ALL TYPE OF LEGAL AID
WORK UNDERTAKEN

107B HOE STREET
WALTHAMSTOW
LONDON E17 4SA

TEL: 081-521 5757
FAX: 081-5215757


### மாற்றங்கள்

துணிச்சலுக்குப் பாராட்டுக்கள். தற்கால அறிவுலகுக்குள் தமிழ்ச் சமூகத்தையும் கொண்டுவரவேண்டியதேவை இருந்துகொண்டேதான் இருக்கிறது. வாழ்வைச் சூழவுள்ள சகலவற்றையும் அலசிப் பார்க்க ஒரு சாமானியனுக்கு முடியுமாயினும், இலகு விடயங்கள் என்று குப்பைகளை அவன் தலையிற் கொட்டும் பத்திரிகையியலில் மாற்றங்கள் ஏற்படட்டும். நாழிகை தொடர்ந்து வரவேண்டும்.

ந. சுசீந்திரன்
ஜெர்மனி.

### விடயத்தில் கவனம்

நாழிகை, இந்தியா ருடே போன்ற தோற்றத்தையும் எண்ணத்தையும் மனதில் எழுப்பியது. அமைப்பிலும், விடயத்திலும் நன்கு கவனம் செலுத்தியுள்ளீர்கள். ஐரோப்பிய நாட்டில் இது போன்ற ஒரு வெளியீடு வருவது வரவேற்கத்தக்கது. தொடர்ந்தும் வெளிவருவதிற்றான் வெற்றி தங்கியுள்ளது.




ஐ.தி. சம்பந்தன்,
லண்டன்.

### கவலை

முதற்பிரதியைக் கண்டதும் இது ஒரு தமிழ்நாட்டுச் சஞ்சிகையோ என்ற ஒரு கேள்வி வெளி அமைப்பைப்பார்த்து ஏற்பட்டது. நல்ல தரமான அமைப்பைப் பெற்றுள்ளது. ஆனால், உள்ளே சென்று நுகரும்போது சில கேள்விகள் எனக்குள் எழுந்தன. சில விடயங்கள் அளவுக்கு மீறியவையாக இருக்கின்றன. சித்திரா விஸ்வேஸ்வரனுக்குப் பெரும்பகுதியையும், சினிமாவுக்கு முக்கியத்துவத்தையும், அரசியலுக்கு பெரும்பகுதியும் அளிக்கப்பட்டிருந்தது. உறங்கிடும் சில நம்மவரை விழிக்கவைக்கும் எந்த ஆக்கத்தையும் காணவில்லை என்பது என் கவலை.

பொன்னண்ணா
டென்மார்க்.

### காலத்தின் தேவை

நாழிகை காலத்தின் தேவையே. ஐரோப்பிய தமிழ்ப் பத்திரிகை உலகில் செய்திச் சஞ்சிகை ஒன்றின் தேவை வெ றிடமாகவே இருந்துவந்திருக்கிறது. அந் வெற்றிடத்தை நிரப்பியுள்ள நாழிகை அதன் முதலாவது இதழிலேயே நிறை யும் தந்திருக்கிறது. அடுத்தடுத்த இதழ்க உரிய காலத்தில் வெளிவரும்போ அதன் தேவை இன்னும் உணரப்படும்.

'பாரிஸ் ஈழநாடு

### கை கொடுக்கவேண்டும்

அழகான அமைப்புடன் வெளிவ துள்ள இச் சஞ்சிகை பலதரப்பட்ட வா கர்களையும் திருப்தி பண்ணும் வகையி வெளிவந்துள்ளது. வர்ணப் படங்கள் உலகச் செய்தி அலசல்கள், சினிமா செய்திகள், மற்றும் கலையுலகச் செய் களும் 'செவ்வ களும் புத்தகு தின் தரத்தை எண்ணி மூக்கி விரல் வைக் வைக்கிறது. மி ந்த பொருட் செலவில் செ யப்பட்டிருக் வேண்டுமென் தோன்றுகிறது இது தொடர்ந் தமிழ் மக்கள் ம தியில் தவழ்ந் பெருமை பெ வதற்கு வாசகா கள் கை கொடுக் கவேண்டும்.

'கலசம்' லண்டன்

### சினிமாச் சிறப்பு

ஐரோப்பாவில் அமைப்பிலும் அடக்கத்திலும் ஒரு நல்ல சஞ்சிகையா லண்டனிலிருந்து வெளிவர ஆரம்பி துள்ளது நாழிகை. எடுத்தவுடனேயே ஒ சர்வதேச சஞ்சிகையைத் தொடுவதுபோ உணர்வை ஏற்படுத்துகிறது. அன்றை நினைவுகளை மீட்டி எழுதப்பட்ட ஆசிரிய தலையங்கம் முதல் அத்தனை ஆக்கங்களும் அற்புதமாகவே உள்ளன இலங்கை, இந்திய அரசியல் அலசல்கள் கொஞ்சம் காலஞ்சென்றதாக இருந்தா லும் ஆளுமையாக, அழகாக இருக்கின் றன. பொஸ்னியாவைத் தொட்டுக்காட் டியது தொடரவேண்டும்போல் இருக் கிறது.

சினிமா ஒரு பக்கத்திலேயே முடிந்தி ருப்பதும் ஒரு சிறப்புத்தான். சினிமா செய்திகளைவிட ஆரோக்கியமான கட்டுரைகள் இடம்பெறச் செய்வது நல்லது.

'தமிழன்' பாரிஸ்.



படிப்பகம்

www.padippakam.com


Devji's
FINE JEWELLERY

கல்யாணிக்குக் கல்யாணம்
நிச்சயதார்த்தம் நிச்சயித்தாயிற்று
இப்போது எங்கே அவர்கள்
அவசரப்படுகிறார்கள்?

கல்யாணிக்குத் தங்க நகைகள் வாங்க
டெவ்ஜிஸ் தங்கமாளிகை செல்வதற்குத்தான்!

தாலி
அட்டியல்
பதக்கம்
சிமிக்கி
வளையல்கள்
-இன்னும் விதம் விதமான தங்க வைர நகைகள்
அனைத்துக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்

டெவ்ஜிஸ்
தங்கமாளிகை



DEVJI'S
28, EALING ROAD
WEMBLY
MIDDX HA0 4TL
TEL: 081-900 1114/5
FAX:081-903 0958


படிப்பகம்

www.padippakam.com



# அரசியல் ‘தமாஷா’

மத்திய கிழக்கின் ‘அதி பயங்கரவாதி’ என்று அமெரிக்காவினாலும் இஸ்ரேலினாலும் கருதப்பட்டவர் பாலஸ்தீன விடுதலை இயக்க (பி.எல்.ஓ) தலைவர் யாசர் அரபாத். அவரும் இஸ்ரேல் பிரதமர் யிற்சாக் றாபினும் செப்டம்பர் 13ஆம் தேதி வெள்ளை மாளிகையில் கை குலுக்கினார்கள்.

வியப்புக்குரிய இந்த நிகழ்ச்சி, புகைப்படங்களுடனோ அல்லது செய்தியாகவோ முடிந்து விடும் என்று எவரும் கூறிவிடுவதற்கில்லை. இஸ்ரேல், பி.எல்.ஓ. இரு தரப்பிலுமே தீவிரவாதிகளின் எதிர்ப்புகள் இருந்தாலும்; ஒரு நீண்ட கால - ஐந்து ஆண்டுகள் திட்டத்தில் - எதிர் பார்ப்பில் - நம்பிக்கையில்தான் இந்த இரு தரப்பினரிடையேயும், பாலஸ்தீனர்களுக்கு மேற்குக் கரையிலும் காஸா பகுதியிலும் பிரதேச சுயாட்சிக்கான ஒப்பந்தம் அங்கு கைச்சாத்திடப்பட்டாலும்; பெரும்பாலும் அதன் சாத்திய வலுவுடனேயே அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படியே அது அமையும் என்றும் நம்புவோம். கடந்த ஆண்டில்நிகழ்ந்த மிக உன்னத நிகழ்வு இது. ஆனால் அந்த நிகழ்வு, உடனடியாகவே இலங்கைத் தமிழர் பிரச்னையையும் நினைவு படுத்துகிறது.

நாற்பது வருட காலமாக தொடரும் அவர்களது உரிமைப் போராட்டமும் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக ஆயுதப் போராட்டமாகி, மிகுந்த அநுபவிப்புகளுடன் அந்த மக்கள் அல்லலுறுகிறார்கள். அவர்களுடைய பிரச்னையின் அடிப்படையில் கைச்சாத்தான இலங்கை-இந்திய ஒப்பந்தம் குற்றுயிராய்க் கிடப்பதற்குக் காரணங்கள் பல. அது உயிர்பெறுமோ என்னவோ, ஆனால், ‘ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றைய எல்லாவற்றையும் செய்வேன்’ என்று சொன்ன முன்னைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தனவிலிருந்து, அவரின் வழிவந்த பிரேமதாச, இன்றைய ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவரை ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவது கூட நடக்கின்ற - பூகோளத்தின் பல பாகங்களிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்ற இக்காலத்தில், அந்த மக்களுடைய பிரச்னையைத் தீர்க்க அந்தரங்க சுத்தியோடு எந் நடவடிக்கையையுமே எடுக்க வில்லை.

வெள்ளை மாளிகையிலே யாசர் அரபாத்து யிற்சாக் றாபினும் கை குலுக்கும் வைபவத்தை இலங்கைத் தொலைக்காட்சியில் நேரடி அஞ் லாகவே ஒளிபரப்பிவிட்டு, ஜனாதிபதி விஜேதுங் உடனடியாகவே தன்னுடைய பதவிக் காலத்தின் முதலாவது பாரிய இராணுவ நடவடிக்கையை தான் வடபகுதியில் மேற்கொண்டார்.

ஜனாதிபதி விஜேதுங்கவின் பேச்சுக்களு நடவடிக்கைகளும் அடுத்துவரும் ஜனாதிபதி தே தலுக்கு தம்மைத் தயார்படுத்தும் விதமாகவே இருப்பது பெரும் விசனத்துக்குரியது. ‘நாட்டி இனப் பிரச்னை என்று ஒன்று இல்லை, பயங்க வாதப் பிரச்னையே அது’ என்று அவர் திரும்ப திரும்ப கூறிவருகின்றார். இந்தக் கூற்றின் அடிப் டையிலே அவர் மேற்கொண்ட ‘யாழ்தேவி’ ராணுவ நடவடிக்கையில் ஏற்பட்ட தோல்வியும் அதன் பின்னர் தீவிரவாத விடுதலைப் புலிகள் மி முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படை தளங்களில் மேற்கொண்ட மிகப் பெரும் தாக்குதலு ஜனாதிபதி அவரின் கொள்கையை இது விடயத்தி மாற்றிக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

பிரச்னைக்கு ஆக்கபூர்வமான தீர்வை முன் வைக்காது, அதற்கான நடவடிக்கைகளில் ஈடுப டாது, அவர் பேசும் - மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கை தெற்கிலே தேர்தலுக்கு அவர் காண்பி கும் அரசியல் ‘தமாஷா’வேதான்.

உயிர்களில் அரசியல் நடத்தும் துர்பாக்கி நிலை அந்த நாட்டில் ஏற்படாது, அரசியல் தீ வொன்றுக்கு பொறுப்புவாய்ந்த ஒவ்வொருவரும் மாறிவரும் இக் காலகட்டத்தில் முழுமனதோ செயல்பட்டு, அந்த மக்களும் வாழ வழிவகுக் வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com


# THAMPA
SOLICITORS

ZAMBIA HOUSE
8A SOUTHHILL AVENUE
SOUTH HARROW
MIDDX HA2 ONQ
TEL:081 426 8562
HOME:081-422 8248
FAX:081-426 8307

* CONVEYANCING
* LITIGATION
* IMMIGRATION MATTERS
* WILLS & PROBATE
* LANDLORD & TENANT
* MATRIMONIAL MATTERS
* PERSONAL INJURY
* LIQUOR LICENSING

LEGAL AID WORK UNDERTAKEN


# சொன்னார்கள்

■ "நான் பணியாற்றிய நிறுவனங்கள் அனைத்திலும் மிகவும் ஊழல் நிறைந்தது இதுதான்." -பொஸ்னியாவின் சிரேஷ்ட ஐ.நா. அதிகாரி.

■ "நீங்கள் நேற்றைய மனிதர்கள். நாம் பலஸ்தீனியர்களுடன் சமாதானமாக வாழவே விரும்புகிறோம்." -இஸ்ரேல் வெளிநாட்டமைச்சர் சைமன் பீரஸ்.

(யூத தீவிரவாதிகளுக்கு)

■ "இலங்கைத் தமிழர்கள் அனைவருக்குமான தலைமையை ஏற்கமுடிந்தால் உங்கள் எல்லோரையும்விட நானே அதிகம் சந்தோஷப்படுவேன். ஆனால், என்னால் முடியாத ஒன்றை நான் வாக்களிக்கமாட்டேன்." -அமைச்சர் தொண்டமான்.

(லண்டனில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில்)

■ "வடக்கிலுள்ள மக்களுக்கு பல்கலைக்கழகம் மற்றும் நிறுவனங்கள் கல்விக்காக வழங்கப்பட்டுள்ளன. இன விகிதாசாரப்படி அவர்களுக்கு அரச வேலைவாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. லக்ஷ்பான திட்டத்தின்கீழ் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை அவர்கள் பெறுகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக சிங்களவர்கள் தமிழர்களைக் கவனித்து வருகிறார்கள்; இனியும் அவர்கள் அப்படியே நடத்துவார்கள்." - ஜனாதிபதி விஜேதுங்க.

(அரசாங்க அதிகாரிகளுக்கான கூட்டமொன்றில்)

■ "உடல் வரட்சியா? எப்போதுமே இருக்கிறது 'கோக்'!"

(பெப்சி நிறுவனத்தின் ஆதரவில் மைக்கல் ஜாக்சன் பாங்கொக் சுற்றுலா மேற்கொண்டிருந்தவேளை வெளியான அவர்மீதான அவதூறுகளையடுத்து இரண்டு நிகழ்ச்சிகளை அவர் தமக்கு 'உடல் வரட்சி' என்று கூறி ரத்துச்செய்தவுடன் கொக்கா கோலா நிறுவனம் வெளியிட்ட விளம்பரம்.)

■ "காரியங்கள் திறமையாக செயல்படுவதற்கு ஒரு தனியார் கம்பனியைப் போலவேதான் நாமும் நடவடிக்கைகளை எடுக்கிறோம்." - பக்கிங்ஹாம் மாளிகைப் பேச்சாளர் ஒருவர்.

(அரச குடும்பத்தின் நடவடிக்கைகளை சீரமைக்கும் முயற்சிகள் பற்றி)




லண்டன் ரைம்ஸ்



படிப்பகம்

www.padippakam.com





# அறிவிலே புதியன

இங்கே நீங்கள் காண்கின்றவாறு ஒட்டிப் பிறந்த இந்த இரட்டை ஆண் குழந்தைகளை சத்திரசிகிச்சை மூலம் தனித்தனியாக வேறுபிரித்திருக்கிறார்கள்.

லண்டனின் பிரசித்திபெற்ற கிறேற் ஓர்மன்ட் வீதி சிறுவர் மருத்துவ நிலையத்தில்தான் ஆற்றல்மிக்க எட்டு வைத்திய நிபுணர்களைக் கொண்ட குழு செப்டம்பர் முதலாம் தேதி இந்த இத்தாலிநாட்டு 10 மாத குழந்தைகள் பெனியமினியோ, மரியோ இருவரையும் வேறுபடுத்தும் சிக்கல் மிகுந்த சத்திரசிகிச்சையை மேற்கொண்டது. பெனியமினியோ திருப்திகரமான முறையில் முன்னேற்றமடைவதாகவும், மரியோ இன்னமும் ஆபத்தான நிலையிலேயே இருந்தாலும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் மருத்துவ நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மார்பிலிருந்து இடுப்புவரை இணைந்துள்ள இக் குழந்தைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காலையே கொண்டுள்ளன. தனித்தனியான இருதயத்தைக் கொண்ட இவை, ஈரலையும் கீழ்க்குடலையும் பகிர்ந்து கொள்கின்றன. இக் குழந்தைகளின் உயிர் வாழ்வுக்கான சாத்தியம், இத்தகைய சத்திரசிகிச்சைகளில் உலகப் புகழ்பெற்ற இந்த மருத்துவ நிலையத்தில்தான் கிட்டலாமென்ற மூன்று மாதங்களின் முன்னர் இவர்கள் இங்கு கொண் வரப்பட்டு, உறுப்புகள் எவ்வாறு பகிர்ந்துகொள்ளப்பட லாமென்பதுபற்றி நுணுக்கமான ஆய்வுக்குட்படுத்தப்பட டார்கள்.





குழந்தைகள் சத்திரசிகிச்சை நிபுணர் எட்வர்ட் கீலி தலை மையிலான குழு, ஈரலையும் பின்குடல் பகுதியையும் இருவ டையேயும் சமமாகப் பிரித் தது. ஒவ்வொரு செயற்கைக்கால்க இவர்கள் ஒவ்வொருவருக்கும் தேவை.


சாதாரண வாழ்வுக்கு அவர்களை வழிப்படுத்தும் நீண்ட வைத்திய நட வடி கைகளில் இது முதல் கட்டம் என் டாக்டர் கீலி தெரிவித்துள்ளார். ஆரோ கியமானவர்களாக அவர்கள் வாழும் ந பிக்கை தமக்கிருப்பதாகவும் அவர் தெ வித்திருக்கிறார். சத்திரசிகிச்சையில் பிரி கப்பட்ட உடற் பகுதிகளை, பிளாஸ்ரி சத்திர சிகிச்சையிற் போன்று, அவர்களி சொந்த தோலினாலேயே மூடச் செய் ருக்கிறார்கள். இத்தாலி அரசாங்க இவர்களுக்கான வைத்திய செலவ ஏற்றிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



## 25 வீத சலுகை!

நீங்கள் 'நாழிகை' சந்தாதாரராகவிருந்தால்
கன்டா டிஸ்க் நிறுவனத்தின்
CD ஒவ்வொன்றின் விலையிலும் 25 வீதம் சலுகை உண்டு.
கன்டா டிஸ்க்கின் பிரத்தியேகமான
, பிரபல இசைக் கலைஞர்களி ன்
பக்திப் பாடல், கர்நாடக இசைப் பாடல்CD க்களை
அஞ்சல் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ளலாம்.

**CANDA DISC**
**APT.1701**
**2737 KIPLING AVENUE , ETOBICOKE M9V 4C3**
**CANADA**

படிப்பகம்

www.padippakam.com



# ஜோதியுள் கலந்தது ஜோதி

காஞ்சித் தவமுனிவர் காமகோடி பீடாதிபதி பரமாச்சார்யாள் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேக ரேந்திர சரஸ்வதி சுவாமிகள் தம் நிலவுலக அவதார வாழ்வை இனிதே நிறைவேற்றிக் கொண்டு தம் யதாஸ்தமான அன்னை காமாக்ஷியின் திருவடிகளில் இணைந்து விட்டார்கள். ஜோதியுள் கலந்து நிறைவெய்தி விட்டது ஜோதி.

ஆதி சங்கரர் மரபில் வந்த இந்த ஜோதி சங்கரர், இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஞானபுருஷர். நடமாடும் தெய்வமாக நம்மிடையே வாழ்ந்து, பிரார்த்தனையாலும் மோனத் தவத்தாலும் உலகம் வாழ்வாங்கு வாழ ஆன்மீக அருட்செல்வத்தை வாரி வழங்கிய பெருந்தகை. ஏறத் தாழ ஒரு நூற்றாண்டுக் காலம் அருள் மழை பொழிந்த ஞானச் செம்மல். துறவறம் எனும் தூய அக்னியில் புடம்போட்ட காஞ்சன ஜோதி. அந்த ஜோதி ஒரு நிரந்தர ஜோதி. வானுலகினின்று என்றும், என்றென்றும் இந்த நிலவுலகுக்கு ஆன்ம வழி காட்டும் அமர ஜோதி.

பரம்பொருளை நினைவூட்டப்
படர்ந்த திருப்பாதம்
பரம்பொருளே பாரதத்தில்
படரவந்த பாதம்
சிரங்குவிவார் சிந்தையுள்ளே
சிலிர்க்கின்ற பாதம்
செம்மைநெறி காட்டியருள்
சேவிக்கும் பாதம்
எம்மானே நின்பாதம்
'இரண்டல்ல' வேதம்!

வேதமும், வேத மெய்ப்பொருளாய் நின்ற பாதமும் உலகைக் காக்கும்.

– எஸ். சங்கரமூர்த்தி





படிப்பகம்

www.padippakam.com





பில் கிளின்டன் அமெரிக்காவின் ஜனாதிபதியாகி 10 மாதங்களில் சீன தலைவர் ஜியாங் ஸெமின், மற்றும் 15 ஆசிய, பசிபிக் நாடுகளின் தலைவர்களுடன் அமர்ந்து, புதிய உலக பொருளாதார வரைபடமொன்றை வரைய ஆரம்பித்தார். அதற்குச் சில மணித்தியாலங்களுக்கு முன்னதாகத்தான், எதிர் பார்த்ததற்கு மாறாக, உலகின் மிகப் பெரிய வர்த்தகக் கூட்டான வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் (Nafta-North American Free Trade Agreement) அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ இணைவுக்கு காங்கிரசின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார். ஜனவரி முதலாந் தேதி ஐரோப்பிய பொதுச் சந்தையும், பின்னர் மாஸ்ரிக் உடன்படிக்கையின்கீழ் ஐரோப்பிய ஒன்றியமும் உருவானதையடுத்து, ஏனைய வர்த்தகக் கூட்டுகள், ஆசிய பசிபிக் பொருளாதாரக் கூட்டு (APEC), கரிபியன் நாடுகள் கூட்டு என்பனவும் வலுவடைய ஆரம்பித்தன. இவை அனைத்துக்கும் மேலாக, புதிய 'கற்' (General Agreement on Tarrifs and Trade-GATT) அமைப்பை உருவாக்குவதில் ஏழு ஆண்டுகளாக இழுபட்ட சர்ச்சை உன்னதமான ஓர் உடன்பாட்டை அடைந்தது. ஜெனிவாவில் 117 நாடுகள் டிசம்பர் 15 இல் இதனை ஏற்றுக்கொண்டன.

# 93 இல் உலகம்

## அது சொல்லும் செய்தி என்ன?



மாலி

5000 பக்கங்கள் கொண்ட இந்த உடன்படிக்கை வர்த்தக பரவலாக்கலில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும்.

வறிய நாடுகள் பல இதனால் தமக்கு என்ன பயன்? என்று வினவுவது ஆச்சரியமல்ல. 'அதிகம் எதுவும் இல்லை' என்பதே அவை பலவற்றுக்கான பதில். ஏற்கனவே அரசியலில் மட்டுப்படுத்தப்பட்ட ஆபிரிக்கா, முன்னரைவிட மேலும் பொருளாதாரத்திலும் மட்டுப்படுத்தப்படலாம். ஆபிரிக்க நாடுகள் அனைத்துமிணைந்த ஒரு பொதுச்சந்தைக்கான பாரிய திட்டம் 2020 இல் எதிர்பார்க்கப்பட்டாலும் அது வெறும் எழுத்துருவாகவே இருக்கிறது.

ஆபிரிக்காவின் எதிர்காலம் பற்றிய பெரும் நம்பிக்கை, நவம்பர் 17ஆம் தேதி யோகனஸ்பர்க்கில் கைச்சாத்தான நகல் இடைக்கால அரசியல் அமைப்பில் அமைகிறது. சுமார் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்த பேச்சுவார்த்தைகளின் பயனான அது, இன ஒதுக்கலை ஒழித்து, தென்னாபிரிக்க வரலாற்றில் முதன்முதலாக ஒரு வருக்கு ஒரு வாக்குக்கும் இட்டுச் செல்கிறது. இந்த ஆண்டு நடைபெறும் பொதுத் தேர்தலில் கறுப்பினத்தவர்கள் முதன்முதலாக தென்னாபிரிக்காவின் அதிகார பீடத்தில் அமர

### ஆக, இது 1993



சமாதானம்? நோபல்பரிசுபெறும் மன்டேலா, டி கிளார்க்

யெல்சின் பாராளுமன்ற முற்றுகை

**1993** மற்றொரு பொல்லாத ஆண்டு என்றே எழுதப்பட்டும். ஆனால், அதன் நல்ல செய்திகள் முதலில் குறிப்பிடப்பட்டாக வேண்டும். இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனர்களுடன் கை குலுக்கியதும், கம்போடியாவில் அமைதியும் ஜனநாயகமும் ஏற்பட்டதும், தென்னாபிரிக்காவில் 21 கட்சிகள் ஜனநாயகத்துக்காக கையொப்பமிட்டதும், வட அயர்லாந்தில் தடைபட்டிருந்த அரசியல் நடவடிக்கைகளில் நம்பிக்கையூட்டும் நகர்வுகள் ஏற்பட்டதும் 1993இல் ஏற்பட்ட முக்கியமான மாற்றங்கள், நல்ல செய்திகள்.

'கூடாத' செய்திகள், அங்கோலா, பொஸ்னியா, சோமாலியாவிலும், முன்னைய சோவியத் யூனியனின் பகுதிகளிலும் ஆண்டு முழுவதும் தொடர்ந்த உயிரிழப்புக்கள். பனிப் போருக்குப் பின்னர் உலகம் தொடர்ந்து சின்னாபின்னப்பட்டு, உருவாகும் புதிய தலைமைகளுக்கான ஆதரவுகள் சொற்பமாகவுமே காணப்பட்டன.




படிப்பகம்

வாய்ப்பு ஏற்படுகிறது. ஆண்டு முழுவதும் தொடர்ந்த வன் செயல்கள், போராட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தவரான கிறிஸ்ஹானி கொலை, நெல்சன் மண்டேலாவின் மிக நெருங்கிய நண்பரும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவருமான ஒலிவர் தம்போவின் மரணம் ஆகியவற்றையடுத்து, ஆண்டு இறுதியில் இந்த உடன்பாடு ஏற்பட்டது.

உலகின் பார்வை இப்போது ஆசியாவை, குறிப்பாக, கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவை நோக்கியே தீவிரம டைகிறது. 90களின் ஆரம்பம் வரை ஐரோப்பா உல கின் அரசியல், பொருளாதார நடவடிக்கைகளின் மையமாக நீண்ட காலம் காணப்பட்டது. பனிப் போர் முடிவும், பொருளா தார தளர்வும் அந் நிலையை முற்றாக மாற்றிவிட்டன. ஐரோப் பாவில் பொருளாதார வளர்ச்சி அநேகமாக ஸ்தம்பித்துவிட்டது. பெரிய பொருளாதார நாடான ஜெர்மனி அதன் கிழக்குப் பகுதி யைச் சமாளிக்க கஷ்டமுறுகிறது. அங்கு அதிகரிக்கும் சிறு பான்மை இனத்தவர் மோதல்கள் - பிரான்சிலும்கூட - வளர்ச் சியைப் பாதிக்கின்றன. இத்தாலி, ஊழல் அவதூறுகளின் உச்சத்துக்குச் சென்றது. எங்குமே வேலையில்லாப் பிரச்னை. ஸ்பெயினில் அது 20 வீதத்துக்கும் அதிகமாகியது. ஐரோப்பிய ஒன்றியம் என்ற 12 அங்கத்துவ நாடுகளிடையே நெருங்கிய இணைப்பு என்பது எழுத்தில் மட்டுமே. ஸ்திரமின்மையும், முரண்பாடுகளுமே அதிகரிக்கின்றன.

அமெரிக்கா, முன்னர் அக்டோபரில் கூறியதுபோலவே, தனது முன்னுரிமைகள் இனி அத்லாந்திக்குக்கு அப்பால் அல்ல, பசிபிக்குக்கு அப்பால், சீனா மற்றும் 'சிறுத்தைப் பொருளா தாரம்' என்று அழைக்கப்படும் அப்பகுதி நாடுகளுடனேயே என்று சொல்ல ஆரம்பித்தது, ஒருவித அதிர்ச்சியையே ஏற் படுத்தியிருக்கிறது.

மார்ச்சில் சீனா மேலும் சந்தைப் பொருளாதாரத்தையே நோக்கியதான தனது எண்ணத்தை மீள உறுதிப்படுத்தியது. வெளிநாட்டு மூலதனத்துடனான நிறுவனங்கள் பல ஏற்கனவே சீனாவை முதலாளித்துவ பாதையை நோக்கி வெகு தூரம் அழைத்துவந்துவிட்டன. சீனாவின் சில கரையோர மாகாணங் களில் பொருளாதார வளர்ச்சி மிகத் தாழ்நிலையிலிருந்து,



ஏறத்தாழ 20 சத விகிதத்தை அடைந்திருக்கிறது. இதில் ெ
மளவு, இன்னமும் மூன்றரை ஆண்டுகளில் சீனாவிடம் திரு
கையளிக்கப்படவிருக்கும் ஹொங்கொங் வழியாக வந்த
யேயாகும்.

கிழக்காசியாவில் ஹொங்கொங் அபிவிருத்திக்கான
மாக வளர்ந்துவந்தது. கவர்னர் கிறிஸ் பற்றனின் ஜனநா
நடவடிக்கைகள், 1997 நடுப்பகுதியில் அது கையளிக்கப்ப
பின்னரும் பாதுகாக்கப்படவேண்டும் என்பது தொடர்
ஆண்டு முழுவதும் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளில் அர
கத்தினரும் பிரிட்டிஷாரும் பீஜிங்கில் ஈடுபட்டனர். 1995
தெரியப்படும் கவுன்சிலர்கள் 4 ஆண்டு காலத்துக்கும், அதா
97இல் இறைமை கையளிக்கப்பட்டபின்னரும் தொடர்
பதவியில் நீடிக்கவேண்டும் என்பது பிரிட்டனின் கோரிக்
17 சுற்றுப் பேச்சுக்களின் பின் நவம்பரில் அவை ஸ்தம்பி
அடைந்தன.

இப்பொழுது உடல் நலம் நன்கு பாதிப்படைந்திருப்பதா
கருதப்படும் 89 வயது சீனத் தலைவர் டெங் ஷியாவொ
நிலைமை தொடர்பான வதந்திகளில் ஹொங்கொங் தொங்
கொண்டிருக்கிறது. நிலைமையை மக்கள் மாவோவின் இ
நாள்களுடன் ஒப்பிட்டு, பதவிக்கான போட்டி தவிர்க்க
லாது ஏற்பட்டிருப்பதாக யூகிக்கிறார்கள்.

ஜியாங் ஸெமின் - கிளின்டன் சந்திப்பு உள்நாட்ட
அவரின் பலத்தைக் காண்பிப்பதுடன்,
தையை நோக்கிய தீர்மானம் மேற்குல
திருப்திப்படுத்துவதாகவும் இருக்கிறது. சீ
கம்யூனிசத்தை குழிதோண்டி புதைத்தே வ
றது. ஆனால், சோவியத் யூனியனை
முற்றி லும் வேறுபட்டவிதமாக, ஒழுங்க
விதத் தில் அதனைச் செய்கிறது.

உலகம் 90களின் நடுப்பகுதியை நோக்
சென்றுகொண்டிருக்கையில், சோஷலி
எங்குமே ஓய்வைப் பெறுகிறது. இந்தியா
நரசிம்மராவ் அரசு சட்டங்களைத் தளர்
ரூபாயை முற்றாக மாற்றக்கூடியதாகச் செ
தும் சர்வதேச மூலதனத்துக்கு இந்தியா மி
நாட்டமுள்ள நாடாக ஆகியுள்ளது. சீனாவு
அடுத்தபடியாக பொருளாதாரத்
இரண்டா வது இடத்தை நோக்கி இந்தி
செல்வதாக மேலைத்தேய பொருளாத
விமர்சகர்கள் பேச ஆரம்பித்திருக்கிறார்
கொக்கா கோலா இந்த மாற்றத்த
அடையாளம். குளிர் பான வர்த்தகத்
இந்தியாவின் மிகப் பெரிய தான பார்
எக்ஸ்போர்ட் (Parle Exports) உடன்
உடன்படிக்கை, அந்நிய செலா வ
விதிகளின்கீழ் கொக்காகோலா
தியாவைக் கைவிட்டு 16 ஆண்டுகள
பின் ஏற்பட்டிருக்கிறது.



www.padippakam.com

எங்கு பார்த்தாலுமே 1993இல் ஒரே நடவடிக்கைதான். ந்தைப் பொருளாதாரத்தை நோக்கி திரும்பிய பயணம், ளர்ச்சியான - எச்சரிக்கையான சிந்தனை ஒருமைப் ாட்டையும், வாழ்க்கை முறையில் ஒரு தரப்படுத்தலையும் ாட்டுவதாகத் தெரிகிறது. கொள்கைகளை அரசாங்கங்கள் ப்படிப் பெயரிட்டாலும், அவற்றின் பொருளாதாரக் குறியீடு புநேகமாக ஒன்றே. சோஷலிசம் ஏதோவிதத்தில் காலப்போக் ல் ஒரு மாற்றாக அமையாதா என்பதை இன்னமும் சொல்லி ிட முடியாவிட்டாலும், தற்போதைக்கு வேறு மாற்று இல்லை.

வறிய நாடுகளுக்கும், செல்வந்த நாடுகளிலுள்ள வறிய மக்க ளுக்குமான எதிர்பார்ப்புகள் மங்கலாகவே இருந்தன. பெரும் ஐரோப்பிய தலை நகரங்களில் வீடற்ற மக்கள் பெருமளவிலான எண்ணிக்கையினர் பனிஉறையும் வீதிகளிலே உறங்குகிறார் கள். இது, 60, 70களிலே அநேகமாக கண்டிருக்க இயலாத ஒன்றாகும்.

இந்த ஆண்டில் பெரும் அரசியல் முகங்கள் பெரும்பாலும் மாறவில்லை. வெள்ளை மாளிகையில் கிளின்டன் புத்து ணர்வூட்டும் ஒரு புது முகம். ஜனவரியில் அவருடைய வருகை 1960இல் கென்டியின் வருகைபோல இல்லாவிட்டாலும் 12 ஆண்டு றேகன்-புஷ் காலத்தை முடிவுக்குக் கொண்டுவந்தது. அத்துடன், இரண்டாம் உலக யுத்தத்தின்போது பிறந்தே இருக் காத ஒரு ஜனாதிபதியின் வருகை நிச்சயமாக ஒரு புதிய சகாப் தத்தை உருவாக்கும். அநேகமாக எங்கும் நரைவிழுந்தவர்களே தலைமை வகிக்கும்போது, பூரிப்பும், இளமையும் மிக்க அவரது வருகை வரவேற்கத் தக்கதாகியது. தோல்வியை நோக்கியே அவர் செல்வார் என்று அரசியல் விற்பன்னர்கள் ஆரூடமும் சொல்ல ப்பட்டார்கள். நிதானமும், அநுபவமும் அற்றவர் என்று அவர்கள் கூறினார்கள். எங்குமே குறித்த நேரத்துக்கு அவர் செல்லாதது பலரையும் விசனமுறவைத்தது.

இராஜாங்க செயலாளராக வாரன் கிறிஸ்தோபர், பாது காப்பு செயலாளராக லெஸ் அஸ்பின் போன்று, பல முதிர்ந்த வலதுசாரியினரை தனது அரசாங்கத்துக்குத் தேர்ந்தெடுத்தார். சில தினங்களிலேயே அவ ரது முதல் சீர்திருத்த நடவடிக் கையாக ஆயுத படைகளில் ஓரினச் சேர்க்கை யினர் சேர்வதற்கான தடையை நீக்கி, உள்நாட்டில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தி னார். இராணுவ அதிகார பீடம் உடனேயே அவர் முடிவை வாபஸ்பெற நிர்ப்பந் தித்தது. வெளிநாட்டில் பொஸ்னியாவிலும் கிளின் டன் பலாத்கார நடவடிக் கைக்கு பயமுறுத்திவிட்டு பின்னர் படைகளை வாபஸ் வாங்கினார்.

சோமாலியாவில் ஐ.நா. படையைச் சார்ந்த அமெரிக் கத் துருப்புக்கள்மீதான தாக் குதல் ஜெனரல் முகமட் அயிடீட்டைக் கொலை செய் யும் அல்லது கைதுசெய்யும் முயற்சியின் விளைவான தென்ற பழி அவரை அடைந் தது. பின்னர் கெயிட்டியி லும் ஜீன் பேனாட் அரிஸ் ரைடை மீள நிலைநிறுத்த முனைந்து அதிலும் பின் வாங்க நேர்ந்தது.

வெள்ளை மாளிகையில் யாசர் அரபாத்தும் யிற்சாக் றாபி னும் சமாதான உடன்படிக்கையில் கை குலுக்கியபோது, கிளின் டன் அதற்கான உரிமையை அதிகம் கொண்டாட முடிய வில்லை. ஏனெனில், அவ்வுடன்படிக்கை நோர்வேயில் பலமாத கால இரகசிய பேச்சுவார்த்தைகளின் பின்பு ஏற்பட்டதாகும். ஜனவரி 3ஆம் தேதி மாஸ்கோவில் ஆயுதக் குறைப்பு ஒப்பந்த கைச்சாத்துடன் 93 ஆம் ஆண்டு ஆரம்பமானது. அமெரிக் காவும் ரஷ்யாவும் அணு ஆயுதங்களில் மூன்றில் இரண்டு பங்கை நிர்மூலமாக்க அந்த ஒப்பந்தம் வகைசெய்தபோது, மீண்டும் வேதாளமாக வட கொரியா அங்கு தோன்றியது. விசேட நேரடி பரிசோதனை செய்யும், சர்வதேச அணுசக்தி நிறுவன தீர்மானத்தையடுத்து, அணு ஆயுத உற்பத்தி தடை ஒப் பந்தத்திலிருந்து வாபஸ்பெறப் போவதாக அதன் அரசாங்கம் மார்ச் 12 இல் அறிவித்தது. தடைகளை விதிக்கப் போவதாகவும், மீள ஆலோசிக்கும்படியுமான மிரட்டல்களுக்குச் செவிமடுக் காது வட கொரியா உறுதியாக நின்றது. பாரதூரமான விளைவு களைச் சந்திக்க நேரும் என்று கிளின்டன் எச்சரித்தார்.

உள்நாட்டில் கிளின்டன் மீதான முதலாவது சோதனை, பதவிக்கு வந்த ஆறு வார காலத்தில், ரெக்ஸாஸ் வாகோவில் மத குழு ஒன்றின் தலைமையக முற்றுகையின்போது ஏற்பட்டது. 51 நாள் முற்றுகையின் பின் சட்டமா அதிபர் ஜனெற் றேனோவின் தாக்குதல் உத்தரவை அடுத்து, தலைவர் டேவிட் கொரேஷும் 70 சிஷ்யர்களும் கட்டடத்தில் பற்றிய தீயில் கருகி மாணடார்கள். றேனோவின் நடவடிக்கையை ஆரித்த கிளின் டன், விசாரணை ஒன்றுக்கு உத்தரவிட்டார்.

சந்தோஷமான ஆரம்பமாக இல்லாவிட்டாலும் வருட இறுதியில் கிளின்டன் வலுவடைந்திருந்தார். முதன்முறையாக மக்களுக்கு ஓர் ஒழுங்கான மருத்துவ திட்டத்தை கொண்டுவந்து, அமெரிக்காவில் பெரும் சமூக மாற்றமொன்றை பிராங்ளின் ரூஸ்வெல் காலத்துக்குப் பின்னர் ஏற்படுத்தினார். திறமை வாய்ந்த அவரது மனைவி ஹிலறியை அதற்குப் பொறுப்பாக நியமித்தார். தனிப்பட்ட வர்கள் துப்பாக்கிச் சொந் தக்காரராக இருப்பதைத் தடுக்கும் சட்டத்துக்கு காங் கிரசின் அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறார்.

அமெரிக்கா தூர கிழக்குக்கு வருவதையிட்டு எல்லோரும் மகிழ்ச்சி கொள்ளவில்லை. அப்பி ராந்தியத்தை ஆளுமைப் படுத்த அமெரிக்கா முயல் வதாக தெரிவித்து மலே சிய பிரதமர் முகமட் மகத் திர் சீற்றில் மாநாட்டை பகிஷ்கரித்தார். மகத்திர் அபிவிருத்தியுறும் உல கின், 90களின் குரலாக ஆகியிருக்கிறார். பனிப் போருக்குப் பின்னரான உலகுபற்றி, குறிப்பாக, மத்தியதர, வறிய நாடுக ளிடையே வளர்ந்துவரும் சுமுகமின்மையை அவர் பிரதிபலித்தார். பல தட






படிப்பகம்

வைகளில் ஐ.நா. நிறுவ னம் அமெரிக்காவின் நலன்களுக்குப் பயன் படுத்தப் படுவதாக பலரும் கருதினார்கள். நியூ யோர்க்கில் அமெரிக்காவின் செல்வாக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையிலும், பொதுச்சபைத் தீர்மா னங்களிலும் இருக்கிறது. அதேவேளை யுத்த முனைகளில் ஆதிக்கமான அமெரிக்க நிபுணத் துவமும், உபகரணங்களும் பலதடவைகளில் ஐ.நா. நடவடிக்கைக ளாகவே கருதப்பட்டாலும் அவை உண்மையில் அமெரிக்க நடவடிக்கைகளே. அமெரிக்கா ஐ.நா. நிறுவனத்தைத் தனது சொந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்து தற்கான ஒரு கருவியாகவே பயன்படுத்தியது.





பனிப்போர் முடிவின் பின் ஐ.நா. அதன் சுயமாக வந்தது. அதன் தேவை பெரிதும் தேவைப்பட வில்லை. 1993 இறுதியில் உலகம் முழுவதிலும் நெருக்கடிகளை ராஜதந்திர ரீதியிலோ அல்லது ராணுவ, அமைதி காப்பு நடவடிக்கைகள் மூலமோ தீர்த்துவைப்பதில் ஈடுபட்டது. 1945இல் எதற்காக இது நிறுவப் பட்டதோ அதனைச் செய்ய இப்போது அது முயல்கிறது. ஆனால் இப்போதுள்ள பிரச்னை அதன் சுமை கூடிவிட்ட மையே.

மற்றையது பாதுகாப்புச் சபை நிலைமை. 1945இலிருந்து மாற்றமடையாத, நிரந்தர உறுப்பினர்களின் 'வீட்டோ' உரிமை அவர்களுக்கு பூரண கட்டுப்பாட்டு அதிகாரத்தை அளிக்கிறது. ஜப்பான், ஜெர்மனியும் மற்றும் அபிவிருத்தி நாடுகளும், அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகளின் இந்த ஏகபோகம் ஒழியவேண்டும் என்று விரும்புகின்றன. இந்தியா, பிரேசில், இந்தோனேசியா அதில் அங்கம் வகிப்பதற்கான உரிமையைக் கோருகின்றன. இதேவேளை, கம்போடியாவில் அதன் வெற்றி உற்சாகமானது. எதிர்பார்த்தற்கு மாறாக, ஐ.நா. மேற்பார்வையிலான தேர்தல்கள் மேயில் அமைதியாக நடந்தேறின. 20 கட்சிகள் பங்குபற்றிய இத் தேர்தலில் 90 சத வீதமானோர் வாக்களித்தனர். நெருக்கமான முடிவுகளையடுத்து ஒருவாரகால அரசியல் முன்னெடுப்புக்களைத் தொடர்ந்து இளவரசர் சிஹானுக் அதிகார பகிர்வு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி, செப்டம்பரில் முடிசூடினார். பொல்பொட்டின் கமர் றூ, தேர்தல் நடவடிக்கைகள் எதிலும் தலையிட முடியவில்லை. அதனைத்தொடர்ந்து அரசாங்கத்தில் இணைய அவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும், அதன் படைகள் வடக்கு எல்லைப் பகுதிகளில் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே கருதப்பட்டதால் சிஹானுக் தனது எண்ணத்தைப் பின்னர் மாற்றிக்கொண்டார்.

வருட முடிவில் ஐ.நா. படைகள் வாபஸ் பெற ஆரம்பித்தன. ஆனால், நாம் பென்னில் ஒரு நடவடிக்கை வியப்பிலாழ்த்தியது. புதிய பாராளுமன்றத்தில் அதன் உறுப்பினர்களின் முதலாவது நடவடிக்கை தமது சொந்த வேதனத்தை அதிகரிப்பதாக இருந்தது!

தெற்கு, தென்கிழக்கு ஆசியாவில் முன்னைய சோவியத் யூனியன், ஐரோப்பா ஆகியவற்றுக்கு மாறாக, அமைதியும், உறுதியும் இந்த நூற்றாண்டில் எப்போதையும்விட பெரிதும் நிலவியது. சில இடங்களில், குறிப்பாக பர்மாவிலும், மிகப் பாரதூரமான அளவில் இலங்கையின் வட பகுதியிலும் தீவிரவாத இயக்கங்களின் செயல்பாடுகள் தொடர்ந்தன.

இலங்கையில் தமிழ்ப் பிரிவினைவாதிகளுடனான மோத முன்னரெப்போதையும்விட முனைப்படைந்தது. இராணு கடற்படைத் தளங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண் தாக்குதல் அரசாங்கத்துக்குப் பலத்த சவாலை ஏற்படுத்திய எதிர்க்கட்சித் தலைவர் அத்துலத்முதலி, ஜனாதிபதி பிரேமத ஆகியோரது கொலைகள் பதட்டத்தை அதிகரித்தன. பிரத டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். விடுதலை புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரா சதாசிவம் கிருஷ்ணகுமார் மற்றும் சிலருடன் படகில் சென் கொண்டிருந்தபோது இந்து சமுத்திரத்தில் இந்திய கடற் பல யினரால் சுற்றிவளைக்கப்பட்டபோது படகைத் தகர்த் மாண்டார்.

பாகிஸ்தான் நெருக்கடியுடனேயே ஆண்டை ஆரம்பித்த பிரதமர் நவாஸ் சரீப், ஜனாதிபதி குலம் இஸாக் கானால் பத விலக்கப்பட்டு, பின்னர் நீதிமன்றத்தால் மீண்டும் சிறிது கால பதவியில் அமர்ந்தார். உள்நாட்டுக் குழப்பங்களும், எதிர்க்கட்ச தலைவி பெனாசீர் புட்டோவின் தலைமையிலான எதிர் நடவடிக்கைகளும் கடைசியில் புதிய தேர்தல் ஒன்றுக்கு வ புறுத்தியது. கான், சரீப் ஆகியோர் ராஜிநாமா செய்ய, உ வங்கி முன்னாள் உப தலைவரான மூவின் குரேஷி இடைக்கா அரசு ஒன்றை நடாத்தினார்.

மிகுந்த இராணுவ கண்காணிப்புடன் நடந்த தேர்தல், ப ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கு நடைபெற்ற முதலாவ நேர்மையான தேர்தல் என்று கூறப்பட்டது. ஆனாலும், ப நெருக்கமான முடிவுகளால் சிறிய கட்சிகளுடனான பேர களின் இறுதியில் புட்டோ பதவியேற்றார். அவரது அரசிய சகா ஜனாதிபதியாகத் தெரியப்பட்டதில் புட்டோ தனது ப வியை பாதுகாப்பானதாக ஆக்கிக் கொண்டார். நாட்டில் ஸ்திரத் தன்மை அதன் பின்னர் ஏற்பட்டது. காஷ்மீரிலும் கூ அமைதிக்கான ஒரு நம்பிக்கை, புட்டோ இந்தியாவுட பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பித்ததிலிருந்து ஏற்பட்ட காஷ்மீரில் பள்ளிவாசல் இராணுவ முற்றுகை அமைதிய முடிந்ததையடுத்து இந்திய பிரதமர் நரசிம்மராவ் சில விட்டு கொடுப்புகளுக்கு தயாராகவிருப்பதாகத் தெரிந்தது. தீவிரவ திகளின் மகுதி ஆக்கிரமிப்பு இந்தியா முழுவதும் பதட் நிலையை ஏற்படுத்தியிருந்தது.

ஆபிரிக்கா தொடர்ந்தும் அதி கலவரங்கள் மிகுந்த கன டமாக விளங்கியது. மொஸாம்பிக்கில் ஒரளவு சமா னம் ஏற்பட்டு, அரசும் றெனமோ தீவிரவாதிகளு தேர்தலுக்கு உடன்பட்டிருக்கிறார்கள். அங்கோலாவில் மு அளவிலான உள்நாட்டு யுத்தம் ஆண்டு முழுவதுமே தொட தது. சிவிம்பியின் யுனிற்றாவுக்கும் லுவாண்டா அரசுக்கு



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

யே ஐ.நா.வின் சமாதான பேச்சு முயற்சிகள் தொடர்ந் து ால்விகளையே கண்டன. கிளின்டன் லுவாண்டாவுக்கு மெரிக்க ஆதரவை அளித்து டொஸ் சாந்தோஸ் அரசை அங் ரித்ததும் யுனிற்றா படைகள் பதில் தாக்குதலில் ஈடுபட்டன. லட்சம் மக்கள் இந்த யுத்தத்தில் மாண்டதாக சொல்லப்படு து. மருத்துவ கண்காணிப்புகள் அநேகமாக அற்றே போய் ட்டதில் ஏற்பட்ட அநுபவிப்புகள் அநந்தம். வல்லரசுகளின் விடப்பட்ட விளையாட்டுப் பொருள்களாக அங்கோலா 70, களில் ஆபிரிக்காவின் மிகப் பாதிப்புக்குள்ளான நாடாக ஆகி . சுமார் 30 ஆண்டு காலம் அது யுத்தத்திலேயே மூழ்கி ளது.

வட, தென் சூடானிடையே உள்நாட்டு யுத்தம் பரவலாக பீரியாவிலிருந்து சியராலியோனுக்குள் பரவியது. புருண் பில் ஒருசில வாரங்களுக்கு ஏற்பட்ட ஜனநாயகம் புதிதாகத் ரியப்பட்ட ஜனாதிபதி மெல்சியோர் கொலையையடுத்து ஸ்தமித்தது. மீண்டும் ஏற்பட்ட வன்செயல்களில் லட்சக் க்கான மக்கள் அண்டை ருவாண்டாவில் தஞ்சமடைந்தனர். பிரிக்காவின் ஏனைய இடங்களில் பலகட்சி அரசியலை ாக்கிய நடவடிக்கைகள் இடம்பெற்றன. லெசொத்தோவில் ாணுவ ஆட்சியாளர்கள் மீண்டும் முகாம் திரும்ப, முதிர்ந்த ரசியல்வாதியான என்சு மெகெல் பாராளுமன்ற ஆசனங்கள் னைத்தையுமே வென்றார். கானாவில் எதிர்க்கட்சிகள் ஜனாதி தேர்தலை பகிஷ்கரிக்க, இராணுவ தலைவர் ஜெரி ாலிங்ஸ் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதி க பதவியில் தொடர்ந்தார். செசெல்ஸில் ஜனாதிபதி அல்பேட் ன் பலகட்சி அரசியல் நாடாக அதனை மாற்றி, யூலை தேர் ில் வென்றார்.

எதியோப்பியா பல ஆண்டு குழப்பங்களின் பின் அமை யை நோக்கியது. மே 24இல் உருவான புதிய எரிற்றீ அரசை னடியாகவே அது அங்கீகரித்தது. எரிற்றீ மக்கள் ஒரு மாதத் ்கு முன்னதாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றில் சுதந்திரத் ்காக மிக அதிகப்படி வாக்கை அளித்திருந்தனர்.

ஆபிரிக்காவில் மிகப் பெரும் ஏமாற்றத்தை அடைந்தது நஜீரியா. நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட சிவிலியன் ட்சி 93 இல் ஏற்படும் என்று இராணுவ ஆட்சியாளர்கள் அறி த்திருந்தனர். 1989இல் ஜனாதிபதி இப்ராஹிம் ஏற்படுத்திய ்கலான நடைமுறைகள், 1992 இல் தேர்தலுக்கு வழிவகுத்தது. ர்தலில், வர்த்தகரான மசூட் அபியோலா வெற்றிபெற்றுள் தாக அறிந்ததும் அத் தேர்தல் செல்லுபடியற்றதென அறிவிக் ்பட்டது. அதைத் தொடர்ந்த குழப்பங்களையடுத்து இப்ராஹிம் வியிறங்கி, இராணுவ அதிபரிடம் ஆட்சியை ஒப்படைத்த போது, 94 பெப்ரவரியில் தேர்தலுக்கு உறுதியளிக்கப்பட்டது. பின்னர், நவம்பர் 17இல் மற்றொரு இராணுவ ஜெனரல் சனி அபசா ஆட்சியைப் பொறுப்பேற்றதும் நான்கு ஆண்டுகளாக ஏற்படுத்தப்பட்டு வந்த ஜனநாயக நடவடிக்கைகள் அனைத்தும் அங்கு முறியடிக்கப் பட்டன. அன்றைய தினம்தான் தென்னாபி ரிக்காவில் 21 கட்சிகள் முதன்முறையாக அங்கு இன ஒதுக்கலை ஒழித்து, ஜனநாயக நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டன. நைஜீரிய அரசாங்கங்கள் ஆபிரிக்காவில் இந்த மாற் றம் ஏற்பட சர்வதேச அரங்கில் எப்போதுமே தமது ஆதரவை அளித்து வந்தன.



ஆபிரிக்காவில் அரசியல் தலைவர்கள் தம் நற் பெயருக்காக பெரிதும் முயன்றபோது, வேறுபல இடங்களில் தலைவர்கள் தம் நற் பெயரை இழந்தார்கள். இத்தாலியில் கடந்த 20 ஆண்டு களாக பிரபல்யமடைந்திருந்த பெயர்கள் உச்சமான ஊழலில் அம்பலமாயின. பெரும் அரசியல் வாதிகள், வர்த்தகர்கள் பலர் அதில் சிக்கினர். முதன்முறையாக 'மாபியா' கூட அச்சுறும் விதத் திலான மிகப் பெரும் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன. நவம்பர், டிசம்பரில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர் தல்களில் இரண்டாம் உலக யுத்தத்திலிருந்து அதிகாரத்திலிருந்த கட்சிகள் மக்களால் ஒதுக்கப்பட்டு, முன்னைய கம்யூனிஸ்டு களும் புதிய பாசிஸ்டுகளும் வெற்றிபெற்றார்கள்.

யப்பானிலும் பழம் அரசியல் காவலர்கள், டிசம்பரில் காலமான முன்னாள் பிரதமர் தனாக்கா உள்பட, ஓரப்படுத் தப்பட்டனர். 35 ஆண்டுகளின்பின் லிபரல் ஜனநாயகக் கட்சி ஆகஸ்டில் பதவி இழந்தது. மொறிகினோ கொசோகாவா தலைமையிலான ஏழு கட்சி கூட்டு ஆட்சியை ஏற்றிருக்கிறது. புதிய அமைச்சரவையில் ஒருவர் மாத்திரமே முன்னர் பதவி வகித்தவர். கொசோகாவா வித்தியாசமான - கவர்ச்சியான ஒரு நடை முறையைக் கொண்டிருக் கிறார்.



யுத்தத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவின்போது யப்பானில் யுத்தத்தில் உயிரி ழந்தவர்கள் நினைவு மண்ட பத்துக்கு அவர் செல்ல வில்லை. மாறாக, மன்னர் கலந்துகொண்ட ஒரு வைப வத்துக்குச் சென்று, யுத்தத் தில் உயிரிழந்தவர்களுக்கும், 'ஆசியாவின் அண்டை நாடு களிலும் உலகின் பல பாகங் களிலும் வாழும் அவர்க ளின் உறவினர்களுக்கும்' தமது அநுதாபத்தைத் தெரிவித்தார். ஆசியாவின் மற்றைய பல நாடுகளைப் போலன்றி, வர்த்தக நெருக்கடி மிகுந்த ஒரு யப்பானையே கொசோகாவா பொறுப்பேற்றார். யுத்தத்தின்பின்னர் பூதாகாரமான கைத் தொழில் நாடான யப்பான் அதன் பாதையில் ஸ்தம்பிக்க நேர்ந்தது.

கனடா. நியூசிலாந்தில் அரசியல் தலைவர்களின் பலத்த தோல்வி வெளிப்பட்டது. கனடாவில் பிரதமர் மல்றோனி ராஜிநாமா செய்ய கிம் காம்பெல் என்ற பெண் பிரதமரானார். அவரது ஆட்சிக் காலம் மிகச் சொற்பமானதே. நான்கு மாதங் களில் அவரும் அவரது கன்சர்வேட்டிவ் கட்சியும் அநேகமாக மறக்கப்பட்ட நிலையில் இரண்டு ஆசனங்களே கிடைத்தன. ஜீன் கிரேரின் பிரதமராக, லிபரல் கட்சி அங்கு பதவிக்கு வந்திருக் கிறது. நியூசிலாந்தில் தேசிய கட்சி பிரதமர் ஜிம் பொல்ஜிருக்கு ஒரு வாக்கே அதிகப்படியாகக் கிடைத்தது.

அவுஸ்திரேலியாவில் சர்ச்சைக்குரியவரான போல் கீற்றிங் கட்சி நிலையை முன்னேற்றமடையச் செய்து தொடர்ந்து ஐந்தா



படிப்பகம்

www.padippakam.com

வது தடவையாக தொழிற்கட்சி வெற்றியைப் பெறவைத்தார். அவரது தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்று 2001இல் அவுஸ்திரேலியாவை ஒரு குடியரசு ஆக்குவதாகும். ஆண்டு இறுதியில் ஸ்கொட்லாந்தில் எலிஸபேத் மகாராணியுடன் தங்கி தமது திட்டத்தை அவர் மகாராணிக்கும் தெரிவித்தார்.

பிரிட்டனில் அரசியல் செல்வாக்கு தாழ்வையே அடைந்தது. ஐரோப்பா மீண்டும் சூடான விவகாரமாகியது. ஜோன் மேயர் முதல் அரை ஆண்டையும் டிசம்பர் 91இல் தாம் ஒப்பமிட்ட ஐரோப்பிய ஒன்றியம் தொடர்பான மாஸ்ரிக் உடன்படிக்கையில் தமது கட்சியையே சார்ந்த எதிர்ப்பாளர்களுடனான சமரிலேயே செலவிட்டார். மார்ச்சில் பாராளுமன்றத்தில் அர சாங்கம் தோற்கடிக்கப்பட்டு யூலை 23இல் உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளும்வரை பலவாரங்களை பாராளுமன்றம் மாஸ்ரிக் விவகாரத்திலேயே செலவிட்டது. அவருக்கு முன்னர் பிரதமராக இருந்தவரினாலேயே தடங்கல்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

அக்டோபரில் தச்சர் சீமாட்டியின் நூல் மிகப் பெருமளவிலான பிரச்சாரத்துடன் வெளியிடப்பட்டது. உலகின் அரைப் பங்கு தொலைக்காட்சிகளும் பத்திரிகைகளும் வாரக் கணக்கில் அவரின் பிரதமர் பதவிக் காலத்தை சார்பாக வாதிட் டன. பிரதிகளுக்கு அவர் ஒப்பமிடும் வைபவங்கள் மிகையாகி, ஒப்பமிடாத பிரதிகளே 'சேகரிப்பாளர் பெறுமதிமிக்கவை' என்று கூறும்படி ஆகியது.

ஐரோப்பா மற்றம் நாடுகளது அரசியல் தலைவர்களுடனான அபிப்பிராய வாக்கெடுப்பில் மேயரின் செல்வாக்கு மிகத் தாழ்வடைந்தது. ஸ்பெயினில் மக்கள் சத்திமிக்க தலைவரான பெலிப் கொன்சேலே மார்க்கோஸ் திடீர்த் தேர்தல் ஒன்றை நடாத்தி ஆட்சியில் நீடித்தாலும் அவரது அறுதி பெரும்பான்மையை இழந்தார். கிரீசில் 75 வயதான கொன்ஸ்ரன்ரைன் மிற்சோராகிஸ் பதவியிலிருந்து அகற்றப்பட்டு, முன்னர் அவமரியாதைக்கும் குழப்பங்களுக்குமுள்ளான 74 வயது முன்னாள் பிரதமர் அன்ட்றெஸ் பப்பான்ட்று பதவிக்கு வந்திருக்கின்றார்.



பிரிட்டிஷ் அரச குடும்பத்தின் பிரச்னைகள் 1993 இல் ஓரளவுக்கே குறைந்தன. பொதுமக்களின் நெருக்குதல் 'முதன்முதலாக எலிஸபேத் மகாராணி வருமான வரி செலுத்துவார்' என்ற செய்திக்கு இட்டுச்சென்றது. தீயினால் சேதமுற்ற வின்சர் கோட்டையைப் புனரமைக்கும் நிதி சேகரிப்புக்காக கோடையில் பக்கிங்ஹாம் மாளிகை பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டது. உடற்பயிற்சி நிலையமொன்றில் எடுக்கப்பட்ட புகைப்படங்களைப் பத்திரிகை ஒன்று பிரசுரித்தமை வேல்ஸ் இளவரசி டயானா, தாம் பொது ஈடுபாடுகளிலிருந்து ஆண்டு இறுதியுடன் முற்றாக விலகிக் கொள்ளப்போவதான அறிவிப்பை ஏற்படுத்தியது.

வேலைவாய்ப்பின்மை, போதைவஸ்துக்கள் போன்ற வற்றாலான தாக்கத்தினால் பாதிப்புறும் குடும்ப வாழ்வுக்கு தாம் அடிமைப்பட்டு விடுகிறோமோ என்று தம் வாழ்க்கை முறை பற்றிய வினாவை மேலை உலகம் இந்த ஆண்டு வினவ வைத்தது. வட இங்கிலாந்தில் இரண்டு வயதுக் குழந்தை ஒன்றை கொலைசெய்தார்களென இரு சிறுவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டபோது, அது சர்வதேச கவனத்தை ஈர்த்தது. குடும்ப தகராறுகள் பற்றியும், தொலைக்காட்சிகளிலும் வீடியோக்கஸிலும் சிறுவர்கள் பார்க்கும் மூர்க்கமான கொடூரங்கள் பற்றியும் பல வினாக்கள் எழுப்பப்பட்டன.

அரசியல் ரீதியில் லத்தின் அமெரிக்காவைப் பொறுத்தவ
93 பெரும்பாலும் அமைதியான ஆண்டே. அரசியல் சதிச
'பாஷன்' இழந்துபோய்விட்டாலும், ஜனநாயகம் நிலைகொ
ளுமா என்பதை 94 இல் நடைபெறவிருக்கும் தேர்தல்களி
பின்னரேயே அறியலாம். கெயிட்டியும், கியூபாவும் அப்பிர
தியத்தில் கவனத்தை ஈர்ப்பன. 1991 சதி தலைவர் ஜென
ராவுல் செட்றாசுடன் செய்துகொண்ட சமாதான ஒப்பந்
தின்மூலம், அரிஸ்ரைடை அதிகாரத்தில் மீள அமர்த்த
ஐ.நா.வின் முயற்சி வெற்றியளிக்கக்கூடியதாகவிருந்தது. அரி
ரைட் அக்டோபரில் நாடு திரும்பவிருந்தார். திரும்பவும் வ
செயல்கள் வெடிக்கவும் ஐ.நா. படைகள் அங்கு அனுப்பப்பட
அமெரிக்க போர்க்கப்பல்கள் அரிஸ்ரைட் வருகைக்கு பா
காப்பு அளிக்கவும் அனுப்பப்பட்டன. எனினும் டிசம்பர் வ
அவர் நாடு திரும்பவில்லை.

வட கொரியாவுக்கும், சீனாவுக்கும் (விவாதத்துக்குரிய
வெளியே கம்யூனிசம் நிலைபெற்றுள்ள கடைசி நாடா



கியூபாவில் பிடல் காஸ்ரே
சோவியத் யூனியனின் வீ
சியை அடுத்து நாட்டி
பொருளாதார நிலை குறி
சில உடன்பாடுகளுக்கு
வேண்டிய நிர்ப்பந்தம்
பட்டது. பொருளாதாரம்
வலாக்கப்பட்டு, 1959க்
பின்னர் முதன்முறைய
கியூபா மக்கள் அமெரி
டாலர் வைத்திருப்பது சட்
பூர்வமாக அனுமதிக்க
பட்டிருக்கிறது.

டிசம்பர் 2ஆம் தே
கொலம்பிய பொலிசா
னால் பெரிதும் தேடப்பட்ட உலக கேடிகளில் ஒருவரா
போதைவஸ்து கடத்தல் மன்னர் பப்லோ எஸ்கோப
கொலம்பிய பொலிசாரால் துப்பாக்கிச் சமரொன்றி
சுட்டுக் கொல்லப்பட்டார். ஆயிரம் பொதுமக்களதும், 5
பொலிசாரதும் கொலைகளுக்குக் காரணமானவர் என்
சொல்லப்படும் இவரின் தலைக்கு 30 கோடி டாலர் ச
மானம் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனாலும் ஏழைகள் சி
ருக்கு இவர் ஒரு 'றாபின் கூட்.' பலர் அவரது மரணச் சட
கில் விம்மி அழுதார்கள்.

1993 இல் முதல் அரை ஆண்டும் ரஷ்ய அரசிய
அதிபர் பொறிஸ் யெல்சினுக்கும் பாராளுமன்றத்துக்
மிடையேயான போராட்டத்திலேயே மையம் கொண்டிருந்த
கோர்பச்செவ் காலத்தும் , அதற்கு முந்திய காலத்துமான க
னிஸ்டுகளைப் பாராளுமன்றம் கொண்டிருந்தது. சபாநாய
காஸ்புலரோவ், துணை அதிபர் அலெக்சாந்தர் றற்ஸ்கோ
ஆகியோர் யெல்சினின் எதிரிகளானார்கள். செப்டம்பர் 21இ
யெல்சின் செயல்பட ஆரம்பித்தார். அரசியலமைப்புச் சீ
ருத்தம் ஒன்றைச் செய்யப்போவதாகவும் பாராளுமன்
தைக்கலைத்து, புதிய சட்டத்தின்கீழ் தேர்தல்களை நடாத்
போவதாகவும் அறிவித்தார். காங்கிரசில் மக்கள் பிரதிநிதிக
யெல்சின் நம்பிக்கை அற்றவர் என்று வாக்களித்து, றற்
கோவை தலைவராக்கினார்கள். யெல்சின் பாராளுமன்றத்
முற்றுகையிடச்செய்து, முதலில் தொலைபேசிகளையும் பின்
தண்ணீரையும் துண்டித்து அவர்களைப் பணிய வைக்க மு
சித்தார். ஈற்றில், 2000துருப்புக்கள் வெள்ளை மாளிகை என
படும் பாராளுமன்றத்தைச் சுற்றிவளைத்தன. சமரசப் பேச்
கள் தோல்வியடைந்ததும் வெள்ளைமாளிகைமீது தாக்கு
மேற்கொள்ளப்பட்டது. சிலமணிநேரங்களில் காஸ்புலரோவ
றற்ஸ்கோயும் சிறைக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்குலகம் றஸ்கோய் மீதான யெல்சினின் வெற்றிக்கு
ரகோஷமிட்டது. ஆனால், மூன்று ஆண்டுகளில் அந்த இரண்



ாவது சதி ரஷ்யாவின்
_ று தி யி ன் மை ம யை
ன்கு புலப்படுத்தியது.
ுத்துடன் செய்தித்
ணிக்கையையும் யெல்
ின் அமுல் செய்தார்.
ாதாரண ரஷ்ய மக்க
ளுக்கு வாழ்க்கை முன்
ாரைவிட கடினமான
ாகவே ஆகியது. பலர்
ுதலாளித்துவ மும்,
ஜனநாயகமும் உண்
மையிலேயே சிறந்த
வைதானா என்று வியப்
படைகிறார்கள். பலர்
செல்வந்தரானாலும்,
பலர் மேலும் வறு
மையை அடைகிறார்
கள்.

அசெர்பஜான்,
ஆர்மீனியன் இடையே
பான போர் பல உயிர்
களைப் பலிவாங்கியது.
முன்னாள் சோவியத்
வெளிநாட்டமைச்சர்
செவர்நாட்சேயின்
ஜோர்ஜியாதான் பெரும்
நெருக்கடிகளுக்கு உள்
ளானது. பெருமளவு
நிலத்தை பிரிவினைத்
தீவிரவாதிகள் கைப்பற்
றினார்கள். ரஷ்யா
தலையிடுவதாகக் குற்
றஞ்சாட்டிய செவர்நாட்சே ராஜினாமா செய்யவும் முற்பட்டார்.
ஆனாலும் பின்னர் ரஷ்ய துருப்புக்களின் துணையுடன் தீவிர
வாதிகள் துரத்தப்பட்டார்கள்.

முன்னைய சோவியத் சாம்ராஜயத்தின் ஏனைய பகுதிகளில் போலந்து, ஹங்கேரியில் பொருளாதார அபிவிருத்தியுடன் ஜனநாயக அரசுகள் நன்கே செயல்பட்டன. 'விவாகரத்து' செய்துகொண்ட செக்கொஸ்லாவாக்கியா ஜனவரி முதலாந் தேதி தத்தம் தனி வாழ்வைத் தொடங்கின.

முன்னைய யூகோஸ்லாவியா நிலைமையில்மாற்றம் எதுவுமே இல்லை. சரயேவோ முற்றுகையிடப்பட்டேயிருந்தது. இன சுத்திகரிப்பு இங்கு மேலும் பல கட்டங்களை அடைந்தது. கருத்து வேறுபாடுகளையே கொண்டிருந்த மேலை நாடுகள் ஐ.நா. கொடியின்கீழ் மனிதாபிமான உதவிகளை அளித்தாலும் அவை தலையிட மறுத்தன. பொஸ்னியாவில் சமாதானத் திட்டங்கள் வந்தன, போயின.

ஆக, 1993 ஒரு சோகமான ஆண்டா? சிறப்பான ஆண்டா? கெடுதலான ஆண்டா?

லண்டனிலே பிரபலமான தொலைக்காட்சி செய்தி அறிவிப்பாளர் மாட்டின் லூயிஸ் 'நல்ல செய்திகளும் 'கூடாத' செய்திகளும்' என்ற தலைப்பில் ஆற்றிய உரை ஒன்று, தேசிய அளவிலான ஒரு விவாதத்தை ஏற்படுத்தியது. பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி என்பன அநர்த்தங்களுக்கே அதி முக்கியத்துவம் அளித்து, அவற்றை, ஏனைய நல்ல, சாதகமான நிகழ்வுகளுடன் சமப்படுத்துவதில் தவறிவிடுகின்றன என்பது அவரது வாதம். இதனை அவருடைய சகாக்கள் பலரும் முதலில் எதிர்த்தாலும் பொதுமக்கள் கருத்து மற்ற விதமாகவே இருந்தது. ஒரு சமநிலை சிறந்ததென்று பலர் கருதலாம். இந்த அடிப்படையிலே, 1993 மேலெழுந்த வாரியாக மங்கலானதாகவே தென்படும். ஆனால், இஸ்ரேலுக்கும் பி.எல்.ஓ.வுக்குமிடையே ஏற்பட்ட உடன்படிக்கை, அதன் நடவடிக்கையில் ஆண்டு இறுதியில் சில தடங்கல்களைக் கொண்டிருந்தாலும், அதி சிக்கல் வாய்ந்த பிரச்னைகளும்கூட தீர்க்கப்பட முடியும் என்பதை அது காட்டியது.

அதுவே 1993 சாற்றும் நல்ல செய்தி. □

## 94இல் அமெரிக்கா

■ கிளின்டன் தம்பதிகளுக்குள் மன முறிவு ஏற்படும். என்றாலும் ஜனாதிபதி பதவிக்காலம் முடியும்வரை அதிகாரபூர்வமான விவாகரத்து இருக்காது. அதன்பின்னர் ஹிலரி அரசியலில் குதிப்பார். அதில் அவர் பெரிய நட்சத்திரமாக வளர்ந்துவருவார்.

■ இன்னொருமுறை கிளின்டன் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் படமாட்டார்.

■ மைக்கல் ஜாக்சன் மீதான வழக்கு நீதிமன்றத்துக்கு வெளியே சமரசம் செய்துகொள்ளப்படும். ஆனால், இதுபோல் பணம் கேட்டு இன்னும் பலர் வழக்கு தொடருவார்கள்.

■ எலிஸபெத் டெய்லர் பல அவதூறுகளுக்கும் கிசுகிசுக்களுக்கும் உள்ளாவார்.

■ பாலியல் வன்முறை வழக்கில் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்ட மைக் ரைசன் மேன்முறையீடு செய்வார். ஆனால் அது நிராகரிக்கப்படும்.

■ மைக்கல் ஜோர்டன் மீண்டும் கூடைப்பந்து விளையாட வருவார்.

■ மெக்ஸிகோ பிரமிக்கத்தக்க வகையில் முன்னேற்றம் காணும்.

■ நியூயார்க் பங்குசந்தை எழுச்சி காணும். நிறையப் பணம் புரளும்.





படிப்பகம்

www.padippakam.com



# யுத்தமும் தேர்தலும்

## நெருக்குலில் தத்தளிக்கும் அரசு

எல்லாளன்

இலங்கை அரச படைகளுக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே ஒரு தசாப்த காலத்துக்கு மேலாக இடம்பெற்றுவரும் யுத்தத்தில் அரச படைகள் சந்தித்த மிகப் பெரிய - அவமானகரமான தோல்வி அது. பூநகரியில் பாதுகாப்புப்படைகள் சந்தித்த இந்தத் தோல்வி இலங்கையின் இராணுவத் தளபதியையே பதவி விலகச் செய்துள்ளது. அந்த அளவுக்கு இராணுவத்தின் சுய கௌரவத்துக்கே இத் தாக்குதல் ஒரு சவால் விட்டுள்ளது.

இனப் பிரச்னையின் தற்போதைய நிலையையிட்டு பல செய்திகளை இத் தாக்குதலின் மூலம் விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளார்கள். மறுபுறத்தில் பாது



காப்பு மற்றும் அரசியல் சார்ந்த பல கேள்விகளுக்கான பதிலைக் காணவேண்டிய நிர்ப்பந்தத்தை டி.பி.விஜேதுங்க அரசுக்கு இத் தாக்குதல் ஏற்படுத்தியிருக்கிறது.

ஆனால், இக் கேள்விகள் எதற்கும் பதில் கூறமுடியால் டி.பி. விஜேதுங்கவும் அவருடைய அரசும் தத்தளிக்கும் ஒரு நிலைமையையே இன்று காணக்கூடியதாகவுள்ளது.

பூநகரி-நாகதேவன்துறை ராணுவ கடற்படைத் தளங்கள் வடபகுதியின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பகுதியில் அமைந்திருப்பதனால், இவற்றைப் புலிகள் தாக்கி அழித்திருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக கருதப்படுகிறது. யாழ் குடாநாட்டை பிரதான நிலப்பரப்பிலிருந்து பிரிக்கும் ஒரு பகுதியில் இந்தத் தளங்கள் அமைந்திருந்தன. இதனால் இந்தத் தாக்குதலின் மூலம் குடாநாட்டுடனான போக்குவரத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தியை ராணுவம் இழந்துவிட்டது. இது ராணுவத்தினருக்கு ஒரு பாரிய பின்னடைவு.

இதனைவிட இத்தாக்குதலில் கொல்லப்பட்ட ராணுவத்தினரின் எண்ணிக்கையும் அரசாங்கத்துக்குப் பெரும் திகைப்பை ஏற்படுத்தியுள்ளது. கொல்லப்பட்ட ராணுவ - கடற்படையினரின் எண்ணிக்கையையிட்டு உத்தியோகபூர்வமாக தகவல் எதனையும் வெளியிடாத போதிலும், சமார் 1000 வரையிலான பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். சுமார் 200 வரையிலான படையினர் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

ஆட்களைப் பெருமளவு இழந்ததுடன் பாரிய ஆயுத இழப்பையும் இத் தாக்குதலின் மூலம் ராணுவம் சந்தித்துள்ளது. கடற்படையினரின் ஆறு 'வோட்டர்-ஜெட்' ரக அதிவேக பீரங்கிப் படகுகள் இத் தாக்குதலின் மூலம் புலிகளால் கைப்பற்றப்பட்டது கடற்படையினரின் பலத்தைப் பெருமளவு குறைத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. அதேவேளையில், 120 மி.மீ. பீரங்கிகள் உள்பட சுமார் 30 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் இங்கிருந்து புலிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

படையினருக்கு ஏற்பட்டுள்ள இந்த பாரிய இழப்பு, தொடர்ந்து யுத்தத்தில் ஈடுபடுவதற்கான பாதுகாப்புப் படையினரின் மன உற்சாகத்தையும் மோசமாகப் பாதித்துள்ளது. அத்துடன், இந்த முகாமின் 'ராடார்' உள்பட பல வசதிகள் சேதமாக்கப்பட்ட நிலையில் இம்முகாமில் தொடர்ந்தும் இருப்பதா, இல்லையா என்ற சிக்கலான கேள்விக்கு விடை காண வேண்டிய தேவையையும் அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் வருடாந்தம் அனுஷ்டிக்கும் மாவீரர் வாரத்திலேயே (நவம்பர் 21-28) இவ்வாறான தாக்குதல் ஒன்று நடைபெறுமென எதிர்பார்த்திருந்த நிலையில் சுமார் 10 நாள்கள் முன்னதாவே புலிகளின் இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ராணுவ தளத்தைக்கூட நன்கு திட்டமிட்டு, திறமையானமுறையில் தாக்கக்கூடிய வலுவும், அசாத்தியத் துணிவும் தம்மிடம் உள்ள

தென்பதை இந்தத் தாக்குதலின் மூல
புலிகள் வெளிப்படுத்தியுள்ளன
'கெரில்லா' பாணியிலான யுத்தத்தி
மட்டுமன்றி பாரம்பரிய யுத்தமொன்ல
நடத்தக்கூடியவர்களாகவும் அவர்க
வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதை இ
தாக்குதல் வெளிப்படுத்துகின்றது.

அதேவேளையில் இத்தாக்குதலி
புலிகளுக்கும் பலத்த இழப்பு ஏற்ப
டுள்ளது. அவர்களுடைய தரப்பிலு
400க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்ப
டிருக்கின்றனர்.

முழுமையாகப் பார்க்கும்போது அர
யல் ரீதியாகவும் ராணுவ ரீதியாகவு
அரசுக்கு இத் தாக்குதல் ஒரு பாரிய பி
னடைவு என்றுதான் கூறவேண்டும்.

இதற்கான பாதுகாப்புப் படைகளி
பிரதிபலிப்பு வழமையானதாகவே இரு
தது. வடபகுதியுலுள்ள பொதுமக்களி
இலக்குகள்மீது பொம்மர்கள் குண்
வீசித் தாக்கின. தேவாலயம் ஒன்றின்மீ
மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சில்
பேர் கொல்லப்பட்டனர். யாழ் அரசசெ
லகமும் குண்டு வீச்சால் பலத்த சேத
டைந்தது. அரச அதிபர் மயிரிழையி
உயிர் தப்பினார்.

'இனப் பிரச்னை எதுவும் நாட்டி
இல்லை. பயங்கரவாதப் பிரச்னை
ஒன்றே உள்ளது' என்ற ஜனாதிபதி விஜே
துங்கவின் புதிய தத்துவம் அரசியல் ரீ
யில் ஒரு தடுமாற்றத்தை ஏற்படுத்தியுள்
வேளையில், பூநகரித் தாக்குதலு
யாழ்தேவி ராணுவ நடவடிக்கை யி
போது ஏற்பட்ட தோல்வியும் ராணுவ ரீ
யிலும் யுத்தத்தில் வெற்றி கொள்ளமு
யாத ஒரு நிலையை அரசுக்கு ஏற்படு
தியுள்ளது.

இது ஓர் இனப் பிரச்னை அல்
பயங்கரவாதப் பிரச்னையே என்ற ஜன
திபதி விஜேதுங்கவின் நிலைப்பா
இனப்பிரச்னைக்கு அரசியல் தீ
வொன்றைக் காண்பதற்கான முயற்சிக
அனைத்தையுமே தடுத்து நிறுத்தியுள்ள

புலிகளின் பிரச்னை ஒரு பங்க
வாதப் பிரச்னை என்ற ஜனாதிபதி விஜே
துங்கவின் நிலைப்பாட்டுக்கு இத் தா
குதல் பலத்த அடியைக் கொடுத்துள்ள
இப் பிரச்னைக்கு அரசியல் ரீதியா
தீர்வொன்றுதான காணப்படவேண்டு
என்ற அவசியத்தையும் இத்தாக்குத
தெளிவாக உணர்த்தியிருக்கின்றது
ஆனால், பேரினவாத சக்திகளின் நெரு



படிப்பகம்

www.padippakam.com

லல எதிர்நோக்கியுள்ள விஜேதுங்க
சு, பிரச்னைக்கு அரசியல் தீர்
ஒன்றை முன்வைக்க முடியாத நிலை
உள்ளது. யுத்தம் முடிவின்றித் தொடர்
கே இது வழியேற்படுத்துகின்றது.
1994 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்
ப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ள
லயில், தேர்தலை அடிப்படையாகக்
ண்டு அரசியல் கட்சிகள் அணி
த் தொடகியுள்ளன. புதிய அரசியல்
ரிகள் எவ்வாறு உருவாகப் போகின்
என்பதை நிர்ணயிக்கும் அரசியல்
டிக்கைகளும் பேரங்களுமே இன்
அரசியல் அரங்கில் திரைக்குப் பின்
லும் திரைக்கு முன்னாலும் இடம்
றுவருகின்றன.

தேர்தலை நோக்கிய இந்த அரசியல்
வுகளைப் பொறுத்தவரையில்
ண்டு பிரதான கட்சிகளான ஐக்கிய
யக் கட்சியும் (ஐ.தே.க.)சிறிலங்கா
திரக். கட்சியுமே (சு.க)இந்த நகர்
ரின் மையமாகவுள்ளன. ஏனைய கட்
ரின் பேரங்கள் இதனை அடிப்படை
க் கொண்டவையாகவே உள்ளன.

ஏனைய கட்சிகள் எனும்போது
ற்றை ஐந்து பிரதான பிரிவுகளாகப்
க்கமுடியும்.

1. ஜனநாயக ஐக்கிய தேசிய முன்
ணி.
2. இலங்கைத் தொழிலாளர் காங்
ஸ்.
3. இடதுசாரிக் கட்சிகள்.
4. முஸ்லிம் காங்கிரஸ்.
5. தமிழ்க் குழுக்கள்.

இவற்றுள் இடதுசாரிக் கட்சிகள் தமது
ம்பரிய வழிமுறையின்படி சு.க.வுடன்
ணைந்துகொள்வார்கள் என்றே
பார்க்கப்படுகின்றது. முஸ்லிம் காங்
ஸ் தனித்துப் போட்டியிடும். கொழும்
ள்ள தமிழ்க் குழுக்களின் பின்னால்
சியல் சக்தி வாய்ந்த வாக்குகள்
பும் இல்லை.

எனவே, ஜனநாயக ஐக்கிய தேசிய
னணியும், இலங்கைத் தொழிலாளர்
கிரஸ் கட்சியும் மட்டுமே தேர்
யொட்டி அரசியல் பேரத்தில் ஈடு
க்கூடிய கட்சிகளாக உள்ளன.

ஐ.தே.க.வும், சு.க.வும் ஓரளவுக்கு சம
வாய்ந்த கட்சிகளாக உள்ளதால்
.தே.மு.வும் இ.தொ.கா.வும் மேற்
ள்ளும் முடிவுகளே தேர்தலில்
ற்றி தோல்விகளை நிர்ணயிப்ப
யாக இருக்கும் என்பதால் அவற்றின்
லப்பாடு இத் தேர்தலைப் பொறுத்
ரையில் முக்கியமானது.

1977 ஆம் ஆண்டில் இடம்பெற்ற
தலின் பின்னர் நடைபெற்ற ஒவ்
ரு தேர்தல்களிலும் ஐ.தே.க. வேற்றி
றுவதற்கு இ.தொ.கா.வின் வாக்கு
பெருமளவில் உதவியிருக்கிறது.
தொண்டமானைப் பொறுத்தவரையில்
இதுவே அவருக்குப் பிரதான பின்பல
மாக இருந்துவந்துள்ளது. தொண்ட
மானின் இந்த வாக்கு பலம் எவ்வளவு
சக்தி வாய்ந்தது என்பதை உணர்ந்து
கொண்டதால்தான் தொண்டமானின்
கோரிக்கைகள் பலவற்றுக்கும் காலத்
துக்குக் காலம் அரசாங்கம் இணங்கியது.

ஒரு 'கபினட்' அமைச்சராக
இருந்துகொண்டே அரசாங்கத்தைத் தாக்
கக்கூடிய வலுவையும் இந்தப் பலமே
அவருக்குக் கொடுத்தது.

தேர்தல் எதிர்நோக்கப்படும்
வேளையில் இந்த வாக்குப் பலத்தின்
துணையுடன் தனது கோரிக்கைகள் சில
வற்றை வென்றெடுப்பதற்கு தொண்ட
மான் முற்பட்டதன் விளைவே அரசுடன்
அவருக்கு இன்று ஏற்பட்டுள்ள 'முறுகல்'
நிலையும் அவருடைய கட்சியில் ஏற்பட்
டுள்ள பிளவும்.

ஒரு மாத கால அவகாசத்துடன்
தொண்டமானால் முன்வைக்கப்பட்ட
எட்டு அம்ச கோரிக்கைகளில் சர்ச்
சைக்குரியது காணி தொடர்பான
கோரிக்கையாகும். மலையக காணிப்
பகிர்வில் தமிழ்த் தோட்டத் தொழி
லாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்
படவேண்டும் என்பதும், இவ்வாறான
காணிப் பகிர்வு தோட்டக் கமிட்டிகளின்
ஆலோசனையுடன் மேற்கொள்ளப்
படவேண்டும் என்ற கோரிக்கையுமே
அரசாங்கத்தை இக்கட்டான நிலைக்குத்
தள்ளியுள்ளது.

முக்கியமாக ஜனாதிபதி விஜேதுங்
கவைப் பொறுத்தவரையில் இது
அவரால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத
ஒரு கோரிக்கையாகவே உள்ளது.
ஜனாதிபதி மலையகத்தைச் சேர்ந்தவர்.
காணிப்பகிர்வில் மலையகக் காணிகளை
தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின்
உடைமையாக்கினால், பேரினவாதி
களின் கடுமையான எதிர்ப்பை எதிர்
கொள்ளவேண்டிய நிலை அவருக்கு
ஏற்படும். மலையகத்தை விற்றுவிட்டார்
என்று அவர்மீது குற்றச்சாட்டு சுமத்
தப்படும்.

அதேவேளையில் தனது கோரிக்
கைகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கான
ஒரு முயற்சியாக காமினி திஸாநா
யக்கவுடன் இணைந்து, மலையகம்
இணைந்துள்ள மத்திய மாகாண சபை
யின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கும்
தொண்டமான் திட்டமிட்டார்.

தொண்டமானின் இந்த நடவடிக்கை
ஆபத்தானது என்பதனை உணர்ந்து
கொண்ட அரசாங்கம் உடனடியாக
அவருடன் பேச்சுவார்த்தையை ஆரம்
பித்தது. எனினும் தொண்டமானின்
நிலைப்பாட்டில் மாற்றம் எதனையும்
ஏற்படுத்தமுடியாமையினால் இ.தொ.கா.
வில் ஏற்கனவே உள்ள பிளவைப்
பயன்படுத்தி தொண்டமானைப் பணிய
வைப்பதற்கு அரசு முற்பட்டது.

இதன் விளைவுதான் தொண்டமா
னுக்கும் செல்லச்சாமிக்கும் இடையே
யான பிளவு பகிரங்க விவாதத்துக்கு வந்
தமை.

தொண்டமான் வயதில் எட்டு தசாப்
தங்களைத் தாண்டியவர். இதனால்,
கட்சியின் அடுத்த வாரிசு யார் என்ற
போட்டி ஏற்படுவது இயற்கையானது
தான். இ.தொ.கா.வில் நீண்டகாலமாக
இருந்து செயல்பட்டுவரும் செல்லச்சாமி
இத் தலைமைப் பதவி தனக்கே கிடைக்
கவேண்டும் எனக் கருதிச் செயற்படு
வதில் தவறில்லை. ஆனால், தொண்ட
மான் தனது மகனைத் தனது வாரிசாக்க
முற்படுகிறார் என்பதே இருவருக்கும்
கசப்புணர்வு வளர்ச்சியடையக் காரண
மாக இருந்துள்ளது.

தொண்டமானின் வாக்குப் பலத்தை
உடைப்பதன்மூலமே அவரது நடவடிக்
கைகளையும் கட்டுப்படுத்தி அவரை ஒரு
சக்தியற்றவராக்க முடியும் என அரசு
திட்டமிட்டது. இதன்படி தொண்டமா
னையும் செல்லச்சாமியையும் அந்நியப்
படுத்துவதில் அரசு வெற்றிகண்டுள்ளது.

மத்திய மாகாணத்தில் ஐ.தே.கட்சி
அரசுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட
நம்பிக்கையில்லாப் பிரேரணையை
ஆதரிக்கப் போவதில்லையென இ.தொ.
கா. உறுப்பினர்கள் எட்டுப் பேர் அறி
வித்தது இதன் முதலாவது வெளிப்பாடு.
இ.தொ.கா.வைப் பிளவுபடுத்தி 'கிங்மே
க்கர்' என்ற தொண்டமானின் அந்தஸ்தை
உடைப்பதன்மூலம் அவரது கோரிக்கை
களை நிராகரிக்கலாம் என்பதே அரசின்
திட்டம்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்ன
ணியைப் பொறுத்தவரையில் ஐ.தே.க
.வுடன் இணைந்துகொள்வதற்கு அதன்
தலைவர் காமினி திஸாநாயக்க மேற்
கொண்ட முயற்சிகள் எதுவும் பயன
ளிக்கவில்லை. இதனால் சுதந்திரக் கட்சி
யுடன் இணைந்தே அவர்கள் தேர்தலில்
போட்டியிடலாமென பெரும்பாலும்
எதிர்பார்க்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்
களைப் பொறுத்தவரையில் அவை அர
சியல் பரிமாணத்தில் தாக்கத்தை ஏற்படுத்
தக்கூடிய சக்திகளாக இல்லை என்பது
கடந்த வருடம் நடைபெற்ற மாகாண
சபைத் தேர்தல் முடிவுகள் நிரூபித்தன.

இதனால், அரசியல் பேச்சுவார்த்
தைகளிலோ, அல்லது பேரங்களிலோ
எண்ணிக்கைக்கு மட்டுமே அவை
கணிக்கப்படுகின்றன. இந்நிலையில்
பெரும்பாலும் மௌனமாக இருக்க
வேண்டியவர்களாகவே அவர்கள் உள்
ளனர். □



படிப்பகம்

www.padippakam.com



## 94 இல் ஆசியா

# மாற்றமடையும் பிராந்திய பாதுகாப்

## வல்லரசாகும் சீனா

குமரன்

உலகின் துரித பொளாதார வளர்ச்சியில் சுபீட்சத்தை நோக்கும் ஆசியா, அதன் பாதுகாப்பு குறித்து மிகுந்த அக்கறையைச் செலுத்த நேர்கிறது. வர்த்தக நெருக்கடியின் விளைவாக அமெரிக்கா, ஆசியாவில் அதன் இராணுவ நிலைப்பாடுகளைக் குறைத்துக் கொள்வதையடுத்து அப் பிராந்தியத்தின் பாதுகாப்பு முன்னுரிமைகள் குறித்து அப் பிராந்திய நாடுகள் மீள ஆலோசிக்க நேர்கிறது. இதுவே ஆசிய பிராந்தியத்தில் 1994 இல் முக்கிய விவகாரமாக அமையலாம்.

இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னர் பரவி விரிந்த கம்யூனிசத்துக்கு அணைகட்ட முனைந்த மேற்குலக நாடுகள் முதலில் ஐரோப்பாவைச்சுற்றி அரண்கள் அமைத்தன. அதே சமயம், மூன்றாம் உலக குடியேற்ற நாடுகளிலிருந்தும் ஐரோப்பிய நாடுகள் தம்மை விடுவித்துக் கொள்ளத் தொடங்கின. இந்த வெற்றிடத்தை நிரப்ப அமெரிக்கா வந்தது. பிராந்தியப் பாதுகாப்பு என்ற பெயரில் அது காலூன்ற ஆரம்பித்தது. ஆசியாவில் கம்யூனிச பரவலுக்கு எதிராக அரண் ஒன்றை அமைத்துத் தருவதாக வியூகங்கள் வகுத்தது. சியாட்டோ (South-East Asia Treaty Organisation-Seato), சென்ரோ (Central Treaty Organisation-Cento) போன்ற அணிகள் அத்தகையவையே. இனி, அமெரிக்காவை ஏற்று லாபம் பெற்ற நாடுகளில் ஆசியான் அணியும் ஒன்று. புருணை, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் இந்த அணியுள் அடங்குகின்றன.

ஆசிய நாடுகளுக்கு வேண்டிய படைப் பாதுகாப்பைக் கொடுத்த அமெரிக்கா, ஆசியாவில் தனது வார்த்தக கால்களையும் பலமாக ஊன்றியது. தனது பொருளாதார மேம்பாட்டுக்கு ஆசியாவை வளமான சந்தையாக ஆக்கிக் கொண்டது. ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஆசிய நாடுகளுடன் செய்யும் வர்த்தகத்தைவிட, அமெரிக்கா ஒன்றரை மடங்கு அதிக வர்த்தக உறவை பேணுகிறது. ஆனாலும் இன்று அமெரிக்காவை அயர வைத்திருக்கும் பொருளாதாரப் பின்னடைவைச் சமாளிக்க அது வழி அறியாது நிற்கிறது. இராணுவச் செலவினங்களைக் குறைத்து, வெளி நாடுகளிலுள்ள அதன் இராணுவ முயற்சிகளிலும், அமைப்புக்களிலும் முக்கியமானவற்றை மட்டுமே வைத்திருக்க தீர்மானித்திருக்கிறது. இது, ஆசியான் அணியில் சில நாடுக

அச்சம் கொள்ள வைத்திருக்கிறது. சோவியத் யூனியன் குலை

பின்னர் கம்யூனிச அச்சுறுத்தல் அற்றுப் போகவும், பி

தியபாதுகாப்பும் புதிய வடிவம் பெறவேண்டும் என்ற

ணம் ஆசியான் நாடுகளிடையே ஏற்படத் தொடங்கியது. அ

விளைவாகவே கடந்த யூலையில் அமெரிக்கா, சீ

ரஷ்யா ஆகியவற்றையும் உள்ளடக்கி, 18 நாடுகள் கொண்ட

பிராந்தியபாதுகாப்பை உருவாக்க இந்நாடுகள் விரும்ப


அதன்பின்னர் நவம்பரில் அமெரிக்க சியாற்றில் நகரில்

உச்சி மாநாடு நடைபெற்றது. 15 நாடுகள் அதில் கல

கொண்டபோது ஆசிய பசிபிக் நாடுகளின் பொருளா

அணி ஏபெக் (Asia-Pacific Economic Co-operation- APEC) அ

### ஆசியாவில் அமெரிக்க துருப்புக்கள்




கப்பட்டது. ஆசிய நாடுகளுடனான எதிர்கால அமெரிக்காவின் அடி நாதமாக அது அமைகிறது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் ஆசி

முதன்மைபெறும் என்று வெளியுறவுச் செயலாளர் வா



படிப்பகம்

www.padippakam.com



ிஸ்தோபர் கூறியிருக்கிறார். எனினும், அமெரிக்க ஆதரவில் சியாவில் நிலைபெற்றிருந்த சியாட்டோ, சென்ரோ துகாப்பு அணிகள் செயல் இழந்துவிட்டன. இன்று இப்ப ியிலுள்ள ஒரு லட்சம் அமெரிக்க துருப்புக்களை எண்ணிக் ;யில் குறைக்கலாமா என்று அமெரிக்கா தீவிரமாக எண் ;கிறது.

இப்படிப் பார்த்தால், ஆசியாவில் உள்ள பெரும் பொரளா ர நாடாக சீனாவே உருப்பெறப் போகிறது. நிலப்பரப்பை த்தாலுஞ்சரி, மக்கள் தொகை, இயற்கை என்று பார்த்தா ஞ்சரி சீனாவில் அவை மலிந்து கிடக்கின்றன. எனவே, 2015 ம் ஆண்டளவில் உலகின் மிகப்பெரிய பொருளாதாரமாக ாவே திகழும் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. 2002 ம் ஆண்டளவில் சீனாவின் வர்த்தக வருமானம் 37 பில் பன் டாலராக வளருமென கணிப்பிடப்படுகிறது. இந்நிலை ் இனி, சர்வதேச அரங்கில் வளரும் நாடுகளின் சார்பில் குரல் ாடுக்கவல்ல தகுதியும் உரிமையும் தனக்கே உண்டு என்று ா கருதவும் தலைப்படவும் போகிறது. ஏற்கனவே ஹொங் ாங் தொடர்பாக அது பிரிட்டனை எதிர்த்து ஒரங்கட்டத் ாடங்கிவிட்டது. ஏனைய சிறிய ஆசிய நாடுகளுக்கு இது சற்று ச்சத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அதுவே ஆசிய பிராந்தியத்தில் மெரிக்காவின் நிலைகொள்ளலை அவை வற்புறுத்தக் காரண கிறது.

பிலிப்பைன்ஸைப் பொறுத்தவரையில் அமெரிக்கா அங்கு தன் தளங்களை மூடிவிட்டது. ஆனால், தனது இராணுவ லைப்பாட்டை தொடர்ந்து வைத்திருக்கவும் வர்த்தக சந்தையை ுதியாக வரித்துக்கொள்ளவும் மலேசியா, இந்தோனேசியா ான்ற நாடுகளுடன் புதுவகை பாதுகாப்பு ஒப்பந்தங்களை மரிக்கா செய்திருக்கிறது. கொறியா இந்த ஆண்டிலும் ஒரு ரச்னைதரும் நாடாகவே இருக்கும். அமெரிக்கா தனது ட்டல் அணுகு முறையால் அதனை அடக்கவே முயற்சிக்கும். மெரிக்காமீது தென்கொரியா கொண்டிருக்கம் தாராள ணிவு விசுவாசமும், வட கொரியாவின் பொருளாதாரம் ரிதும் பாதிப்படைந்திருப்பதாக கசியும் செய்தியும் அமெரிக் வுக்கு அநுகூலமாக அமையலாம்.

ஆசியாவின் பொருளாதார மகுடத்தை இன்று சூடியிருப்பது ்பான். தான் உண்டு, தன் பொருளாதார மேம்பாடு உண்டு ன்று இதுகாறும் உலக அரசியல் தலையீடுகளில் ஈடுபடாது ுங்கியிருந்த யப்பான், வேண்டுகோள்களையடுத்து ்போது கலந்துகொள்ள ஆரம்பித்திருக்கிறது. யப்பானிய டை ஐ.நா. அமைதிப்படையாக கம்போடியாவுக்கு முதல் வையாக கடந்த ஆண்டு சென்றது. பல கட்சிப் பொதுத் ர்தலை அது அங்கு நடாத்திக் கொடுத்தது. இந்த ஆண்டில், நா. பாதுகாப்புச் சபையிலே தனக்க ஒரு நிரந்தர உறுப் புரிமை பப் பெற்றுக்கொள்ள யப்பான் முழுமூச்சாக முயற்சி செய்யும்.

ஐ.நா. பாதுகாப்புச்சபை நிரந்தர உறுப்புரிமைக்கு வகுவாக முனையும் மற்றைய நாடு இந்தியா. ஆரம்ப காலந் நாட்டே, தான் முன்னணி வகித்து நிற்கும் அணிசேரா மைப்புமூலம் இந்தியா தனது கோரிக்கையை வலியுறுத்தும். மெரிக்காவுடன் இன்று தனது உறவைச் சுமுகப்படுத் பிருப்பதும் இந்தியாவுக்கு ஒரு வாய்ப்பே. அமெரிக்காவுடன் ர்ந்து கூட்டுப்படைப் பயிற்சிகளை அது நடத்தியிருக்கின்றது. லக வர்த்தகம் தொடர்பாக இதுகாலவரையிலான அதன் டுப்பாடுகள் சிலவற்றை இந்தியா தளர்த்தியிருக்கிறது. இது மெரிக்காவுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உலகின் மிகப் பெரும் ்தைகளில் ஒன்று இந்தியா. அந்தச் சந்தையிலே தானும் ஒரு ரும் கடை விரிக்கவேண்டும் என்ற ஏக்கம் அமெரிக்காவுக்கு ண்ட நாள்களாகவே உண்டு. இன்று ஐ.நா.வைத் தான் ரும்பியவாறு தன் சுண்டுவிரலில் ஆட்டிவைக்கும் மெரிக்கா, ஒரு வார்த்தை சொன்னால் அது ஏவலாக ஏறும். னி, தனது பொறுப்பையும், தரத்தையும் வலியுறுத்தும் வகையில் ஐ.நா.அமைதிப் பணிகளிலும் இந்தியா தனது பங்க ளிப்பை முழுமையாகச் செய்கிறது. சோமாலியா சென்றிருக்கும் இந்திய அமைதிப்படை அங்கு மக்களின் அன்பையும் உலக நாடுகளின் நன்மதிப்பையும் பெறும் வகையில் பொறுப்பாக நடந்துகொண்டிருக்கிறது. ஆனாலும், இந்தியாவும் அமெரி க்காவும் வெளிப்படையாக நட்புப்பாராட்ட இயலாத தடங்கல் களும் இருக்கின்றன. அணு ஆயுத அதிகரிப்பு தடை ஒப்பந் தத்தில் கைச்சாத்திட இந்தியா தொடர்ந்தும் பிடிவாதமாக மறுத் துவருகிறது.

தெற்காசியாவிலே இரண்டு முக்கிய நாடுகளில் ஒன்று இந்தியா. மற்றையது பாகிஸ்தான். இந்த இரு நாடுகளும் புதிய ஆண்டை ஒரு புந்துணர்வோடு அணுகத் தலைப்பட் டிருக்கின்றன. அது தெற்காசிய பிராந்தியத்துக்கு ஒரு நல்ல சகுனமாகக் கொள்ளலாம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக் குமிடையே நல்லுறவு மலர்வதற்கு தடையாக இருப்பவற்றுள் காஷ்மீர் பிரச்னை முக்கியமானது. இதுபற்றி இரு நாடுகளும் பேசுவதற்கு முற்பட்டுள்ளன. இரு அரசுகளுமே இவ்விவ காரத்தில் எடுத்த எடுப்பிலேயே விட்டுக்கொடுத்து நடந்தால் உள்நாட்டில் கண்டனங்களுக்கும் அரசியல் தோல்விகளுக்கும் உள்ளாகலாம் என்பதால் இதில் உடனடியாகவே ஓர் உடன் பாடு ஏற்பட்டுவிடும் என்று அரசியல் அவதானிகள் எவரும் எதிர்பார்க்கவில்லை.

நீண்டகாலமாக அமெரிக்காவுடன் நெருங்கிய நட்பு பூண்டிருந்த நாடு பாகிஸ்தான். பாகிஸ்தானின் படைபலமும் பொருளாதாரமும் கட்டியெழுப்பப்பட அமெரிக்காவின் உத விக்கரம் பெரும் பலமாக காலாகாலமாக இருந்திருக்கிறது. ஆனா லும், தற்போது உருவாகிவரும் அமெரிக்க-இந்திய நல்லுறவு பாகிஸ்தானுக்கு ஒரு திடுக்குறலாகவே இருக்கும். தனது மண்ணில் வளர்ந்துவரும் இஸ்லாமிய கடுங்கோட்பாட்டுப் போக்குக்கூட அமெரிக்காவை அதிருப்திப்பட வைத்திருப் பதையும் பாகிஸ்தான் உணர்ந்திருக்கிறது. சோவியத் யூனிய னின் வீழ்ச்சிக்குப் பின்னர், அதிலும் குறிப்பாக சோவியத் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து அகன்றபின்னர், பாகிஸ் தானுடன் தொடர்ந்தும் தோழமை கொண்டாடவேண்டிய நிலை அமெரிக்காவுக்கு இல்லாமல் போய்விட்டது. மேலும், இந்தியாவைப்போலவே பாகிஸ்தானும் அணு ஆயுத அதிகரிப் புத் தடை ஒப்பந்தத்தில் ஒப்பமிட ஒருப்படாது என்பதும் அமெ ரிக்கா அறிந்ததே. எனவே, புதிய நண்பர்களைத் தேடும் முயற் சியில் பாகிஸ்தான் இந்த ஆண்டில் இறங்கும். புதிதாக உருவா கிவரும் மத்திய ஆசிய முஸ்லிம் நாடுகள் மீது பாகிஸ்தான் தன் சகோதர பார்வையை வீசும்.

ஆப்கானிஸ்தானைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டும் நிலையான அமைதி அங்கு வருமா என்பது சந்தேகத்துக்குரியதே. அங்குள்ள தலைவர்களைத் தேசியத் தலைவர்கள் என்று சொல் வதை விட இனக் குழுத் தலைவர்கள் என்றும் போர்த் தளபதிகள் என்றும் கூறுவதே பொருத்தமாக இருக்கும். சுதந்திரப் போரா ளிகள் என்று முன்னர் மேலைத்தேய செய்தியாளர்களால் வியப்போடு மதிக்கப்பட்டவர்களின் சாயம் இன்று வெளுக்கத் தொடங்கியிருக்கிறது. அமைதிக்கான தவிப்புடன் அகதிகளாகத் தவிக்கும் அந் நாட்டு மக்களின் பரிதாபநிலை இந்தக் குழுத் தலைவர்களின் சிந்தையைத் தொட்டதாகத் தெரியவில்லை. பெருந்தொகை ஆயுதம் யார் கையில் இருக்கவேண்டும், வருவா யைக் கொட்டும் போதைப்பொருள் வர்த்தகம் யார் ஆளுகையில் இருக்கவேண்டும் என்பதிலேயே இவர்கள் இன்று குறிப்பாக இருக்கிறார்கள், இழுபறிப்படுகிறார்கள். ஆப்கானிஸ்தானை அடுத்த ரஜிகிஸ்தானின் அரசியலில்கூட ஆப்கானிஸ்தான் போர்த் தளபதிகள் இறங்கி அங்கும் குட்டையைக் குழப்பத் தொடங்கியிருக்கிறார்கள். இதுவும் அச்சத்தை ஏற்படுத் தியிருக்கிறது. எனின், ஆப்கானின் அமைதி எங்கோ தொலை தூரத்துக்குச் சென்றுவிட்டதென்றே தெரிகிறது. □



படிப்பகம்

www.padippakam.com





# புதிய ஆண்டில் புது வேகம்

எஸ். சுவாமிநாதன்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நிம்மதிப் பெருமூச்சுடன் புத்தாண்டில் காலடி வைக்கிறார். ஆனால், பாரதீய ஜனதா கட்சித் தலைவர்களுக்குப் புதிய ஆண்டு ஏமாற்றத்துடனேயே ஆரம்பிக்கிறது. அரசியல் சத்தி வாய்ந்த உத்தரப் பிரதேச மாநிலத்தின் முதல்வரான முலாயம்சிங் யாதவ் வெற்றிப் பெருமிதம் கொள்கிறார். இந் நிலையில் முன்னாள் பிரதமர் வி.பி. சிங் (ஜனதா தளம்) இருக்கும் இடத்தைத் தேடித்தான் கண்டு பிடிக்கவேண்டும்.

ஆறு வட இந்திய மாநிலங்களில் சென்ற டிசம்பர் மாதம் நடந்த மாநில அரசு தேர்தல்களை ஒரு குட்டிப் பொதுத் தேர்தல் என்றே கூறலாம். ஏனெனில், இந்தியாவின் மிகப் பெரியமாநிலமான மத்தியப் பிரதேசத்திலும், அதிக மக்கள் தொகையையுடைய உத்தரப் பிரதேச மாநிலத்திலும் தேர்தல்கள் நடந்தன. இந்தத் தேர்தல் முடிவுகள் இந்திய அரசியல் களத்தில் புதிய அணிகளையும், புதிய நம்பிக் கையையும் தோற்றுவித் துள்ளது.

டில்லி யூனியன் பிரதேசத்தில் மதன் லால் குரானாவும் (பா.ஜ.) ராஜஸ்தானில் பைரோன்சிங் ஷெகாவட்டும் முதல்வராகப் பதவியேற்றனர். மத்தியப் பிரதேசத்தில் திக்விஜய் சிங்கும் (காங்) ஹிமாசல் பிரதேசத்தில் வீரபத்ர சிங்கும் (காங்) முதலமைச்சரானார்கள். அரசியல் செல்வாக்கு மிக்க உத்தரப் பிரதேசத்தில் முலாயம் சிங் யாதவ் (சோஷ) முதல்வராகியிருக்கிறார். இதுவரை பாரதத்தில் பதவி வகித்த ஒன்பது பிரதமர்களில் ஏழு பேர் உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேகாலயாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைக்கிறது.

ஆயினும் இந்த இடைத் தேர்தல் முடிவுகளை எந்த ஒரு கட்சிக்கும் கிடைத்த 'முழு வெற்றி' யாகவோ, 'படு தோல்வி' யாகவோ கருத முடியாது. ஏனெனில், எந்த ஒரு கட்சியும் பலத்த பெரும் பான்மையுடன் ஆட்சியைப் பிடிக்க வில்லை. மேலும், தேர்தலில் ஒரு கட்சி வென்ற இடங்களைக் கொண்டு உண்மையான பலத்தை அறியமுடியாது. அதற்குக் கிடைத்த வாக்கு சதவிகிதத்தைக் கணக்கிடுவதே சரியான அணுகுமுறையாகும்.

இராமபிரான் அவதரித்த புனித அயோத்தி இடம்பெற்ற உத்தரப் பிரதேச மாநிலத்தில் ஜனதாவுக்குப் பலத்த அடி விழுந்ததாகப் பரவலாகக் கூறப்படுகிறது. ஆனால் உண்மையில், சென்ற தேர்தலைவிட இத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு 3 சதவிகித வாக்குகள் கூடுதலாகக் கிடைத்துள்ளன. ஆனால், வேறுசில கட்சிகள் கூட்டுச் சேர்ந்ததால் பாரதிய ஜனதாவுக்கு இடங்கள் குறைந்தன. மேலும், மக்கள் மதவாதக் கட்சியைப் புறக்கணித் துவிட்டதாகக் கூறி யாரும் மகிழவும் முடியாது. இதற்குப் பதிலாக, ஜாதீய வாதம் பேசும் கட்சி (பகுஜன சமாஜக் கட்சி) வெற்றி பெற்றுள்ளது. கான்ஷிராம் என்பவர் தலைமையிலுள்ள பகுஜனக் கட்சி, தாழ்த்தப்பட்ட மக்களின் பெயரில் வாதாடும் கட்சியாகும். அவரும், முலாயம் சிங்கும் கூட்டுச் சேர்ந்து முஸ்லீம்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் பயத்தைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டுவிட்டனர்.

இப்பொழுது புதிய ஆட்சி மலர்ந்துள்ள 6 மாநிலங்களில் எத்தனை மாநிலங்களில் ஐந்தாண்டுகளுக்கு அரசு நீடிக்கும் என்று கூறிவிட முடியாது. குறிப்பாக, உ-டத் தரப் பிரதேசம், ராஜஸ்தான் மாநிலங்களில் அஸ்திவாரம் பலமாக இல்லை.

சில மாதங்களுக்கு முன் தென் மாநிலங்களில் நடந்த இடைத் தேர்தலில் காங்கிரஸ் தோல்வி அடைந்தது. அதேநேரத்தில் பங்கு சந்தை ஊழல் பேர் வழி ஹர்ஷத் மேத்தா பிரதமர் நரசிம்ம ராவ் மீது ஒரு கோடி ரூபா ஊழல் குற்றச் சாட்டைச் சுமத்தினார். அப்பொழுது நரசிம்மர பதவியில் நீடிப்பாரா என்ற கேள் எழுந்தது. ஆனால் இப்பொழுது, 19 வரை யாரும் அவரை அசைக்க முடிய என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. இ இடைத் தேர்தல் நடத்தவேண்டும் எ கோரிக்கைவிடுக்க எந்தக் கட்சிக் துணிவு பிறக்காது. பாரதிய ஜன வின்மத அடிப்படையிலான கொள் களுக்கு எதிராக மக்கள் வாக்களித் கள் என்று கூறுவதைவிட, நரசிம் வின் - குறிப்பாக, நிதி அமைச்சர் மோகன் சிங்கின் பொருளாதார சீர்தி தங்களுக்கு ஆதரவாக வாக்களித்தார் என்று கூறுவதே பொருத்தம். அ யையும் பொருளாதார வளர்ச்சியை மக்கள் விரும்புகின்றனர்.

1993ஆம் ஆண்டில் இந்திய அ பல சோதனைகளையும் சாதனைக யும் சந்தித்தது.

● மார்ச் மாதத்தில் பம்பாயில் வெ குண்டுகள் வெடித்தன. ஏராளமானே இறந்தனர்.

● ஜூன் மாதத்தில் பிரதமர்மீது கோடி ரூபா ஊழல் புகாரை ஹர் மேத்தா வீசினார்.

● செப்டம்பரில் தென்னக இ தேர் தல்களில் ஆளும் கட்சிக்குத் தோ ஏற்பட்டது. இதற்குப் பின்னர், ம ராஷ்டிரத்தில் பாரிய பூகம்பத்தில் ஏர மானோர் உயிரிழந்தனர்.

● டிசம்பர் தேர்தலில் எந்த ஒரு சிக்கும் பெரிய வெற்றியோ, தே வியோ ஏற்படவில்லை.

● வெளியுறவுத் துறையில் இ ரேலை இந்தியா அங்கீகரித்தது.

● தென் ஆபிரிக் காவுடன் மீண் அரசியல் உறவை ஏற்படுத்திக்கொ டது.

● சீனாவுடன் புதிய எல்லை பந்தம் கைச்சாத்தானது.

பிரதமர் ராவின் நிதானமான பே கும், மன்மோகன் சிங்கின் பொருளா சீர்திருத்தங்களும் இந்தியாவை ஓர் உ யான ஜனநாயக நாடு என்று கா வருகிறது. எனவே, 1994ஆம் ஆண் சுப சகுனங்களுடன் தொடங்கியுள் என்று கூறலாம்.



படிப்பகம்

www.padippakam.com



# அரங்கேற்ற விழாக்கள்

ன்ன உந்துதலோ தெரியாது, லண்டனைச் சுற்றி ஒரே பரதநாட் டிய அரங்கேற்ற விழாவாகக் காட் ளிக்கிறது. பெண்ணைப் பெற்றவர் க்கும் நடன ஆசிரியர்களுக்கும் அரங் ற்றத்தில் ஏற்பட்டிருக்கும் அக் றயும் ஆர்வமும் பெருகிவருவது கிறது. கடந்த ஆண்டு செப்டம்பரில் ் மிக உச்சம்.

செப்டம்பர் 4ஆம் தேதியும் டர்ந்து 11ஆம் தேதியும் திருமதி ல்வலக்ஷ்மி ராமகிருஷ்ணனின் இரு ணவிகளின் அரங்கேற்றம் ஒன்றன் ் ஒன்றாக லண்டன் லோகன் ் டபத்தில் தொடர்ந்து நடந்தது ப்பாயிருந்தது. உடனுக்குடன் ண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் கட்டான நிலைக்கு தள்ளிவிடும் ஒரு டம் இருந்தது.

செல்வலக்ஷ்மி இலங்கையின் மிகப் சித்திபெற்ற நடன மணியான திருமதி சுந்தரி பிரதாலிங்கத்தின் சிஷ்யை. தத் தவிர, யாழ்ப்பாணத்தில் அந் ரகளில், கொக்குவில் 'கலாபவனம்' பையா மாஸ்ட ரிடம் காணப்பட்டது ன்ற ஒரு கற்பித்தல் ஒழுங்கை இவரி ம் காணலாம். ஏற்கனவே இவர் டனில் அரங்கேற்றிய மாணவிகள் ில் இது தெரிந்தது.

செப்டம்பர் 4ஆம் தேதி இவர் அரங் றிய செல்வி குமுதினி விசுவரத்தினம் விகல்யாணி வர்ணத்தில் தன்னை ிரப்படுத்திக்கொண்டார். தீர்மா கள், சஞ்சாரி பாவங்கள், அபிநயம் லாமே அமைவாக இருந்தன. தில் னா முத்தாய்ப்பாக அமைந்தது. ்வலக்ஷ்மியின் நட்டுவாங்கமும் இங் ாக இருந்தது.

சிவசக்தி சிவநேசன் பாட்டு. சிவராசா தங்கம். லக்ஷ்மி ஜயன் வயலின். தான் ஒரு சேர்க்கை அது!

இப்போதெல்லாம் பொதுவாகவே தகிகளிடம் காணப்படுகின்ற அரை டி குறைபாட்டுக்கு மாத்திரம் தினியும் விலக்கல்ல. நடனத்துக்கு



தஷாரா

அப்பால், அரங்கேற்றத்தின் ஏனைய அம்சங்கள் லண்டனில் அவசியம் விவா திக்கப்படவேண்டியவை.

அதுசரி, நிகழ்ச்சி அறிவிப்பாள ருக்கும் கூட லண்டனில் பஞ்சமா, என்ன? இது அந்தப் பெண்குரல் பற்றி.

11ஆம் தேதி நிகழ்ந்த செல்வி தேனுகா தியாகராஜனின் பரத நாட்டிய அரங் கேற்றத்தில் ஒரு புதுமை. நாட்டி யக்கலைஞர் சித்திரா விஸ்வேஸ்வரனின் கணவர் விஸ்வேஸ்வரனே பாடகராக ஏற் பாடு செய்திருந்ததுதான். சித்திரா வின் நாட்டிய நிகழ்ச்சிக ளுக்கெல்லாம் இவர் பாடிக்கொண்டிருப்பது ஒரு விசேஷம். ஆனால், இலங்கையில் படித்துவந்த நடன ஆசிரியர்களின் பாணிக்கு அவர் பாடுவதென்றால் சிலபல மாற்றங்கள் தேவைப்படும். அன்று அவர் பாட்டு எடுக்கவில்லை என்பதை அவரே உணர்ந்திருக்கலாம்.

எடுத்த எடுப்பிலிருந்து முடியும்வரை தேனுகாவின் காலப் பிரமாணம் கொஞ் சம் துரித நடையிலேயே இருந்தது. அப்படியி ருந்தும் வரையறை பிசகா மலும், அங்கசுத்தம், பாவம் பிசகா மலும் ஆடினார். செல்வலக்ஷ்மியின் குரு பால சுந்தரி சுவாசிலாந்திலிருந்து நேரில்



துஷாரா

வந்து அரங்கேற்ற மாணவியையும் குரு வையும் பாராட்டியது சிறப்பாயிருந்தது. பாரதிய வித்ய பவனின் மிருதங்கம் பவானி சங்கர், வயலின் சந்திரசேகர் ஆகியோருடன் தயாபரன் புல்லாங்குழல்.

செப்டம்பர் 12ஆம் தேதி கார்ஷல்ரன் பெண்கள் உயர் நிலைப்பள்ளி மண் டபத்தில் செல்வி பிருந்தா செல்வ ராஜ சிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம்



குமுதினி

சிறிது வித்தியாசமான முறையில் அமைந்திருந்தது. காலப்பிரமாணம் நிதானமாகச் சென்றுகொண்டி ருந்ததோடு, ஜதிக் கோவைகளும் அடவு களும் படபடப்பில்லாமல் ஒழுங்காயி ருந்தன. ஆசிரியை திருமதி மேனகா ரவி ராஜுக்கு இதுதான் முதல் அரங்கேற்ற அனுபவம் என்று சொல்லப்பட்டது. ஏற்கனவே வெவ்வேறு ஆசிரியைகளிடம் சிறுகச்சிறுகக் கற்ற செல்வி பிருந்தாவை கடந்த மூன்றாண்டுகளுக்குள்ளாக பக்குவ மான முறையில் ஒரு முழு மார்க்க வடிவில் தயார் படுத்தியிருந்தார்.

தோடி ராகத்தில் "ரூபமு ஜூசி..." வர்ணத்துக்கு பிருந்தா முழுமையாக ஆடினார். "வாரணம் ஆயிரம்..." என்ற ஆண்டாள் பாசுரத்துக்குக் காண்பித்த அபிநய பேதங்களும் சஞ் சாரிபாவமும் நன்றாகவே இருந்தன. 'கிருஷ்ணம்' என்ற நிகழ்ச்சியில் கிருஷ்ணனின் தோற்றங் களைக் காண்பித்தபோது அதன் சாகித் தியத்தைப் புரிந்துகொள்ள முடிய வில்லை. தியான சுலோகத்தைத் தொடர்ந்து ஹஸ்த விநியோகங்கள், திருஷ்டி பேதம், ஸ்தான பேதம் முத லியவற்றைக் காண்பிப்பதாக நிகழ்ச்சி நிரலில் காணப்பட்டது. அபிநய தர்ப் பணத்திலுள்ள பத்ததியைப் பாடிய



படிப்பகம்

www.padippakam.com



முறையும், அதற்கு வாத்திய உதவி கொடுத்ததும் பொருத்தமாயில்லை.

இதில் இன்னுமொன்று, நடனத்துக்குப் பாடுவதில் மிக்க அநுபவமும் பிரபல்யமும் வாய்ந்தவரான திருமதி அம்பிகா தாமோதரத்துடன் பொதுவாக மெல்லிசையிலேயே தன்னை இதுவரை பிரபலப்படுத்திய சத்தியமூர்த்தியும் பாடினார். நடனத்துக்கு எப்போதுமே தனித்துவமான ஆண்குரலின் அநுபவிப்பு இருந்தது.

செப்டம்பர் 18ஆம் தேதி காமன்வெல்த் மண்டபத்தில் புஷ்கலா கோபால், உன்னிகிருஷ்ணன் ஆகியோரின் மாணவியான செல்வி எடித் துஷாரா ஜோசப்பின் அரங்கேற்றத்தில்எல்லா அம்சங்களிலுமே ஓர் ஆளுமை, நிறைவு இருந்தது. அஷ்டபதிக்கும், லால்குடியின் அந்த தனசிறி தில்லானாவுக்கும் புஷ் கலாவின் நடனஅமைப்பு சற்று வித்தி யாச மாக - நன்றாக இருந்தது. ஆனால், வர்ணத்தில் சுரத்துக்கு நர்த்தகி அடவுகள் செய்யும்போது பாடுபவருக்குப் பதிலாக வயலினில் சுரத்தை வாசிக்க வைத்தது 'அந்த' அழுத்தத்தைக் கொடுக்க வில்லை.

மாதினியின் பாட்டு, சோமுவின் மிருதங்கம் நன்றாகவே இருந்தன. தியாகராஜனின் புல்லாங்குழலை இன்னமும் சற்று பயன்படுத்தியிருக்கலாம். அஷ்டபதியில் புஷ்கலாவின் பாட்டும்கூட நன்று. கோதண்டபாணி வயலின். துஷாரா யாழ்ப்பாணத்தில் சுப்பையா மாஸ்டரின் புதல்வி சாந்தினியிடம் பயின்றவர்.

இருபதுக்கும் மேற்பட்ட அரங்கேற்றங்கள் கடந்த ஆண்டில் லண்டனில்நடைபெற்றிருக்கின்றன. கடைசியாக நவம்பர் 24ஆம்தேதி லோகன் மண்டபத்தில் நடைபெற்ற செல்வி தனுஷா மகேஸ்வரனின் அரங்கேற்றம் அவற்றுக்கு முத்தாய்ப்பு வைத்தது. கலாக்ஷேத்ரா பட்டதாரியான திருமதி உமா சந்திரதேவாவின் மாணவிதனுஷா.

திட்டமான அடவுகள். அங்க சுத்தம். அபிநயச் செழிப்பு அனைத்துடனுமிணைந்த அவரின் அலாதியான முகபாவம் பிரமிப்பூட்டியது. நீலாம்பரியில் மீனாக்ஷி தாலாட்டு. அந்த 13 வயது சிறுமி காண்பித்த தாய்மை பாவம் லண்டனிலே ஒரு புது அநுபவமாகவே இருக்கும்.

அப்படியே மற்றைய பதங்களும். "தெருவில் வாராளோ ..."பதத்தில் நவரசங்களையும்வெளிப்படுத்தினார். பாபநாசம் சிவனின் "நீ இந்த மாயம்..." தன்யாசி வர்ணம். நன்கு நிர்வகித்து ஆடினார். காரைக்குடி கிருஷ்ணமூர்த்த
மிருதங்கம். குற்றாலம் நாகராஜன்பாட்டு
எங்கேயோ அழைத்துச் சென்றார்கள்
புஷ்பாஞ்சலி அலாரிப்பிலும் தில்லா
னாவிலும் காரைக்குடயின்லய முத்த
ரையை தனுஷா துல்லியமாக வெளிப்
படுத்தினார். கடைசியாக பாபாவுக்கு
மங்கள ஆரத்தி. பலே தனுஷா. பலே
நாகராஜன்.

தனுஷாவுக்கு திருஷ்டி கழிக்க வேண்
டும் என்றுதானோ என்னவோ மு
ஒப்பனை சரியாக இல்லை.

நிகழ்ச்சியிலே நன்றி சொன்ன
இளைய சகோதரி தன்னுடைய அரங்
கேற்றத்துக்கும் கட்டியம் சொன்னார்
இந்த ஆண்டில் தொடரப்போகும் பலவற்
றுக்கான கட்டியம் அது.

-பைரவி

# கவிஞனுக்குக் கவிதாஞ்சலி

– ஸுஜாதா விஜயராகவன்

மேசை விளக்கின் வெளிச்ச வட்டம். எழுதிக் கொண்டிருக்கும் கவிஞன் எழுந்து நடக்கிறான். கண்கள் கனவில் மிதக்கக் கவிதை ஒன்று பிறக்கிறது அவன் நாவில். மாடிப் படி ஒன்றில் கால் ஊன்றி அமர்ந்து மறுபடி நினைத்துப் பார்க்கிறான். கவிதை இனிக்கிறது.

மோகன ராக ஸ்வரங்கள் மென்மை யாய் உருப்பெற, இளம் பெண்டிர் இருவர் பரதநாட்டிய அடவுகளோடு நடை பயிலுகின்றனர். காதலும், களவொழுக்கமும், வேட்கையும் விரகதாபமும், கூடலும் பிரிவும் ஆங்கே நட்பின் நெருக்கத்தில் பகிர்ந்துகொள்ளப்படும் ரகசியங்கள்.

கவிதையை இசை அமைத்துப் பாடலாம். அந்தப் பாடலுக்கு அபிநயமும், நிருத்தமும் செய்யலாம். இது மரபு. ஆனால் இங்கு கவிதை, இசை, நாட்டியம் மூன்றும் தனித் தனியே



ஒன்றுக்கொன்று தொடர் பின்றியும் அதே சமயம் கண்ணுக்கு
புலப்படாத ஈர்ப்புச் சக்தி யால் தத்தம் பாதையில் சுழன்று ஒ
ஒழுங்கையும், உறவையும் காட்டும் விண் கோள்களைப் போ
ஒரு புதிய கலை வடிவமா கவும் பரிணமித்தன.

சென்னையை அடுத்த இஞ்சம் பாக்கத்தில் அலைகடல் ஓ
த்தில் இயங்கும் 'பரிணாம்' அரங்கி லும், வட்ட வடிவ மா
தொன்மை எழில் ப
த்த மியூசியம் அர
கிலும் அண்மையி
மறைந்த கவிஞர், பேர
சிரியர்,மொழிபெயர்
பாளர், பன் மொ
வல்லுநர் ஏ.கே. ராம
னுஜனுக்குச் செலு
திய நினைவு அஞ்
லியே மேலே கூற
பட்ட நிகழ்ச்சி.

சிக்காகோ பல்
லைக் கழகத்தில் ப
லாண்டு பணியாற்றி
அறிஞர் ஏ.கே. ராம
னுஜன், கன்னட, தமி
இலக்கியங்களை ஆ
கிலத்தில் மொழிெ
யர்த்துப் பண்டை
கவிதைகளுக்கு இ



படிப்பகம்

www.padippakam.com

றய மொழியில் புதுப் பிறவி தந்தவர். சங்க இலக்கியம், ஆழ் பார் பாடல்கள் முதலியவற்றில் தன் மொழிபெயர்ப்பின்மூலம் திய ருசி காட்டியவர். கவிதை, உரைநடை, நாடகம் என்று பல றை அறிஞர்களுடனும் நெருங்கிய தொடர்புகொண்டு, எழுத்து ற்றும் மேடைக்கலைகளில் பல புதிய பரிசோதனைகளுக்கு ரித்திட்டவர்.

அவர் மொழிபெயர்த்த சங்க இலக்கியப் பாடல்களில்ஐந்து அகத்திணைப் பாடல்களைத் தொகுத்து 'அவள் சொன்னவை' (What She Said) என்ற தலைப்பில் நாட்டிய வடிவமைத்து னடா வாழ் இந்தியக் கலைஞர் கீதாஞ்சலி கோலநாட் சென்னையைச் சார்ந்த 'அரங்கம்' அமைப்புடன் இணைந்து ழங்கினார். எழுத்தாளர் வசந்தி சங்கரநாராயணன் கவிதை, இசை, நாட்டியம், நாடகம் ஆகிய அமைப்புக்களை ஒன்றி ணைத்து நிகழ்ச்சி நடைபெறக் காரணகர்த்தாவாக விளங்கினார்.

கலாக்ஷேத்ராவில் பரதம் பயின்று, பின்னர் அடையார் லக்ஷ் மன், தனஞ்சயன், கலாநிதி நாராயணன். சந்திரலேகா, நானா காஸர், மேனகா தக்கர் ஆகிய நடன ஆசிரியர்களிடமும் பயிற்சி பெற்றவர் கீதாஞ்சலி கோல நாட்.

"மேலை நாட்டில் பிறந்து வளர்ந்ததால் எனது அனுபவங் கள் வித்தியாசமானவை. இந் தியப் பெண்களது அனுபவங் களினின்று வேறுபட்டவை. எனவே சம்பிரதாய பரத நாட்டி யத்தின் சிருங்காரம் பற்றிய கண் ணோட்டத்தை என்னால் ஏற் றுக்கொள்ள முயைவில்லை" என்கிறார் கீதாஞ்சலி. "மேலும், கிறிஸ்தவப் பின்னணியில் வந்த என்னால் பரதநாட்டியத்தில் காணப்படும் பக்தி உணர்வில் மனம் தோய முடியவில்லை. எனவே புதிதாக ஒன்றை உருவா க்கும் முயற்சி எனக்கு அவசி யமாயிற்று."



பரதநாட்டியத்தின் கச்சி தமான வரிவடிவங்களும், உணர்ச்சி வெளிப்பாடும், லய நுணுக்கங்களும் அவரைக் கவர்ந்த அம்சங்கள். எனவே, அவற்றின் துணைக் கொண்டு புதியதொரு கலை வடிவமாக 'அவள் சொன்னவை' சில ஆண்டுகளுக்கு முன்பே டில்லியில் அவரால் அரங் கேற றப்பட்டது. தற்சமயம் பல புதிய அம்சங்களுடனும், மாறுதல் களுடனும் முற்றிலும் புதிய நிகழ்ச்சியாகத் திகழ்ந்தது இந் நினை பாஞ்சலி.

நமனமாடிய அனிதா ரத்னம் அடையார் லக்ஷ்மனின் மாணவி. சம்யுக்தா ராமகிருஷ்ணா திருமதி ராதாவின் மாணவி. அவர்களிடையே இருந்த வயது வேறுபாடும் பொருத்தமாகவே யம் சேர்த்தது. அனுபவம் வாய்ந்த தெரிவைப் பருவப் பெண்ணொருத்தியிடம், கன்னி இளம் பெண் தனது முதல் காதல் அனுபவங்களை உவகையுடனும், நாணத்துடனும், சற்றே பேதைமையுடனும் பகிர்ந்துகொள்வதாகச் சித்தரிக்க வழி வகுத்தது.

'பாடல் வரிகளுக்கு நேரிடையான விளக்கமாக அபிநயத்தை நான் அமைக்க முயற்சிக்கவில்லை.

எந்தச் சூழ்நிலையில் இந்தப் பாடல் பாடல் வரிகள் உரைக் கப்பட்டிருக்கலாம் என்பதைக் காட்சியாக அமைத்துள்ளேன்' என்கிறார் கீதாஞ்சலி. 'இரு மகளிர் நடந்துகொண்டும், அமர்ந் துகொண்டும், நீராடிக் கொண்டும் நெல் குற்றிக்கொண்டும் பரிமாறிக்கொள்ளும் அந்தரங்கத் தருணங்களை இந்த ஆடலில் சித்தரித்திருக்கிறேன்.

ஜோடி நாட்டியம் போல் ஒரே மாதிரி அசைவுகளைத் தவிர்த்து, இருவரும் சம காலத்தில் வேவ்வேறான அசை வுகளையும், நிலைகளையும் இசைவுபடுத்திக் காட்டியது புதுமை. நெல் குற்றும் உலக்கையைத் தாங்கி ஆடிய நடனம் பாலு ணர்வையும், கலவி நிலையையும் குறிப்பால் உணர்த்திய போதும் விரசம் தோன்றாதது சிறப்பு. வெறும் தம்புராவின் ரீங் காரத்தைப் பின்னணியாகக் கொண்டு நிகழ்த்திய நான்காவது பாடல் நினைவில் நீங்கா ஓவியமாய் இடம்பிடித்தது. 'காதலன் தொடத் தொட விலகும் பசலை நோய், அவன் விட விட மறுபடி யும் வந்து பரவுகிறது' என்று பொருள்படும் இந்தக் குறுந்தொ கைப் பாடல் காட்சியில் மேடை அலங்காரப் பொருளாய் வைக்கப் பட்டிருந்த ஒரு வார்ப்பு உருளிப் பாத்திரமும் கதாபாத்திர மாகவே மாறியது.

நடேஷ் தலைமையிலான கூத்துப்பட்டறைக் குழுவினரின் திறமையான ஒளி அமைப்பில் பாத்திரத்து நீரின் பிரதிபலிப்பு அனிதா ரத்னத்தின் முகத்தில் சிலுசிலுத்து மறைந்தது. சொல்லப்போனால் நாட்டியத்தோடு இணையாகவே ஒளியும் நிழலும் நடமிட்டுக் கனவுத் தோற்றம் படைத்தன.

நாட்டியத்தை வழிநடத்திச் செல்லுவதாக இசை அமைக்கப் படாத இப் புது வடிவத்தில் நட்டுவாங்கம் செய்த பிரியா மகாதேவனும், மிருதங்க வித்வான் நெல்லை கண்ணனும் அணு பிசகாமல் ஆடுபவர்களை ஆங்காங்கே அடியொற்றியும், வழிநடத்தியும் வந்த திறன் பாராட்டுக்குரியது. கர்னாடக இசை மரபினின்று சற்றும் வழுவாது பாடிய அகிலா கிருஷ்ணமூர்த்தியின் குரல் வளம் திண்மை சேர்த்தது.

புது முயற்சியின் சிற்சில குறைபாடுகள் வரும் நிகழ்ச்சிகளில் தவிர்க்கப்படலாம். கவிதைகளை உரைத்து நடித்த கே.சி. மானவேந்திரநாத் இடையிடையே ராமானுஜனின் மற்றக் கவிதைகளையும் கூறியது சற்றுக் குழப்பம் விளைவித்தது. மயிலின் ஆடலை நினைவுபடுத்துமுகமாக நீலம், பச்சை நிறச் சேலைகளைக் கையில் அளாவியவாறு ஆடிய தில்லானா வலிந்து புணையப்பட்ட உத்தியாக நின்றதே தவிரக் காட்சியைக் குறிப்பால் உணர்த்தத் தவறியது.

இன்னொரு தளத்தில் காண்கையில் இந் நிகழ்ச்சி சம்பிரதாயமான பரதநாட்டியமாக இல்லாது போனாலும், அலாரிப்பு, ஜதிஸ்வரம், வர்ணம், பதம், தில்லானா என்ற கட்டுக்கோப்பில் அடங்கியதாகவும் எடுத்துக்கொள்ளலாம்.

கவிதையின் வெளிப்படையான விளக்கமாக இல்லாமல், குறிப்பால் த்வனிப்பொருளை உணர்த்திக் கவிதையை அல்லாது கவிதை அனுபவத்தையே உருவாக்கித் தந்ததுதான் இதன் தனித்தன்மை. நாட்டிய சாஸ்திரத்தில் 'ரஸோற்பத்தி என்பதும் அதுவே அல்லவா?

மொழிபெயர்ப்பே இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்துமாயின் அசலான கவிதை எத்துணைத்து என்ற வியப்பு ஒன்றே நிலைத்தது. ராமானுஜனின் குறிக்கோளும் அதுவாகத்தான் இருந்திருக்கவேண்டும். □



படிப்பகம்

www.padippakam.com

சிறப்புக் கட்டுரை

# வரலாற்று நாயகி தாசி அஞ்சுகம்
## பிரிட்டிஷ் நூலகத்தில் கண்ட அற்புதம்

சோ. சிவபாதசுந்தரம்

ஐம்பது ஆண்களுக்கு முன்னர் இலங்கை வானொலியில் தமிழ் நிகழ்ச்சிப் பொறுப்பாளராயிருந்த போது, சங்கீத வாத்தியார் பலருடன் பழக நேர்ந்தது. அனே கமாக அந்த நாட்களில் கொழும்பில் சங்கீ தம் சொல்லிக்கொடுத்தவர்கள் இந்தியப் பரம்பரையைச் சேர்ந்தவர்களாக இருந்தார் கள். ஒரு சிலர் பிராமண வகுப்பினர். வேறு சிலர் நாதசுரப் பரம்பரையினர். வீணை சண் முகம்பிள்ளை என்ற முதியவர் முன்பு நாத சுரம் வாசித்துக் கொண்டிருந்தவர், பின்பு அதை விட்டு, வீணை வித்வானாகப் பல ருக்கு முறையாக வீணை சொல்லிக் கொடுத் துக் கொண்டிருந்தார். நல்ல ஞானஸ்தர். கர்நாடக இசை சம்பந்தமாக ஏராளம் உருப்ப டிகளைத் தெரிந்து வைத்திருந்தார்.

வானொலி நிலையத்தில் ஒரு நாள் நான், சிலப்பதிகாரத்தில், நாரதர் அபஸ்வரம் இழைத்து இந்திர சபையில் ஊர் வசியின் நட னத்தில் குழப்பம் செய்ததால் இந்தி ரன் சாபம் பெற்ற ஊர்வசி, பூலோ கத்தில் மாதவியா கப் பிறந்த காட் சியை ஒலிச் சித்திர மாக நான்கு வீணை களை வைத்து ஒத் திகை செய்யும் போது, வீணை சண்முகம்பிள்ளை யும் அங்கிருந்தார். ஒத்திகை முடிவில் சண்முகம்பிள்ளை, தனது அத்தை ஒரு வர் தேவதாசிகள் பரம்பரையைப் பற்றி, புராணங் களிலும் சரித்திரத் திலுமிருந்து செய் திகள் சேகரித்து ஒரு புத்தகம் எழுதி யிருந்தார் என்றும், சேர் பொன். இராமநாதன் குடும்பத்தைச் சேர்ந்த சிறிகாந்தா என்பவர் இதற்கு உதவி னார் என்றும் ஒரு தகவலைச் சொன்னார். அந்தப் புத்தகம் அவரிடத்தில் இல்லை. பின்பு நானும் கொழும்பிலே பலரிடம் விசா ரித்தும் கிடைக்கவில்லை.



இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், லண் டனில் பிரிட்டிஷ் நூலகத்தின் கீழைத்தேசப் பிரிவிலுள்ள பழைய தமிழ் நூல்களில், "உருத்திர கணிகையர் கதாசாரத் திரட்டு" என்ற பெயரில் ஒரு புத்தகம் எதிர்ப்பட்டது. என் கண்களை நான் நம்பவில்லை. இதன் ஆசிரியர் பெயர், "கொழும்பு சிவகாமி யம்பிகா சமேத பொன்னம்பலவாணேசருக்கு அடிமை பூண்ட கா.கமலாம்பிகையின் புத் திரி அஞ்சுகம்" என்று முதல் பக்கத்தில் தெளிவாகக் காணப்பட்டது. நூலைப் புரட் டிப் பார்த்ததில், புராண இதிகாச காலத்துத் தாசிகள் முதல், ஆசிரியை அஞ்சுகத்தின் மூத்த ஆறு தலைமுறையினர் வரலாறும் விவ ரமாக எழுதப்பட் டிருப்பதைப் பார்த் தேன். ஆசிரியை அஞ்சுகம், தனது பாட்டியார் காமா ட்சி முதலாகச் சொல்லியிருக்கும் வரலாற்றின் சுருக் கத்தை இங்கு பார்க் கலாம். யாழ்ப் பாணக் கலாச் சாரத்தின் சென்ற நூற்றாண்டு வடி வத்தின் ஓர் அம் சத்தை இங்கு காண லாம்.



1850ம் ஆண்டு யாழ்ப்பாணத்து கைதடி மணியகா ரர் காசிநாத முதலி யாரின் மகன், வேலப்ப முதலியார் தென்னிந்தி யாவில் குளிக்கரை விஸ்வ நாதேஸ்வரர் கோ வில் திருவிழா ஒன் றில் காமாட்சி என்ற தாசியின் நட னத்தைப் பார்க் கிறார். இந்தக் காமாட்சியின் கொள்ளுப்பாட்டி (பாட்டியின் தாயார்) திருக் கண் ணமங்கை



படிப்பகம்

அபிஷேக வல்லி என்பவர் அவர் காலத்தில் கலையுலகத்தில் புகழ்பெற்று விளங்கியவர். அவர் வழிவந்த காமாட்சியின் நடனத்தைப் பார்த்த வேலப்ப முதலியார், உரியவர்களுடன் ஒப்பந்தம் பேசி, காமாட்சியையும், பதினொரு வயதான அவர் பெண் கமலாம்பிகையையும் அழைத்துக்கொண்டு கைதடிக்குத் திரும்பினார். பல காலமாக யாழ்ப்பாணத்தவர் தென்னிந்திய நடன மாதர்களை, ஒப்பந்தம் பேசி, யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வந்து கோவில் திருவிழாக்களில் "சின்ன மேளம்" என்ற பெயரில் நாட்டியமாட ஏற்பாடு செய்வது பெருவழக்காயிருந்து வந்தது. அளவெட்டி, இணுவில் முதலிய இடங்களில் நாதஸ்வர தவில் இசைக் குழுவினர் பரம்பரை, கோவில் திருவிழாக்களுக்காக வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் சந்ததியார் என்பதைக் காணலாம்.

காமாட்சியின் புதல்வி கமலாம்பிகையின் நாட்டியச் சிறப்பைக் கேள்விப்பட்ட கொழும்புப் பிரமுகர் ஒருவர் அதில் அக்கறை கொண்டார். அவர் பெயர் பொன்னம்பல முதலியார். இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றிருந்த சேர். பொன். இராமநாதனின் தந்தை பொன்னம்பல முதலியார்தான் அவர். இவர் தமது கல்யாண வைபவத்தில் கமலாம்பிகையின் நாட்டியம் இடம்பெற வேண்டும் என்ற விருப்பத்தில், வேலப்ப முதலியார் மூலம் ஏற்பாடு செய்தார். கொழும்பிலே அது ஒரு முக்கிய மணவிழாவாகப் பேசப்பட்டது.

கைதடியில் சில காலம் தங்கியிருந்த காமாட்சி பின்னர் பெண் கமலாம்பிகையுடன் குளிக்ரைக்குத் திரும்பியதும், நோய்வாய்ப்பட்டுக் காலமானார். தாயாக வளர்ந்துவிட்ட கமலாம்பிகை, தனக்குப் பிறந்த புதல்வி சந்தானவல்லியையும் அழைத்துக்கொண்டு பழையபடி கைதடிக்கே வந்துவிட்டார். இதற்கிடையில் கொழும்புப் பிரபு பொன்னம்பல முதலியார் கொழும்பு நகரிலே ஒரு சிவன்கோவில் ஸ்தாபிக்கத் தொடங்கி, தமிழ்நாட்டு சிற்பிகளைக் கொண்டு "பொன்னம்பலவாணே ஸ்வரம்" என்ற பெயரில் ஓர் ஆலயம் எழுப்பி,அதன் கும்பாபிஷேக வைபவத்தில் கமலாம்பிகையின் நடனத்தையும் ஏற்பாடு செய்ய விரும்பினார். உடனே கைதடிக்கு தகவல் அனுப்பி, "எனது கல்யாணத்தில் நீ ஆடினாய். இப்போது நீ பொன்னம்பலவாணேஸ்வரர் கும்பாபிஷேகத்தில் உன் ஆடலைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்" என செய்தி அனுப்பினார். அந்தக் கைங்கரியம் நிறைவேறியதும், கமலாம்பிகையும், மகள் சந்தானவல்லியும் கொழும்பிலே தங்கி, பொன்னம்பலவாணேசருக்கு சேவை செய்யலானார்கள். சோடசோபசாரங்களுடன் நடனமும் சமர்ப்பிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து சிறுமி சந்தானவல்லிக்கு அங்கேயே பொட்டுக்கட்டு சடங்கு நடந்தது. அவளுக்குப் பிறகு மூன்று சகோதரிகள் பிறந்து மடிந்தார்கள். நாலாவதாகப் பிறந்தவள்தான் இந்த வரலாற்றை எழுதிய அஞ்சுகம். இவளுடைய பிரதாபம் வெகுசிறப்பானது. அஞ்சுகம் மாயவரம் கந்தசாமி நட்டுவனாரிடம் பரதமும், மைசூர் சமஸ்தான வித்வான் கிருஷ்ணசாமி முதலியாரிடமும் திருச்சி அழகிரிசாமி ரெட்டியாரிடமும் வாய்ப்பாட்டும், திருநெல்வேலி சீதாராம பாகவதரிடம் வீணையும் பயின்று கொண்டார். யாழ்ப்பாணம் வித்வான் நாகலிங்கம் என்பவரிடம் இந்துஸ்தானி இசையும் கற்றார். இது மாத்திரமல்ல யாழ்ப்பாணம் குழந்தைவேல்பிள்ளை உபாத்தியாயரிடம் தமிழ் இலக்கியமும் கற்று, தனது பன்னிரண்டாவது வயதில் பொன்னம்பலவாணேசருக்கு அடிமையாய் பொட்டுக்கட்டி, பதினாறாவது வயதில் வேதாரண்யம் சுந்தரேசக் குருக்களிடம் சிவதீட்சை பெற்று, கொழும்பு பிரபல வர்த்தகர் சின்னையாபிள்ளையின் 'அபிமான ஸ்திரியாக' கடந்த 25 ஆண்டுகளாக வாழ்கிறேன்" என்று எழுதுகிறார் அஞ்சுகம். இந்த நூல் எழுதப்பட்டது சாதாரணவருடம் (1910)'

அஞ்சுகத்தின் கடைசி சகோதரன் குழந்தைவேல், நட்டுவாங்கத்தில் வல்லவராக விளங்கினார் என்றும், அவருடைய மகன் சண்முகம்பிள்ளை வீணையிலும் வாய்ப்பாட்டிலும் நாதஸ்வரத்திலும் வல்லவர் என்றும் குறிப்பிடுகிறார். பிற்காலத்தில் இந்தக் குடும்பங்களுக்கு, பொன்னம்பல முதலியாரின் மகன் குமாரசாமி முதலியாரும் அவருக்குப் பின் இராமநாதனும் தொடர்ந்து சம்ரக்ஷணை செய்துவந்தார்கள் என்றும் நன்றியுடன் குறிப்பிடுகிறார் அஞ்சுகம்.

கொழும்பிலே சண்முகம் பிள்ளையிடம் தான் என் மனைவி வீணை கற்றுக் கொண்டார். அவருடைய ஒரேமகன் குழந்தை வேல் ஒருகாலத்தில் வீணை வித்வானாகவும் வாய்ப்பாட்டு வித்வானாவும் விளங்கினார். ஆனால் பிற்காலத்தில் மதுபானப்பழக்கம் அவரை ஆட்கொண்டது. கடைசியாக சென்னையில் நான் அவரைப் பார்த்தது 1966இல். அந்தக் குடும்பத்தின் கதை அத்தோடு முடிந்தது.

உலக அரசியல் அதிசயங்கள் பல இன்று அரங்கேறும் இடம் தமிழ்நாடு. மக்களாட்சி என்ற பெயரில் தேர்தலுக்கு நின்று ஆட்சிக்கு வந்துள்ள முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர், டாக்டர், டாக்டர் ஜெயலலிதா சேர்த்துக்கொண்டே வருகிறார் பட்டங்களை, பட்டயங்களை, பட்டாக்களை. ஊழலோ ஊழல் என்று எதிர்க்கட்சிகள் ஒன்றரை வருட காலமாகச் சொல்லி வருகின்றன. இதோ பார் இன்றே காலி, நாளை காலி என்று வாய்தா சொல்லிவரும் டாக்டர் (இது படித்துப் பெற்ற அசல் டாக்டர் பட்டம்) சுப்பிரமணியம் சுவாமி டெல்லிக்கும் சென்னைக்கும் பறந்துகொண்டிருக் கிறார். அவரால் அம்மாவை அசைக்க முடியவில்லை.

அண்ணா (அம்மா?) திராவிட முன்னேற்றக் கழக மூத்த தலைவர்களை விடவும் பணிவாகத் தாள் பணிந்து, தொழுது வலம்வந்துகொண்டிருந்த முன்னாள் பங்காளிகளான இந்திரா காங்கிரஸ் கட்சியினர் இன்று எதிரணியில். மூச்சை இழுத்துவிடக்கூட முப்பது முறை யோசிக்கும் பிரதமர் நரசிம்மராவிடம் 'நசுக்குங்கள் இந்த அம்மாவை' என்கிறார்கள் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள். அவர்களிடையேயும் இரண்டு, மூன்று அணிகள். டெல்லியிலுள்ள பிற மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ்காரர்களுக்குத் தமிழ்நாட்டு அரசியலில் அதிக அக்கறை இல்லை. ஜெயலலிதா வெல்லப்பட முடியாதவர் என்பது அவர்கள் கணிப்பு. ஓரளக்கு அது உண்மையே.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு ஜெ. ஆட்சிக்கு வந்தபோது எதிர்க்கட்சிகளை அப்படியே கம்சவதம் செய்து விட்டார் என்றே சொல்லவேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களை அசலாகவே விரல்விட்டு எண்ணிவிடலாம். எந்தெந்தக் கட்சிகளுக்கு இரண்டு உறுப்பினர்கள் இருந்தார்களோ அவர்களில் ஒருவரை உடனடியாக உருட்டிவிட்டார். எம் ஜி ஆர் திமுக, இளையபெருமாளின் சிறுகட்சி, உழவர் உழைப்பாளர் கட்சி என்பன இந்த முறையில் பிளக்கப்பட்டன. ஒரே உறுப்பினர் இருந்த கட்சிகளில் அவர்களை அங்கிருந்து ஏதாவது ஒருவகையில் அப்புறப்படுத்தினார். ஜனதாதளத்தின் குமாரதாஸ் காங்கிரஸ் கட்சிக்குத் தாவத் தூண்டப்பட்டார்-தாண்டினார், அஇஅதிமுக - காங்கிரஸ் உறவு முறியாத நிலையில். திராவிட முன்னேற்றக் கழகத்தில் கோபாலசாமி விவகாரத்தையடுத்து திமுகவின் இரு உறப்பினர்கள் இப்பொழுது இருவேறு அணிகளில் இருக்கிறார்கள். பாட்டாளி மக்கள் கட்சியின் ஒரே உறுப்பினராகிய பண்ருட்டி ராமச்சந்திரன் உள்கட்சிச் சண்டையை அடுத்து கட்சிசார்ப்



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# ஜெய ஜெய ஜெய ஹே!

றவராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். ஒரே சுயேச்சை உறுப்பினர் அஇஅதிமுக ஆதரவைப் பெற்றார்.

சட்டசபைக்கு உள்ளே இப்படியென்றால் வெளியே அன்று தூற்றியவர்கள் இன்று போற்றுகிறார்கள். அம்மாவை எதிர்த்து ஆளுநரிடம் குற்றப் பத்திரிகை கொடுத்த முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் இன்று அம்மாவிடம் அடக்கம். நேற்றுவரை 'விட்டேனா பார்' என்று வீர முழக்கம் செய்தவர் வி. சாமிநாதன். அம்மாவின் பாதம் பணிந்துவிட்டார். கொஞ்சநாள் அங்கும் இங்குமாக அலைந்துகொண்டிருந்த முன்னாள் அமைச்சர் குழந்தைவேலு இப்பொழுது தமிழக அரசின் டெல்லிப் பிரதிநிதி. அரசு விருந்தினர் விடுதியில் தங்கிக் கொள்ளலாம், லெட்டர் ஹெட் அச்சடித்துக்கொள்ளலாம் என்பது தவிர வேறு அதிகாரம் எதுவும் இல்லை. அதனால் என்ன, அம்மாவின் கருணைக் கடாட்சம் போதுமே? அதைத்தான் அமைச்சர்களும் இப்போதைக்குத் தக்க வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காகவே அம்மா அடுத்த தெருவில் ஒரு விழாவில் கலந்துகொண்டாலும் அங்குலத்துக்கு அங்குலம் தோரணங்கள் கட்டி, விமானங்களை வழிமறிக்கும் அளவுக்கு 'கட் அவுட்' களை எழுப்பி விழாவில் விநயமுடன் எழுந்து நின்று சொல்லுக்குச் சொல் கைதட்டி மகிழ்கிறார்கள் மாண்புமிகு மந்திரி பிரதானிகள்.

'உங்களால் மட்டும்தான் அப்படிச் செய்ய இயலுமா' என்று சவால் எழுப்பி கரைவேட்டி கட்டிக்கொள்ளாத குறையாக அம்மாவின் பாதாரவிந்தங்களில் விழுந்து கிடந்தார் முன்னாள் ஆளுநர் பீஷ்ம நாராயண்சிங். என்றோ, எதற்கோ, எப்படியோ செயல்பட்டுவிட்ட பிரதமர் நரசிம்மராவ் சென்றவருடம் பீஷ்மரைத் தூக்கிவிட்டார். கையிலொரு மந்திரக் கோலுடன் ஆந்திர மாநில் அரசியலில் பழம் தின்று கொட்டை போட்ட சென்னா ரெட்டி வந்துசேர்ந்தார் ஆளுநராக. அம்மாவுக்கு அதில் கொஞ்சம் திகில். எவ்வளவு மோசமான மாமியாராக இருந்தாலும் முதல் இரண்டு, மூன்று நாள்களுக்கு மருமகளுடன் சுமுக உறவு கொள்வதுபோல, இருவர் உறவும் முதலில் தொடங்கியது. இருவருக்குமே அகந்தை அதிகம் என்பதனால் விரைவிலேயே இருவரும் மோதிக்கொண்டனர். மோதல் இன்னமும் தொடர்கிறது. இப்போதைக்குத் தமிழ்நாட்டின் ஒரே எதிர்க்கட்சித் தலைவர் கவர்ணர் சென்னா ரெட்டியே. உதிரி எதிர்க்கட்சிகளின் நம்பிக்கை நட்சத்திரமும் அவரே. ஜெயலலிதாவுக்கு எரி நட்சத்திரமும் அவரே.



சென்னா ரெட்டி பதவியேற்றதும் ஜெயலலிதாவை விரட்டுவதற்கே வந்திருக்கிறார் என்று சொல்லப்பட்டது. அவரது 'இல்லை' களெல்லாம் 'ஆமாம்' களாகவே எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால் பிரதமரைக் கிள்ளுக்கீரையாக மதித்த ஜெயலலிதா சென்னா ரெட்டியை ஒரு தோட்டக்காரனாக மட்டுமே மதித்தார். எனினும், வட இந்திய தேர்தல்களில் காங்கிரஸ் பெற்ற வெற்றி, அல்லது சரியாகச் சொல்வதென்றால் பாரதீய ஜனதா கட்சி பெற்ற தோல்வி, ஜெயலலிதா காங்கிரசுடனான உறவை மறுபரிசீலனை செய்யச் செய்தது.

மறுதிருமணம் என்றால் சென்னா ரெட்டி விரட்டப்படவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. ஆக, யாரை விரட்ட யார் அனுப்பப்பட்டாரோ அவரே விரட்டப்படலாம் என்ற நிலை எழுந்தது. பிரதமரின் சமகால அரசியல்வாதியான சென்னா ரெட்டி எதற்கும் எவருக்கும் வளைந்து கொடுப்பவரல்லர். எனவே, எந்த ஆதாயத்துக்காகவும் ரெட்டி காருவை காவு கொடுக்க ராவ் காரு தயாராக இல்லை.

இதற்கிடையே ஜெயலலிதா மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை ஒட்டி அவர் மீது வழக்குத் தொடர சில அரசியல்வாதிகள் கவர்ணர் ரெட்டியிடம் அனுமதி கேட்டுள்ளனர். ஏற்கனவே ஜெயலலிதாமீதான 'தகுதியின்மை' தொடர்பான சுப்பிரமணியம் சுவாமி மற்றும் சிலரது மனு மீது விசாரணை நடத்த தனக்கே அதிகாரம் உண்டு என்று வாதிடும் தலைமைத் தேர்தல் கமிஷனர் சேஷன், எந்த நேரம் என்ன செய்வாரோ தெயாது.

தன்னை எந்த விதத்திலும் எவரும் விசாரிக்க முடியாது, யாருக்கும் எந்த அதிகாரமும் இல்லை என்று சாதிக்கும் ஜெ, கவர்ணர் சென்னா ரெட்டியின் அதிகாரங்களைக் குறைக்க சட்டப்படி (?) தவறு, சட்டசபைப்படி முயற்சி செய்து வருகிறார். பல்கலைக்கழக வேந்தராகவிருக்கும் கவர்ணருக்குப் பதிலாக, முதலமைச்சரே வேந்தர் என்ற சட்ட முன்வடிவு சட்ட சபையில் ஏற்கபட்டிருக்கிறது. ஆனால் அதற்கும் சென்னா ரெட்டியின் ஒப்புதல் வேண்டும். பல்கலைக் கழக வேந்தர் என்ற முறையில் ஏற்கனவே சென்னைப் பல்கலைக் கழக துணைவேந்தர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை அவர் நிராகரித்துவிட்டார், அவரா புதிய சட்டத்துக்கு ஒப்புதல் தரப் போகிறார்? அத்துடன், கவர்ணர் - முதல்வர் சந்திப்பு இப்பொழுது நடைபெறுவதில்லை. கவர்ணரைப் புறக்கணிக்கும் விதத்தில் ஜெயலலிதா குடியரசு தின விழாவையே புறக்கணிக்கக்கூடும் என்ற பேச்சு இப்பொழுது அடிபடுகிறது. □



படிப்பகம்

www.padippakam.com

ஈஸ்ற்ஹாமில்
ஒரு
தமிழ்க் களஞ்சியம்



**STATION SUPER STORE**
6 Station Parade
East Ham, London E6 1JD
Tel: 081-503 4711

படிப்பகம்

www.padippakam.com



## லண்டன் புகைப்படக் கண்காட்சி

# உழைப்பாளர்கள்: செபாஸ்டியோ ஸல்காடோ

யமுனா ராஜேந்திரன்

ஸல்காடோ லத்தீன் அமெரிக்க நாடான பிரேசிலில் 1944 ஆம் ஆண்டு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். உலகப் புகழ் வாய்ந்த புகைப் படக் கலைஞர். 'நீங்கள் உங்கள் கலாச்சாரம் சார்ந்து படம் எடுக்கிறீர்கள். நான் என் கலாச்சாரம் சார்ந்து, என் மக்கள், என் தாய் தந்தையர், என் தத்துவம் சார்ந்து படம் எடுக்கிறேன்' என்கிறார் ஸல்காடோ. மேற்கத்திய புகைப் படக் கலைஞர்களுக்கு அவர் தன்னை இவ்வாறுதான் வெளிப்படுத்திக் கொள்கிறார். உலகின் தலைசிறந்த புகைப்படக் கலைஞருக்கான அத்தனை விருதுகளையும் பெற்றிருக்கிறார். பட்டியல் மிக மிக நீளமானது. இவர் பிரெஞ்சு ரெயில்வே தொழிலாளர்கள் பற்றி எடுத்த 'ரயில்வே தொழிலாளர்கள்' புகைப்படத் தொகுதி பிரெஞ்சு ரயில்வே தொழிலாளர்கள் யூனியனால் புத்தகமாக வெளியிடப்பட்டது.

இவரின் ஏழு ஆண்டுகள் உழைப்பின்பின் முழுமைபெற்ற 'உழைப்பாளர்கள்' புகைப்படத் தொகுதியின் கண்காட்சி 1993 டிசம்பர் இறுதியில் தொடங்கி 94 பெப்ரவரி முதல் வாரம் வரை நடைபெறுகிறது.

தேம்ஸ் நதியின் தென்கரை கலை மையமான 'சவுத்பாங் சென்டரில்' றோயல் பெஸ்ரிவல் ஹால் இரண்டாம் தள மண்டபத்தில் இக் கண்காட்சி நடைபெறுகிறது.

'உழைப்பாளர்கள்: இயந்திர யுகத்தின் அகழ்வாய்வு' என்ற



தலைப்பில் இப் பு
படங்கள் பார்வை
வைக்கப்பட்டுள்ளன

இவர்பற்றி சமீ
தில் பிரிட்டிஷ் தொ
க்காட்சி நிறுவனம்
விவரணப்படம் தி
யிட்டது. லண்டன் 
டியன் பத்திரிகை இ
டனான நேர்மு
ஒன்றை வெளியிட்ட
இவரை நேர்கண்ட
அமென்டா ஹ
கின்சன் என்ற பு
பெற்ற இடதுசாரி எ
தாளர்.

'காதலர்கள் மற்
தோழர்கள்' எனும்
தீன் அமெரிக்
பெண்களின் போ
ட்டக் கவிதை க
மொழிபெயர்த்து வெ
யிட்ட பெண்ம
விவரணப் படத்தி
அதன் லத்தீன், போ
துக்கீசிய, பிரெ
மொழி நேர்முகங்க
இவரே ஆங்கிலத்
மொழிபெயர்த்திருந்த

உழைப்பாளர்
கண்காட்சியில் இ
பெறும் படங்கள் பெ
பாலும் மூன்றாம் உ
நாடுகளில் எடுக்
பட்டிருக்கிறது. சீ
பிரேசில், கியூ
இந்தியா, பங்களாதே
போன்ற நாடுகளி
ஸ்பெயின், பிரான்
பிரிட்டன், அமெரிக்
ரஷ்யா போன்ற ந
களின் தொழிலாளர்கள், தொழிற் கூடங்களிலும் இவை எ
கப்பட்டிருக்கின்றன.

உண்மையில் இவரின் படங்களுக்கான தேர்வு, வா
பற்றிய இவரின் தத்துவப் பார்வைக்கு ஏற்பவே வெ
ப்படுகிறது.



படிப்பகம்

www.padippakam.com



மையில் அவர்களோடு வாழ்கிறேன், அவர்கள் அநுபவங்களைப் புரிந்துகொள்கிறேன் எனும் ஸல்காடோ, புகைப்படங்களைச் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு கொடுப்பதைக் கடமையாகச் செய்கிறார்.

இந்தியாவில் ராஜஸ்தான் கால்வாய்த்திட்டத்திலும் பீஹார் தன்பாத் நிலக்கரிச் சுரங்கங்களிலும் உழைக்கும் தொழிலாளர்களைப் படமெடுத்திருக்கிறார்.

கியூபா, பிரேசில் போன்ற நாடுகளில் கரும்புத் தோட்டத் தொழிலாளர்கள், புகையிலைத் தோட்டங்களில் வேலைசெய்யும் உழைப்பாளர்கள், தங்கச் சுரங்கங்களில் உழைக்கும் உழைப்பாளர்கள் பற்றி எடுத்திருக்கிறார்.

சீனாவில் சைக்கிள் தொழிற்சாலை, அமெரிக்காவில் இறைச்சி பதனிடும் தொழில் கூடம், ரஷ்யாவில் கார் உற்பத்தி இடம், பேருவில் எண்ணெய் கிணறுகள், பிரான்ஸ், பிரிட்டனில் 'யூரோ ரனல்' வேலையிடங்கள், குவைத்தில் எண்ணெய்க் கிணறுகளில் தீயணைக்கப் போராடும் தொழிலாளர்கள் என இவர்களோடு ஏழு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார் ஸல்காடோ.

நூற்றுக் கணக்கில் நான் பார்த்த படங்கள் ஒன்றன் மீதொன்றாக மதனதைக் கனக்கச் செய்கின்றன. சந்தோஷத்துடன் அல்ல, வேதனையுடனும் கோபத்துடனும் தான் கண்காட்சியை விட்டு வெளியே வந்தேன்.

மனசுவிட்டு சத்தம்போட்டு அழவேண்டும் போலிருந்தது. முகம் முழுக்கக் கண்கள் விரிய சிரிக்கும் தேயிலைத் தோட்டத்து கறுப்புச் சிறுவன்.

அத்தரும், ஜவ்வாதும், பன்னீரும் வெள்ளையர்க்குப் புட்டிகளில் அடைக்கப்பட, அருகில் தன் அன்புத் தங்கையை தோளில் சுமந்து கள்ளமின்றிச் சிரிக்கும் ஏழைச் சிறுவன்.

குவாட்டமாலா நாட்டின் மாயா இனத்தின் மூத்த மனிதன்.

வீடுதிரும்பும் சாப்பாட்டு வண்டியை தள்ளிப் போடும் இந்திய நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளியின் முதுகில் சரியும் குழந்தையைப் பற்றும் மனைவி, ஓடிவரும் சட்டையற்ற சிறுவன்.

'போர் வீரன்' மாதிரி வீசி வீசி தனது பெரிய கத்தியால் கரும்புகளை வெட்டித் தள்ளும் பிரேசில் விவசாயி.

1. உழைப்பின் பெருமிதம், படைப்பில் தொழிலாளி பெறும் டைப்பு உன்னதம், உழைப்பில் ஆர்வம் போன்றவை முதல் ட்டம்.

2. உழைப்பவனுக்கு அவன் படைத்த பொருள் அந்நிய ாயிருக்கும்அவலம். அந்தி வேளையில் வீட்டில் இருளுடன் றங்கும் வறுமை. இது இரண்டாவது கட்டம்

3. உலகின் தெற்கிலும் கிழக்கிலுமாக (மூன்றாம் உலக ாடுகள்) உற்பத்தி செய்யப்படும் படைப்பு ஆதாரங்கள், மேற் லும் வடக்கிலுமாக (ஐரோப்பா, அமெரிக்கா) நுகர் பாடுகளாகச் சேரும் குரூரம். இது மூன்றாவது கட்டம்.

4. நுகர்வு மறுக்கப்பட்டு, வறுமையினால் வாடும் மூன்றாம் லகத் தொழிலாளர், வேலையில்லாமல் சாகும் மேற்கு, அமெ க்கத் தொழிலாளர். இவர்கள் உலகை இணைக்க, உலகை ஒரு காக்க, சிந்தும் உதிரமும் வியர்வையும், இது நான்காவது ட்டம்.

5. இதைப்பற்றிய பலமான விவாதத்தைத் தூண் வேண்டும். இந்த விவாதம் அரசியல் மாற்றம், சமூக மாற்றப் போராட்டங்கள் சார்ந்தது. இது ஐந்தாவது கட்டம்.

அவர்பற்றிய விவரணப்படம், நேர் கம், அவரது படைப்புக்களில் ஆழ்ந் போது இந்த அடையாளங்களைக் காண டிந்தது.

'அழகும் உன்னதமும் மேற்குலகுக்கும் ணக்கார நாடுகளுக்கும் மட்டுமே உரி வை அல்ல. எதியோப்பியா வறுமையில் ாடும் நெருக்கடி மிகுந்த நாடு. அம்மக்கள் ன்பப் படுகிறார்கள். உண்மைதான். ஆனால், எதியோப்பிய மக்கள் உலகில் மிக அழகான மக்கள், மிக உன்னதமான மக்கள்' ன்கின்ற ஸல்காடோ, எதியோப்பிய வரட் பற்றிய புகைப்படத் தொகுதிக் கண் ாட்சியை உலகெங்கும் நடத்தியிருக்கிறார்.

'நாத்தீக மனிதாபிமானியான ஸல்காடோ, பைபிளில் வருகிற மாதிரி ான உன்னத மனிதர்களை உருவாக் கிறார்' என்கிறார்கள் விமர்சகர்கள்.

இந்தப் புகைப்படங்களை எடுக்கின் போது அம் மக்களை நான் காட்சிப் பொரு ாகக் காட்ட விரும்பவில்லை. உண்





படிப்பகம்

www.padippakam.com

'நடனம் போல' தமது வேலைகளை லாவகமாகச் செய்யும் ராஜஸ்தான் கால் வாய் கட்டுமாணப் பெண்கள்.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பாரம் சுமந்தபடி எறும்புக் கூட்டம் போல மேலேறும் பிரேசில் சுரங்கத் தொழிலாளி.

ஓய்வெடுக்கும் கரும்புத் தோட்டத்துத் தொழிலாளர் கறுப்பின மக்கள். புராதன இந்திய இன மக்கள்.

உடல் முழுக்க பெருத்த ஆபரணங்களுடன் காற்றில் மண்வெட்டி வீசும் இந்திய ராஜஸ்தான் பாலைவனப் பெண் தொழிலாளி.

இன்னும், இன்னும்...

நினைவில் நிற்கும் அழுத்தமான இன்னும் இரண்டு விடயங்கள்:



இவர் பற்றிய விவரணப் படத்தின் இறுதிக் காட்சி இது. கரும்புத் தோட்டத்தின் கறுப்பு இன தொழிலாளி தன் இடுப்பில் ஒரு பெண் குழந்தையை வைத்துக் கொண்டிருக்கிறார். காலடியில் மூன்று குழந்தைகள். அருகில் மனைவி. வறுமையும், ஏழ்மையும் நிறைந்த குடிசை. அவர் சிரிக்க முயல்கிறார். படம் முடிகிறது.

கண்காட்சியில் பார்த்த ஒரு புகைப்படம்:

கூலி போதாது என்பதற்காகவோ வேலைப் பிரச்னை சம்பந்தமாகவோ ஒரு தங்கச் சுரங்கத் தொழிலாளி கலகக் குரல் எழுப்புகிறான். அவன் சட்டையைப் பிடித்துக்கொண்டு குண்டாந் தடியுடன் வன்மமாக நிற்கிறான் பொலிஸ். இச் சம்பவம் புகைப்படமாகியிருக்கிறது.

சித்திரச் சோலைகளே உம்மை நன்கு
திருத்த இப்பாரினிலே - முன்னர்
எத்தனை தோழர்கள் இரத்தம் சொரிந்தனரோ
உந்தன் வேரினிலே.
ஆர்த்திடும் எந்திரக் கூட்டங்களே - உங்கள்
ஆதி அந்தம் சொல்லவோ - நீங்கள்
ஊர்த் தொழிலாளர் உழைத்த உழைப்பினில்
உதித்தது மெய்யல்லவோ?
- பாரதிதாசன்.

CAKES FOR ALL OCCASIONS



CAKES MADE AND DECORATED TO YOUR SPECIFICATIONS

ANY SHAPE ANY SIZE AT REASONABLE RATES

TEL: 081-881 5043

CATERING FOR SMALL PARTIES ALSO UNDERTAKEN



படிப்பகம்

www.padippakam.com


# குமார் சொப்

குஷியான ஆடைத்தேர்வு

80 Bld. Barbes, 75018 Paris
Metro: Marcadet Poissonniers
Tel:42 59 11 52 Fax:42 59 35 00

# குமார் ஜுவல்ஸ்

குதூகலமான நகைத் தேர்வு

குறைவற்ற நிறைவான சேவையே நிரந்தரம்
80 Bld. Barbes, 75018 Paris
Tel: 42 59 11 52 Fax: 42 59 35 00





# குமார் றேட்ஸ் சென்ரர்

குடும்பத்துடன் பார்க்க வீடியோ

193, Rue du Fg. St. Denis, 75010 Paris
Metro: Gare du Nord / La Chapelle
Tel: 42 05 41 36


படிப்பகம்

www.padippakam.com



# 2 லட்சம் அகதிகள் தலைமறைவு

## புதிய சட்டம் எப்படி செயல்படுகிறது?

கரகன்

ஜெர்மனியின் புதிய அகதிச் சட்டம் ஜுலையில் புழக்கத்திற்கு வந்து, ஆறு மாதம் கடந்து விட்டது. சட்டம் எதைத் சாதித்தது? ஜெர்மனி மட்டுமல்ல, அகதித் தொல்லையால் அவதிப்படும் அத்தனை மேற்குலக நாடுகளும், குறிப்பாக ஐரோப்பிய கூட்டுக் குடும்ப நாடுகள்- இதைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கின்றன.

1991இலே ஜெர்மனிக்கு அகதிகளாக வந்தவர்களின் தொகை, ஏறத்தாழ, ஒரு லட்சத்து 50 ஆயிரம். அடுத்த ஆண்டில் இந்தத் தொகை 4 லட்சத்து 38ஆயிரம். ஜெர்மனியை அதிர வைத்த பெருந் தொகை இது. 1992இல் வந்த அகதிகளில் 10 ஆயிரத்துக்கும் குறைவானவர்களுக்கே அதாவது, 4.3 சதவீதத்தினருக்கு மட்டுமே அகதிநிலை அங்கீகாரம் கிடைத்தது. மீதிப் பேரை, தற்காலிகமாக விடுதிகளில் குடியமர்த்தி, உணவு கொடுக்கவேண்டிய நிலை ஜெர்மனிக்கு. வெவ்வேறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு, வேண்டாத ஒரு சுமையாக, அகதிகளைப் பராமரிக்கும் பணி வந்து சேர்ந்தது.

தஞ்சம் தொடர்பான சட்டம் மாறுவதற்கும், இந்த 'அகதிப் பாய்ச்சல்' ஒரு காரணமாக அமைந்தது. ஜெர்மனியைச் சூழவுள்ள ஏனைய நாடுகள் பல, முன்னாள் கிழக்கு ஐரோப்பிய வல்லரசுச் சூழலில் தளைத்தவை; முன்னாள் சோவியத் யூனியனின் கொல்லையிலே வளர்ந்தவை. அங்கெல்லாம் இரும்புத்திரை கவிந்திருப்பதாக ஓர் அச்சுறுத்தல். அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருப்பதாக கூற்று. இனி சிறிதேனும் ஜனநாயக மூச்சு விடுபவர்கள் சிறையிலே சித்திரவதைக்கு உட்டுத்தப்படுவதாக, ஒரு கழிவிரக்கம். இதனால், அரசியல் தஞ்சம் கோரி தரைமார்க்கமாகப் பாய்ந்தோடி வருபவர்களை, இத்தனை காலமும் ஜெர்மனியின் ஆதரவுக் கரங்கள் அணைத்து ஏற்றுக்கொண்டன. ஆனால்-சோவியத் யூனியன் சிதிலமாகச் சிதைந்து, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஜனநாயக நீரோட்டத்திற்கு வந்தபின், அரசியல் புகலிடம் தேடித் தரைமார்க்கமாக வருபவர்களை ஏற்க வேண்டிய நிலை ஜெர்மனிக்கு இப்பொழுது இல்லை. தவிர, உலகப் பொருளாதாரப் பின்னடைவு,ஜெர்மனியையும் பாதிக்காமல் விடவில்லை. வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்து விட்டன; வேலையில்லாத் திண்டாட்டம் பெருக்கெடுத்தோடுகிறது. இப்படியான நிலையிலே சற்று கட்டிறுக்கமாக நடந்து கொள்ளவேண்டிய கட்டாயத் தேவை தனக்கு ஏற்பட்டிருப்பதையும் ஜெர்மனி உணர்ந்தது. இப்படியான சூழ்நிலையிலேயே, அண்டை நாடுகளின் மக்கள், சித்திரவதைக்கு அஞ்சி, அரசியல் தஞ்சம் தேடி- ஜெர்மனிக்கு ஓடி வரவேண்டிய தில்லை- நிலைமை மாறிவிட்டது, என்று ஜெர்மனி அறிவித்தது. இந்த அடிப்படையிலேயே, போலந்துடன் ஜெர்மனி ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. செக் குடியரசுடனும் ஓர் இணக்கம் காணமுற்பட்டது. ஆனால் முயற்சி பலிதமாகவில்லை.

கடந்த ஆண்டு, ஜனவரி-ஜுலை காலப் பகுதியில் தரைமார்க்கமாக ஜெர்மனிக்குள் நுழைய முற்பட்டவர்களில் 46ஆயிரம் பேரை, கூட்டாட்சி எல்லைப் பாதுகாப்புப் படையினர் பிடித்து, தடுப்புக் காவலில் வைத்தார்கள். இவர்களில் 20ஆயிரத்து 500பேர் செக் குடியரசு எல்லையால் வந்தவர்கள். தற்போதுள்ள ஏற்பாட்டின்படி, ஆறுமாத காலத்துக்குள், இவர்களை 48 மணி நேரத்துக்கு அதிகாரிகள் தடுப்புக் காவலில் வைத்திருந்ததால், வந்த எல்லையால் திருப்பி அனுப்பலாம். ஆனால் இங்கே பிரச்னை என்னவென்றால், இந்த ஆறுமாத காலம் எப்போது துவங்குகின்றது என்பதே. அகதி ஒருவர் எப்போது செக் எல்லை கடந்து ஜெர்மனிக்குள் வந்தாரோ, இந்த நாளில் இருந்தே ஆறுமாத காலம் என்று, செக் குடியரசு கூறுகிறது. இப்படிப் பார்த்தால், செக் எல்லையைக் கடந்து வந்து ஜெர்மனிக்குள் ஆறுமாத காலம் தலைமறைவாக இருந்து விட்டால், அவரைத் திருப்பி செக் குடியரசுக்கு அனுப்பலாகாது, என்பது செக் நாட்டு வாதம். அப்படியல்ல எப்பொழுது எங்கள் கையில் அகதி ஒருவர் அகப்படுகிறாரோ, அன்றில் இருந்தே ஆறுமாதகாலத்தைக் கணக்கிடவேண்டும், என்கிறது ஜெர்மனி. இந்த இழுபறியில், உள்துறை அமைச்சரும், செக் உள்துறை அமைச்சரும் செப்டம்பர் முதல் தேதியில் சந்தித்தார்கள், விவாதித்தார்கள்;ஆனால் இணக்கம் காணாத நிலையிலே பிரிந்து சென்றார்கள். இப்பொழுது, சட்டத்தினால் கண்டு பிடிக்கப்படாத நிலையிலே 2லட்சம் அகதிகள் வரையில், தலைமறைவாக ஜெ[...]னியிலே இருக்கிறார்கள் என்று கணக்[...]டப்பட்டிருக்கிறது.

புதிய அகதிச்சட்டம் ஜுலை 1 இ[...] புகுத்தப்பட்ட பின்னர், ஜெர்மனிக்[...] அகதிகள் பாய்ந்தோடி வருவதும் உ[...]மையிலேயே வெகுவாகக் குறைந்திரு[...]கிறது. ஜுன் மாதத்தில் 31 ஆயிரம்பே[...] ஜுலையில் 20 ஆயிரம். இனி ஆகஸ்டி[...] இந்தத் தொகை இதைவிடக் குறைந்திரு[...]கிறது. இதனால், அகதிகளின் பராமரி[...]புக்காக, உணவுக்காக ஜெர்மனி ஒதுக்கு[...] பணத்தொகை குறையப் போகிறது. வ[...]றைன்-வெஸ்ற்பாலியா விலே அகதிகளை[...] வைத்துப் பராமரிக்க அமர்த்தப்பட்[...] எட்டுப் பாரிய ராணு வப் படைவிடுக[...] இனிமேல் தேவைப்பட மாட்டாவா[...] அங்கு ஏப்ரலில் 9ஆயிரம் அகதிகள் த[...]சமடைந்தார்கள். இப் போது 4 ஆயிர[...] பேர் மட்டுமே அங்கு இருக்கிறார்கள்.

ஜெர்மன் எல்லப் பாதுகாப்புப் பை[...]கள் கண்ணிலே எண்ணெய் விட்டு[...] கொண்டு, விழிப்பாக இருக்கிறார்கள்[...] தரைமார்க்கமாக எல்லைக் கோட்டை[...] பதுங்கிப் பாய்ந்து வருபவர்களை[...] சாமர்த்தியமாக மடக்குவதில் முனை[...]பாக இருக்கிறார்கள். இதைவிட புது[...] புது தடைமுயற்சிகளைப் பரீட்சித்து[...] பார்ப்பதிலும் மிகுந்த அக்கறை காட்[...]கிறார்கள்.

இதற்காக, அகதிக் கடத்தல் வியாபா[...]ரத்தில் ஈடுபட்டிருக்கும் கூட்டத்தின[...] ஓய்ந்து ஒதுங்கிவிட்டார்கள் என்பதே[...] அல்லது, பயந்து கடையை மூடிவி[...]டார்கள் என்பதோ அர்த்தமல்ல. தற்போ[...]தைக்கு ஓரத்திலே நின்று, எல்லை பா[...]காப்பு அதிகாரிகளின் ஒவ்வொரு நட[...]டிக்கையையும் உன்னிப்பாக நோட்ட[...] விடுகிறார்கள் என்றே கூறவேண்டு[...] புதிய சட்டத்தின் ஒவ்வொரு நெளி[...] சுழிவுகளையும் அக்குவேறு ஆணிவேறா[...] அலசி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்க[...] என்றும் அனுமானிக்க வேண்டும். என்[...] இருந்தாலும், கொழுத்த லாபம் தரு[...] 'ஏஜென்ற்' தொழிலை விட்டுவிட, [...]திக்கடத்தல் வியாபாரிகளுக்கு மன[...] வருமா, என்ன? விரைவான குறுக்[...] வழியிலே பணச்சுவை கண்டவர்க[...] அவர்கள். என்ன இருந்தாலும், அவ[...]ளைப் பொறுத்த வரையிலே, அகதி[...] கடத்தல் வியாபாரம், ஒரு கருணை[...] பணியல்லவா?



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை: வாஸந்தி

# ஞானம்



பக்கத்துப் போர்ஷன் இன்று கப்சிப்பென்று இருந்தது. டப்பா சாப்பாடுகளைத் தயார் செய்துகொண்டிருந்த சாவித்திரிக்கு வியப்பாக இருந்தது.

"அடியே சியாமளா" என்று தடுப்பு வழியாகக் குரல் கொடுத்தாள். "உங்க வீட்டு ரேடியோவுக்கு இன்னாடி ஆச்சு? கம்முனு இருக்கு?"

"ஏதோ ரிப்பேர் ஆயிட்டதுக்கா" என்று பின்கட்டிலிருந்து சியாமளா பதில் சொன்னாள். "மெஷின்னா டக்குனு நிக்கும்-நம்பள மாதிரியா, ரேழியிலே தூக்கிப்போடுறவரை உழைக்க!"

சாவித்திரி பரபரவென்று டப்பாக்களை மீண்டும் பரிசோதித்து 'எல்லாம் வெச்சிருக்கோம்' என்கிற திருப்தியுடன் இலைச் சுருளை அவற்றின் பிடிகளில் செருகினாள்.

"இப்ப இன்னா மணியிருக்கும்?" என்றாள்.

"ஓ, மணிக்காகக் கேக்கறியா, பன்னண்டடிக்கப் போவுதுன்னு நினைக்கறேன்."

"அடி அம்மாடியோ, அப்பக் கிளம்ப வேண்டியதுதான். உன் ரேடியோ பாடல்லேன்னா எனக்குத்தான் திண்டாட்டம். சீக்கிரம் ரிப்பேர் பண்ணுடி."

சியாமளா சிரிக்கும் சப்தம் கேட்டது.

தடுப்பை நகர்தியபடி உள்ளே பாதி உடம்பை நுழைத்து நின்றிருந்தாள். கோணிப்பை போன்ற கனமான பெரிய பையில் அவசரமாக, ஆனால் கவனமாக டப்பாக்களை ஒவ்வொன்றாக சாவித்திரி அடுக்க ஆரம்பித்தாள்.

"இன்னாடி?"

"இல்லே, என் ரேடியோவை நம்பியா உன் வேலை நடக்குது? நீ வேலை செய்யறதுடன்னைப் பார்த்துல்லே நா ரேடியோ வைக்கறேன்?"

அடுக்கி முடித்ததும் சுவரில் மாட்டியிருந்த கையகலக் கண்ணாடியில் முகத்தைப் பார்த்து முன் நெற்றியைக் கோதி புடைவையைச் சரிசெய்தபடி சாவித்திரி புன்னகை புரிந்தாள்.

"என்னுதெல்லாம் குருட்டுப் பழக்கம், ஒரு நாளைப் பார்த்தாப்பலே சரியாயிருக்குமா?"

அறையின் ஓரமாக இருந்த சைக்கிளை வெளியில் மண் தரையில் நகர்த்தி வைத்து சியாமளா சட்டென்று ஒரு கை பிடிக்க கோணிப்பையைப் பின் சீட்டில் கட்டியிருந்த கூடையில் வைத்தபடி சிரித்துக் கொண்டே சொன்னாள்;

"நீ ரேடியோ வாங்கி என்னைக் கெடுத்துப்பிட்டே. அது பாடல்லேன்னா என் கையும் காலும் ஓடமாட்டேங்குது!"

"உனக்கென்னக்கா பையன் பெரிய படிப்பு படிக்கிறான். நாளைக்கே உத்தியோகம் கிடைச்சா சுவர்க் கடியாரமே வாங்குவே."

சாவித்திரி பதில் ஏதும் சொல்லாமல் கதவைச் சாத்திப் பூட்டிக் கொண்டு, "நாகிளம்பறேன்" என்று சொல்லிவிட்டுச் சைக்கிளை அந்த மேடும் பள்ளமுமான மண் தரையில் நகர்த்திக்கொண்டு போனாள்.

"என்னக்கா, கிளம்பிட்டியா?"

அவள் திரும்பினாள்.

பூங்காவனம் தன் வீட்டுக்கதவைப் பூட்டிக் கொண்டிருந்தாள். பஞ்சாலையில் வேலை பார்ப்பவள்.

"இரு நானும் வர்றேன். இன்னிக்கு எனக்கு மத்தியான ஷிப்டு."

இருவரும் சேர்ந்து நடந்து மெயின் ரோடுக்கு வந்ததும் சாவித்திரி சைக்கிளின் மேல் அமர்ந்து கொண்டாள்.

"உன் மவன் கணேசன் நல்லா படிக்கிறானா?"

"எங்கேக்கா? ஒழுங்கா இஸ்கூலுக்குக்கூடப் போறதில்லே-ஏதாவது சொன்னா ஏறுமாறப் பேசறான்- எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேணாம்? கதிரேசன் போல எல்லாப் பசங்களும் பொறுப்பா இருந்தாங்கன்னாஇந்தக் குப்பமே உருப்பட்டில்லே போயிரும்?"



படிப்பகம்

www.padippakam.com

பூங்காவனத்தின் குரலில் ஏக அலுப்பு இருந்தது.

"தன்னாலே பொறுப்பு வரும்டி, கவலைப்படாதே!"

"எப்ப? நா கண்ணை மூடின பிறகு தான் அது நடக்கும், அக்கடான்னு நா ஒருநாள் குந்த முடியாது, நிச்சயம்!"

சாவித்திரி பதில் சொல்லாமல் ஒரு விநாடி அவளைப் பார்த்து;

"வரட்டுமா பூங்காவனம், நேரமா குது!" என்றாள்.

"எல்லாத்துக்கும் அதிர்ஷ்டம் வேணாம்?" என்று பூங்காவனம் மறுபடி சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

சைக்கிளை வேகமாக மிதித்துச் சீராக ஓட்ட ஆரம்பித்த சாவித்திரிக்குச் சிரிப்பு வந்தது. எல்லாருக்கும் பொறாமை அவளைக் கண்டு. கதிரேசன் மகா கருத்தாகப் படித்து ஒவ்வொரு வகுப்பிலும் முதலாக வருவதைக்கண்டு மகள் மீனாட்சியும் நன்றாகப் படிக்கிறாள். என்னவோ அவள் செய்த அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும்- அல்லது படித்தால்தான் முன்னுக்கு வரமுடியும் என்று சின்ன வயசிலிந்து அவள் உரமேற்றியது காரணமாக இருக்கவேண்டும். அவர்களைக் கண்டிப்புடன் வளர்த்த விதமும் இருக்கலாம். சினிமா, தீனி என்று குழந்தைகளுக்குக் காசு கொடுக்கும் வழக்கமில்லை அவளுக்கு. கணேசனை அவன் இஷ்டத்துக்கு விட்டதால்தான் இப்பொழுது ஏறுமாறாகப் பேசுகிறான். புருஷன் வேறு குடிகாரன். பிள்ளைக்கு எதிரிலேயே பூங்காவனத்தை அடிக்கிறான்; உதைக்கிறான். கணேசனுக்கு அவளிடம் என்ன மரியாதை இருக்கும்?

அவள் செல்லவேண்டிய அலுவலகத்தை அடையும்போது பன்னிரண்டே முக்கால் ஆகிவிட்டது. அவள் சைக்கிளை ஓர் ஓரமாக நிறுத்தி இறங்கினாள். சாப்பாட்டு டப்பாக்களை ஒவ்வொன்றாக இறக்கி வாடிக்கைக் காரர்களைத் தேடிக் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு அலுவலகத்தை ஒட்டினாற் போலிருந்த ரேழியில் வந்து உட்கார்ந்தாள்.

கட்டிடத்தை ஒட்டினாற்போல் வேப்ப மரங்கள் இருந்ததில் குளுமையாக இருந்தது. காற்று சுகமாக அடித்தது. அங்கேயே தலைப்பை விரித்து அவள் படுத்துக் கொண்டாள். தினமும் இங்கு கிடைக்கும் ஒரு மணிநேர ஓய்வில் ரம்யமான தூக்கம் வரும். காலையில் நாலரை மணிக்கு எழுந்து பம்பரமாகச் சுற்றும் உடம்புக்குத் தேவையான ஓய்வு.

விசையைத் தட்டினாற் போல் சரியாக ஒரு மணி நேரம் கழித்து அவளுக்கு விழிப்பு வந்தது. மதிய உணவு நேரமாதலால் சளசளவென்ற பேச்சுக் குரல்கள் கேட்டன. ரேழியின் கோடியிலிருந்த கழிவறைக் குழாயில் முகத்தைக் கழுவிக் கொண்டு அவள் காலி டப்பாக்களை எடுத்து வரச் சென்றாள்.

ஒரு அறைக்குச் சென்று தயக்கத்துடன் சுவாமிநாதன் ஸார் இருக்காங்களா?" என்றாள்.

"இதோ இருக்கேனே, என்ன விஷயம் சாவித்திரி?" என்றார் ஒருவர், வெற்றிலையைக் குதப்பிக் கொண்டு.

"அடுத்த வருஷம் மக பத்தாம் கிளாசுக்குப் போறாய்யா. நீங்க வழக்கம் போல உங்க மகனுடைய பழைய புத்தகங்களைக் கொடுக்கணும்."

"ஓ, பேஷா ஞாபகமிருக்கே எல்லாத்தையும் ஜாக்கிரதையா எடுத்து வைக்கச் சொல்லியிருக்கேன் பிள்ளையை. நீ கவலைப் படாதே."

"நன்றி ஐயா" என்று அவள் பெரிய கும்புடு போட்டாள்.

"பெரியவனுக்கு வேலையாயிடுத்தா?"

"இல்லைய்யா...பாங்குப் பரீட்சைக்குப் படிக்கிறான்."

"பலே, பலே! பாஸ் பண்ணிட்டான்னா நீ நிம்மதியா இருக்கலாம்."

"எல்லாம் உங்களோட ஆசீர்வாதம் ஐயா" என்றாள் அவள் பணிவுடன்." அடுத்த செக்ஷன் சுந்தரேசன் ஸார்தான் இந்தப் பரீட்சை எழுதச் சொன்னாங்க. பாங்கிலே அவங்க சொந்தக் காரங்க இருக்காங்களாமே!"

"ஆமாம், நல்ல காரியம் தான்."

"உங்க உதவியெல்லாம் இல்லேன்னா நான் தனியா என்ன செஞ்சிருக்க முடியும்? படிப்பறிவில்லாதவளுக்கு ஞானம் எங்கேய்யா?"'

"நன்னாயிருக்கே, உங்கிட்டேருந்து நாங்கதான் கத்துக்கணும்" என்றார் சுவாமிநாதன் பிரசன்னத்துடன். "உன் நிலைமையிலே வேற ஒரு பொம்பளையும் குழந்தைங்களை இந்த அளவுக்குப் பொறுப்பாப் படிக்க வெச்சிருக்க முடியாது. இன்னி நேத்துப் பழக்கமா எங்களுக்கு உன்னை? பதினைஞ்சு வருஷமா டப்பா சாப்பாடு போடறே இல்லே?"

"ஆமாய்யா, அவங்கப்பா சாகும் போது கதிரேசனுக்கு நாலு வயசு. மீனாட்சிக்கு இரண்டு வயசு. சமையலைத் தவிர வேற எந்த வேலையும் எனக்குத் தெரியாது. சரி, இப்படித்தான் ஒரு தொழில் செய்வமேன்னு ஆரம்பிச்சேன்!"

"எந்தத் தொழிலும் யோக்கியமா செஞ்சா ஒரு குறைவும் வராது சாவித்திரி!"

"அது சத்தியமான வார்த்தைய்யா!"'

அடுத்த செக்ஷனுக்குச் சென்று சுந்தரேசனுக்கும் ஒரு கும்பிடு போட்டாள்.

"நல்லாப் படிக்கிறானா கதிரேசன்?" என்றார் சுந்தரேசன்.

"படிக்கிறான்யா. வீட்டிலே தொர்
ரவுன்னு லைப்ரரியிலே உட்கார்ந்
படிக்கிறான்."

"அவன் கெட்டிக்காரன். பாஸ் ப
ணிடுவான். நான் பாங் மானேஜர்கிட்ட
சொல்லியிருக்கேன் கவலைப்படாதே."

"எல்லாம் உங்க ஆசீர்வாதம் ஐயா.

காலி டப்பாக்களைத் தூக்கி
கொண்டு வீடு நோக்கிச் செ
லும்பொது மனசில் ஒரு திருப்
நிலவிற்று. குழந்தைகள் நன்றாகப் படி
வேண்டும் என்று மிகப் பெரிய தீவிர
அவளுக்கு ஏமாற்றமளிக்காமல் குழ
தைகள் படிக்கிறார்கள். அதற்கு ஆண்
வனுக்குத்தான் நன்றி சொல்லவேண்டு
ஆண்டவனுக்கு அடுத்தபடியாக இ
ஆபீஸர்கள். எத்தனை உதவிகள் அ
கள் செய்திருக்கிறார்கள். தனக்குப் பட
பறிவில்லையே என்று அவளுக்கு
பெரிய குறை. பார்வையற்றவள் போ
மனம் பதைப்பாள்.

'ரெண்டு பேரும் தலையெடுத்துட்ட
நம்ம கடமை முடிஞ்சுதுன்னு நிம்மதி
இருக்கலாம்.'

"ஏனக்கா, பொண்ணை மேல மே
படிக்க வைக்கணும்னு ஆசைப்படறீ
அதுக்கும் மேல படிச்ச மாப்பிள்ளை
இல்லே நீ தேடணும்?" என்று பக்கத்
வீட்டு சியாமளா கேட்பாள்.

'தேடிட்டுப் போறேன்" என்று அ
சிரிப்பாள். "அவளுக்குன்னு ஒருத்த
பிறந்திருந்தா, கிடைக்காமியா போ
வான்? எந்த நேரத்திலேயும் தனிச்சு நி
பலம் வேணும்டீ, படிப்புன்னு கைவ
இருந்தா எடுப்புச் சாப்பாட்டுத் தொழ
தான் வழின்னு இருக்கவேண்டாம் பா

"நீ எதிலேக்கா குறைஞ்சு போனே
என்று சியாமளா மாய்ந்து போவா
"பாக்டரியிலே வேலை பார்க்கிறவ
கூட சைக்கிள் வாங்க முடியாம உட்கா
திருக்காக. நீ சைக்கிள் வாங்கி ஆ
ளைக்கணக்காக ஓட்டிக்கிட்டுப் பொ

சைக்கிளை வாங்கியது எத்தன
புத்திசாலித்தனம் என்று அவள் த
குள் நினைத்துக் கொண்டாள். நே
மிச்சம், உடல் சிரமம் குறைவு. பஸ்ஸ
காகக் காத்திராமல் எங்கு வேணும்
லும் செல்லலாம். பளு தூக்கலா
அவள் யாருக்கும் சொல்லாமல் சாப்ப
கொடுக்கும் அலுவலகத்து வாட்ச்மே
டம் சைக்கிள்

ஓடக் கற்றுக்கொண்டு, புது சை
ளையும் ஒருநாள் வாங்கிக் கொண்
வந்து நின்றபோது தெருவே வா
பிளந்து நின்றது. கதிரேசனுக்குத்த
சைக்கிள் என்று நினைக்கப் பே
அவளே அதை ஓட்டிக் கொண்
வேலைக்குச் செல்வதை ஜீரணித்
கொள்ள வெகுநாள் பிடித்த



படிப்பகம்

www.padippakam.com

கதிரேசனுக்கும் மீனாட்சிக்கும் கூட என்னவோ போல்தான் இருந்தது.

"என்னம்மா, ஆம்பளைக்கணக்கா நீ சைக்கிள் ஓட்டப் போறியா?" என்றான் கதிரேசன்.

"ஏன், ஓட்டினா என்ன? ஆம்பளைக் கணக்கா சம்பாரிச்சு உங்களை ஆளாக்கல்லே?" என்றாள் அவள் சிரித்து.

"இந்தக் குப்பத்திலே இதுவரைக்கும் எந்தப் பொம்பளையும் ஓட்டல்லே."

"நா முதல் பொம்பளையா இருக்கேன்டா, போடா!" என்று அவன் வாயை அவள் மூடினாள்.

சைக்கிள் இருப்பது ரொம்பவும் உபயோகம் என்று இப்பொழுது அவனே ஒப்புக் கொள்கிறான். முதலில் அவளைக் கேலிசெய்தவர்கள் எல்லாம் இப்பொழுது மரியாதையாகப் பார்க்கிறார்கள்.

நன்மையில், பழகிவிட்டதென்றால் எதுவுமே அதிசயமில்லை இந்த உலகத்தில். தப்புக் காரியம் செய்தால்லவா ஒருத்தரிடம் பேச்சுக் கேட்க வேண்டும்? அந்தக் குப்பத்தில் இருக்கும் வேலைக்குப் போகும் பெண்கள் எல்லாம் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்திருந்தார்கள். அதற்கு அவள்தான் தலைவி. வேலை பார்க்கும் இடத்தில் ஏதாவது அடாவடித்தனம் நடந்தாலோ கூலி குறைத்துக் கொடுக்கப்பட்டாலோ அவள் நேரடியாப் போய்த் தீர்த்து வைப்பாள். 'லீடர் சாவித்திரி' என்று ஆண் பிள்ளைகள் அவளுக்குப் பெயர் வைத்திருந்தார்கள்.

அவள் குப்பத்திற்குள் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நுழைந்தபோது நைட்டியூட்டி பார்க்கும் முனிசாமி வாசலில் கயிற்றுக் கட்டிலில் மனைவியுடன் அமர்ந்திருந்தான். அவளைக் கண்டதும் என்னவோ சொல்ல இரண்டு பேரும் சிரித்தார்கள்.

"என்ன சிரிப்புப் பொத்துக்கிது?" என்று சாவித்திரி பரிகசித்தாள். "எல்லாம் உன்னைப் பத்தித்ததான்" என்று முனிசாமியின் மனைவி சிரித்தாள்.

"இப்பவே ஜான்ஸி ராணி மாதிரி இருக்கே. கதிரேசனுக்கு வேலை கிடைச்சிட்டா விக்டோரியா மகாராணி மாதிரி ஆயிடுவேன்னு சொல்லுது!"

"இந்தக் குப்பத்து ராணி கூட நா இல்லே" என்று அவள் சிரித்தாள். "கதிரேசனுக்கு வேலை கிடைச்சாலும் நா எதுக்கு மாறணும்?"

"நாங்களுந்தானே பார்க்கப் போறம்?" என்று அவர்கள் சிரித்தார்கள்.

"பாருங்களேன்" என்றபடி அவள் நகர்ந்தாள்.

மாலையில் மீனாட்சி வந்ததும் சாப்பிட்டு அடுத்த தெருவில் இருக்கும் பள்ளிச் சினேகிதிகளுடன் கொஞ்சம் படித்து விட்டு விளக்கு வைக்கும் நேரத்தில் படிக்க உட்கார்ந்துவிட்டாள். படிக்கும் நேரத்தில் அக்கம் பக்கத்தில் டீவி. பார்க்கப் போனால் வாழ்க்கையே நாசமாகிப் போகும் என்று சாவித்திரி போட்டிருந்த கண்டிப்பில் இரண்டு குழந்தைகளும் டீவி பார்க்கும் சபலமில்லாமலிருந்தார்கள். கதிரேசன் விளக்கு வைத்துக் கொஞ்சநேரம் பொறுத்துத்தான் வந்தான். ரேடியோக்களும் டீவிக்களும் அலறிக் கொண்டிருந்தன.

"லைப்ரரி மூடலேன்னா, ராப்பூரா வும் அங்கேயே உட்கார்ந்துக்கலாம்-இந்தச் சந்தை இரைச்சல்லே எப்படிப் படிக்கிறது?" என்று முணுமுணுத்தான்.

"எப்படியோ, இங்கே உட்காந்து கிட்டே முக்காக் கிணறு தாண்டியாச்சு. இன்னும் காக் கிணறுதான். நான் சுந்தரேசன் ஐயாகிட்டயும் சொல்லியிருக்கேன்."

"ஏம்மா, உனக்கு எம்மேலே நம்பிக்கையில்லையா?" என்றான் அவன் வெடுக்கென்று.

"நம்பிக்கையில்லேன்னு அர்த்தமா அதுக்கு? இந்தக் காலத்திலே சிபாரிசு இல்லாம எது நடக்குது சொல்லு?"

அவன் பதிலே சொல்லாமல் சாப்பிட்டு விட்டு மறுபடி ஏதோ நோட்டும் பென்ஸிலுமாக உட்கார்ந்தான்.

வேலையெல்லாம் முடிந்த கையுடன் அவள் தன்னுள் லயித்த யோசனையுடன் படுத்துக் கொண்டாள். சில சமயங்களில் அவளுக்கு மீனாட்சியையும் கதிரேசனையும் பார்க்கும் போது கவலையாக இருந்தது. இந்தக் குப்பத்து ஜனங்களிலிருந்து அவர்கள் அன்னியப்பட்டுப் போனாற் போல் இருந்தது. மற்ற குழந்தைகள் இயல்பாக இங்கு சிரித்துப் பேசுவது போல் அவர்கள் பேசுவதில்லை. அவர்களது பள்ளியும் படிப்பும் வேறு ஏதோ ஒரு மட்டத்தில் அவர்களை உட்கார்த்தி வைத்து விட்டாற்போல் தோன்றிற்று. அவர்களைப் பெற்றவள் அவள் என்கிற காரணத்துக்காகவே அவளுடன் அவர்கள் தங்குவதைப் போலப் பட்டது. இது அவளை அடிக்கடி சங்கடப்படுத்தியது. அதென்ன படிப்பு அது, பிறப்பிலே ஏற்றத் தாழ்வைச் சுட்டிக் காண்பிக்கிற படிப்பு?

'ஓ, தன்னாலே சரியாப் பூடும்' என்று அவள் தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள். ஞானம் வளரத்தான் படிப்பு. படிக்கப் படிக்க மனசு விசாலமடையணுமே தவிர குறுகாது. படிக்காம ஊர் சுத்தற, வம்பளக்கிற குழந்தைகளோடு இவங்களுக்குப் பேச என்ன இருக்கும்? இது கௌரவப் பிரச்னையா இருக்க முடியாது, நிச்சயம். பொதுவா பேசக் கூடிய விஷயம் ஒண்ணுமில்லாததாலேதான் எங்கிட்டக்கூட இவனுக்குப் பேச முடியல்லே...

நாட்கள் ஜுர வேகத்தில் சுழன்றன. கதிரேசனுடைய வங்கிப் பரீட்சைகள், நேர்முகத் தேர்வு எல்லாம் முடிந்தன. அதற்குப் பிறகும் அவன் லைப்ரரிக்குப் போய் வந்தான். வீட்டில் இருந்த நேரம் மீனாட்சியின் பாடங்களைக் கவனித்து உதவினான். சாவித்திரி வழக்கம் போல் கடை கண்ணிக்குப் போய்ச் சாமான்கள் வாங்கி வந்து, வீட்டு வேலைகளைக் கவனித்து டப்பா சாப்பாட்டுக் கூடையை எடுத்துப் போனாள். அக்கம் பக்கத்தில் இருக்கும் ஒன்றிரண்டு பெண்கள் ஜாடை மாடையாகச் சொன்னார்கள்,

"பரீட்சை முடிஞ்சு கதிரேசன் இப்ப சும்மாதானே இருக்கான். டப்பாவை அவனைத்தான் கொண்டு போய்க் குடுக்கச் சொல்லேன்.!"

"பெரிய படிப்புப் படிச்ச பையனைச் சொல்லக் கூச்சமா இருக்காக்கும்!"

'அதெல்லாம் ஒண்ணுமில்லே' என்று அவள் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'அவங்கிட்ட என்ன கூச்சம்? டப்பாச் சாப்பாடு கொடுக்கிறவளுடைய பிள்ளை தானே அவன்? படிச்சதினாலே அது மாறிடுமா?'

அவனாக உதவ முன்வரவேண்டும் என்று அவள் விரும்பினாள். அவன் வராதபோது 'பாவம், இத்தனைநாள் படிச்சு உடம்பை வருத்திக்கிட்டது போதும், அவனுக்கும் ஓய்வு வேணும்' என்று சமாதானப் படுத்திக் கொண்டாள்.

தேர்வு முடிவு வந்தது. அதில் தேர்வாகி உடனடியாக வேலைக்கு ஆர்டரும் கிடைத்த செய்தியை அவன் வந்து சொன்னபோது அவள் மெய்சிலிர்த்துப் போனாள். தானே அதைச் சாதித்து விட்டதுபோல் பெருமையேற்பட்டது. இரவு

சாப்பாடானதும் அவன் சந்தோஷமான மனநிலையில் அவளிடம் சொன்னான்;

"அம்மா, நீ இனிமே இந்த டப்பா சாப்பாட்டுத் தொழிலை நிறுத்திடணும்."

"நா எதுக்குடா நிறுத்தணும்?" என்றாள் அவள் சிரித்துக் கொண்டு.

"எனக்கு ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் வரும். நீ எதுக்கு சம்பாதிக்கணும்?"

"நல்லாயிருக்கே. அது உன் தொழில். இது என் தொழில். இத்தனை வருஷம் செஞ்சதை எப்படி விடமுடியும்?"

"நான் பெரிய உத்தியோகத்திலே இருக்கும்போது நீ டப்பாச் சாப்பாடு கொடுக்கிறது நல்லா இருக்குமா? எனக்குப் பெரிய தலை குனிவாப் போகும்!"

அவள் திடுக்கிட்டாள். அவனுக்கு



படிப்பகம்

www.padippakam.com

அவளுடைய தொழிலைக் கண்டுதான் அவமானம். வேறு எந்தக் சுரிசனமும் இல்லை.

"எதுடா தலைகுனிவு? இந்தத் தொழில் செஞ்சுதான் நான் ஒருத்தன் கிட்ட கை நீட்டாம மானத்தோட வாழ்ந் திருக்கேன். இந்தத் தொழில் செஞ்சுதான் உங்க ரெண்டுபேரையும் படிக்க வெச்சி ருக்கேன். படிப்பறிவில்லாதவ பெரிய ஆபிஸ்லேயா வேலை பார்த்திருக்க முடியும்?"

"அதெல்லாம் எனக்குத் தெரியும். ரொம்பத் தியாகமெல்லாம் பண்ணித் தான் எங்களை ஆளாக்கியிருக்கே. அதெல்லாம் பழைய கதை. நான் வேலைக் குப் போக ஆரம்பிச்ச பிறகு நீ இந்த வேலையை நிறுத்தணும். இல்லேன்னா எனக்கு அவமானம். நான் தீர்மானம் பண்ணியாச்சு."

அவளுக்கு மகா அதிர்ச்சியாக இருந் தது அவன் பேச்சு.

"நியாயமா செய்யற தொழில்லே கௌரவப் பிரச்னை எப்படிடா வந்தது? நான் என்ன திருடியா, சோரம் போன வளா நீ அவமானப்பட?"

"இந்த டயலாக் எல்லாம் எனக்கு வேணாம்" என்றான் அவன் கண்டிப்பாக. "நீ இனிமே அந்தத் தொழில் செய்யக் கூடாது. பிள்ளை சம்பாதிக்க ஆரம் பிச்சா அக்கடான்னு உட்கார ஒவ்வொரு பொம்பளையும் தயாரா இருக்கா!"

"நான் வித்தியாசமான பொம்ப ளைன்னு வெச்சுக்கோ" என்று அவள் சீறினாள்.

"என் உடம்பு சீரா இருக்கிற வரைக் கும் நான் யாரையும் அண்டி நிக்கப் போறதில்லே. என் பிள்ளையண்டெ கூட. கையும் காலும் விழுந்து போச் சுன்னா அப்ப நீ என்னைப் பாத்துக்க போதும். நீ நல்லா இருக்கணும்னு நான் உன்னைப் படிக்க வெச்சேனே தவிர, என்னை நீ காப்பாத்துவே என்கிற எதிர் பார்ப்பிலே இல்லே. இப்ப மீனாட்சி யைப் படிக்க வைக்கிறேனே எதுக்கு? அவ தன் காலிலே நிக்கத் தெரிஞ்சுக்கணும் னுதான்."

"அப்ப நீ தொடர்ந்து இப்படி சைக் கிள்லே அலையப் போறியா?" என்றான் அவன் ஆத்திரத்துடன்.

அவள் வெகு நேரம் பேசாமல் இருந் தாள். பிறகு நிதானமாகச் சொன்னாள்,

"இந்தப் பார், சுதிரேசா! உனக்கு உன் உத்தியோக கௌரதைக்கு இங்க இருக் கிறது அவமானமா இருந்தா வேற ஜாகை பார்த்துக்கிட்டுப் போ. நான் தப்பா நினைக்கல்லே. என்னை மட்டும் வேலை செய்யறதை நிறுத்தணும்னு சொல்லாதே. என்னாலே மாற முடியாது."

அவன் பதிலே சொல்லவில்லை. முதல் சம்பளம் வாங்கிய கையுடன் அவன் வேறு இடம் பார்த்துக் கொண்டு போய்விடுவான் என்று அவளுக்குப் புரிந்தது. 'இத்தனை படிப்புப் படித்தவன் மனசு எப்படி இப்படி மூடிக்கிடக்கு?' என்று ஆச்சரியமாக இருந்தது. ஏட்டறிவு பிறப்பு வளர்ப்பை மறக்கச் செய்யுமா? பண்புகளைப் புறக்கணித் வெறும் உத்தியோகக் கல்வியா? அ ஞானத்திற்குப் பதில், அஞ்ஞானத்தை வளர்க்குமா?

பூங்காவனத்துக்கும் அந்தக் குப்பத் லிருக்கும் மற்ற பெண்களுக்கும் அவனு டைய தீர்மானம் சிறுக்குத்தனமாக பட்டது.

"ஏனக்கா, இத்தனை நாள் மாட உழைச்சது பத்தாதா? இனிமே நீ குந்து நான் கவனிச்சுக்கறேன்னு அவன் சொ றானில்லே? நீ எதுக்கு இப்படிப் பி வாதம் பிடிக்கிறே?" என்றாள் சியாமளா "நீ வேலை செய்யறது கௌரதை குறைவாவும் அவன் நினைக்கலாம்."

"அப்படி நினைச்சா அது சரியா நினைப்பில்லே" என்று சாவித்திரி ப படத்தாள். "அவன் தொழில் அவனுக் உசத்தின்னா என் தொழில் எனக் உசத்தி. ஒரு விஷயம் உங்களுக்கெல்லா புரியல்லேடி சியாமளா. இந்த நிமிஷ என் தொழிலை நிறுத்தி என் பி ளையை அண்டி நின்னேன்னு வெச்சுக் அடுத்த நிமிஷம் என் சுதந்திரம் பறிபே யிரும். அவனைப் படிக்க வெச்சது அவ நல்லாயிருக்கணும், அவன் புத்தி வளர்க்கணும் என்கிறதுக்காக."

பிறகு தனக்குள் மெல்லச் சொல்லி கொண்டாள், 'ஆ, எங்கேயோ கோளாறு இருக்கு. அதைத் தெரிஞ்சுக்க எனக் ஞானமில்லே...!'

ரஜனி பதிப்பகம்
தமிழாலயம் புத்தகசாலை
இணைந்து வழங்கும்

ஈழத்துப் படைப்பாளிகளின்

நூல் கண்காட்சி

பாரிஸ் கலையரசர் மண்டபத்தில்
நடைபெறவிருக்கும் இந்த கண்காட்சியில் உங்கள் நூல்களும் இடம்பெற உதவுங்கள்.

79, AV. DES M. DE CHATEAUBRIANT
93700 DRANCY
FRANCE

ரஜனி பதிப்பகம்



படிப்பகம்

www.padippakam.com


# T.T.S. BROTHERS

## மொத்த விற்பனை ஸ்தாபனம்

## GROSE HANDEL

இலங்கை இந்திய மரக்கறி, மீன்,
மளிகைப் பொருள்கள்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய
ஸ்தாபனம்

**T.T.S. BROTHERS**

**T.T.S. BROTHERS**
தலைமையகம்
GARTEN STR.29
48147 MUNSTER
GERMANY
Tel: 0251 / 2301184
Fax: 0251 / 2301183

Garten str.29
48147 Munster
Germany
Tel:0251 / 23001184
Fax:0251 / 2301183

**T.T.S.Brothers Durga**
Oesterholz 70
44145 Dortmund
Tel: 0231/819288 Fax: 0231/833431

Top Level
96 Kings Land High Street
London E8
Tel: 071 / 249 7742


படிப்பகம்

www.padippakam.com



நூல்: முகங்கொள் (கவிதைத் தொகுப்பு)
ஆசிரியர்: கி.பி. அரவிந்தன்
வெளியீடு: கீதாஞ்சலி
சென்னை-21
விற்பனை உரிமை: ஸ்னேகா 7 லஸ் சர்ச் ரோடு
சென்னை-4
விலை: ரூபா 20.00

இலங்கை அரசியலில், தமிழர் தம் வாழ்வின் அடையாளங்களை நிலைநிறுத்துவதற்காக நடத்திய போராட்டம் பல்வேறு குழுக்களால் முகிழ்ந்தன. இப்போராட்டம்; இலங்கை அரசுடனான போராட்டமாகவும், பல்வேறு குழுக்கள் தமக்குள் நடத்திக் கொண்ட போராட்டமாகவும், இந்திய அரசின் தலையீடாகவும் இந்திய அரசை வெளியேற்றும் போராட்டமாகவும், பின் மீண்டும் இலங்கை அரசுக்கெதிரான போராட்டமாகவும் வந்து நின்றன.

இந்த வந்து நிற்றலுக்கிடையில்; தமக்குள் போராடிக் கொண்ட தமிழ்க் குழுக்கள், தமது எதிரியெனக் கருதியோரை அழிப்பதற்காக, பொது எதிரியுடன் உறவாடிக் கொண்டதும், கொள்வதும் நடந்தும், நடந்து கொண்டும் இருக்கின்றன.

இவ்வரசியல் சதுரங்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்டோர், ஆதரவு அளித்தோர், பார்வையாளராக நின்றோர் பலர்; போராட்டம் எடுத்த பல்வேறு வடிவங்கள் கண்டு நிலைகுலைந்து போயுள்ளனர். பலர் நம்பிக்கை கொண்டுள்ளனர். பலர் வாக்களிக்கப்பட்ட பூமி பொய்யாகிப் போய்விட்டதாகக் கருதுகின்றனர். பலர் நாட்டைத் துறந்தனர். பலர் நாட்டிலேயே மனக்குமுறலுடன் வாழ்கின்றனர். பலர் நாட்டில் ஒளிமயமான எதிர்காலத்தை நம்பிக்கையுடன் நோக்குகின்றனர்.

சொந்த நாட்டை விட்டு வெளியேறியோர்; அகதிமுகம் கொண்டு, ஐரோப்பிய நாடுகளிலும் வேறுபல நாடுகளிலும் சிதறி வாழ்கின்றனர். வந்து சேர்ந்த மண்ணுடன் ஒட்டவும் முடியாமல், வாழ்ந்த மண்ணை மறக்கவும் முடியாமல் வாழ்கின்றனர். சிலர் வாழ்வாவது மண்ணாவது என்றும் வாழ்கின்றனர்.

ஐரோப்பிய நாடுகளில் அகதிமுகம் கொண்டோரில் பலர், தமது அனுபவங்களை எழுத்து மூலம் பதிவு செய்யும் ஆற்றல் வாய்ந்தவர்களாக உள்ளனர். அவ்வாறு தமது அனுபவங்களையையும் அக, புறச் சிந்தனைகளையும் பதிவு செய்த ஒருவராக தமது கவிதைத் தொகுதி மூலம் முகம் கொள்கிறார் கி.பி.அரவிந்தன்.

தமது வாழ்வுக்கான போராட்டம், வரலாறாக கண்ணெதிரே நடைபெற்றுக் கொண்டிருந்த வேளை, போராட்டத்திற்கு தன்னை அர்ப்பணித்த போராளிகளில் ஒருவராக அரவிந்தன் முகம் கொள்கிறார்.

1987ஜூலையில் கைச்சாத்தாகிய 'இலங்கை இந்திய ஒப்பந்தம் பலரை நிலைகுலையச் செய்தது. இந்தியப் படைகளின் வருகையை சத்தியத்தின் வருகையாகக் கண்டவர்களும் உளர். ஆக்கிரமிப்பின் வடிவமாகக் கண்டவர்களும் உளர். இவ்வொப்பந்தமும் அதனோடு ஒட்டிவந்த சில போக்குகளும், தமிழ்க் குழுக்களின் நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிருப்தியும், விலகலும் இவர் கவிதைகளில் அழுத்தமாகத் தெரிகின்றது. ஆயினும் போராட்டத்தின் தேவையும், அதன் மீதுள்ள நம்பிக்கையும் இவரை விட்டு அகலவேயில்லை.

அரவிந்தன் கவிதைகள் மூன்று வகை அனுபவங்களை வெளிப்படுத்துகின்றன. ஒன்று தமிழகத்தைப் பின்தளமாகக் கொண்டு இயங்கிய காலங்களில், தமிழக மக்கள் அரவணைப்பு நினைவுகள், இந்தியப் படைகளின் வருகையால் ஏற்பட்ட பின்னடைவுகள், ஆயுத ஒப்படைப்பும் தமிழ் குழுக்களின் இரண்டக நிலைகள் 'சிம்மாசனம் இல்லையேல் அசோக சக்கர நாற்காலியென விலங்காய், ஓடுகாலியாய், தலைகால் புரியாத அதிகாரப்பசியில் அம்மணமாய், ஆபாசமாய் விளைந்த பிறவிகள்' தலையெடுத்த பூக்களை நசித்த நண்பன், போராட்டத்தின் தேவையும் அதன் மீதுள்ள நம்பிக்கையும்.

இரண்டாவது புலம் பெயர்ந்து வாழும் நினைவுகள்; புலம் பெயர்ந்து பிரக்ஞை பூர்வமாக வாழும் ஒருவரது சகல நினைவுகளையும் இவர் எதிர்கொள்கிறார். வேலைத்தலம், சந்தை, பஸ்தரிப்பிடம், மதுச்சாலை போன்ற இடங்களில் காணப்படும் வெள்ளை இனவாதம், கறுப்பின மக்களை இகழ் சியாக நோக்குவதும் இழிசொற்களா அழைப்பதும் ஐரோப்பிய நாடுகளு குரிய பொதுக் குணாம்சம். இதைச் சில உணர்கிறார்களோ இல்லையோ அரவி தன் உணர்கிறார். அதேபோல் தஞ்ச கோரிய எம்மவரின் சாதி மனோபாவ களையும் பதிவு செய்கிறார். கணவன் மனைவி வேறுவேறு நாடுகளில் வாழு அவலம், இடம் வலம் தெரியாமல் எழு பாலுணர்வுவேட்கை, தாலாட்டுப் பா முடியாத இயந்திரச் சூழலில் வளரு மழலை போன்றவற்றின் உணர்வுகளை யும் வெளிப்படுத்துகிறார்.

அடுத்து போராட்டம் பற்றிய நினை வுகளிலும் சரி, அகதிமுகம் கொண் அன்னிய நாடுகளில், வாழ்ந்த நிலை யிலும் சரி, தான் வாழ்ந்த மண்ணி சமூகக் குணாம்சங்களையும் பலகவிதை களின் இடையில் எதிர்கொள்கிறார்.

இன்று புதுக்கவிதை எழுதும் பல கவிதையில் சொற்கள் தேவைக்கு மிஞ் விரயமாவது பற்றி கவலை கொள் தில்லை. இப்போக்கிலிருந்து பெரு பாலும் அரவிந்தன் விலகியே நிற்கி றார். கொண்ட கருத்துக்களின் தீவிர திற்கேற்ப அவர் கவிதைகள் மிகவு வேகமான வெளிப்பாட்டுத் திறனை கொண்டுள்ளன. நாட்டார் பாடல்களி அமைப்பு முறை பல கவிதைகளில் வள சேர்க்கின்றன. இயற்கையோடு கொ ளும் உறவும், லயிப்பும் அதன் வெளி பாடும் கவிதைகளிலிருந்து விலக நிற்காமல் கவிதைகளின் உள்ளார்ந் அர்த்தங்களுக்கு உருவகமாக வலிமை சேர்க்கின்றன.

அரவிந்தன் கவிதைகளிலுள் அவரது போராட்ட அனுபவ மீட்ட கள், அல்லது சிந்தனை கொள்ளு பலகவிதைகள் என்ன மையத்துள் வந் டைகின்றன என்பது கலங்கலாகவே இருக்கின்றது. ஒருநிலையில் ஆரம்பித் வேறு நினைவுகளுக்குத் தாவிச் சென்று மீண்டும் ஒரு மையத்துள் (கருத் நிலையாக) வந்தடையாமல் சென்று விடுகின்றன. அவரது கருத்து நிலைக்கு நினைவுகளுக்கும் சில இடங்களில் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை பல்வேறு நினைவுகளை தன்னோடு இணைத்து, மையம் சார்ந்து இறங்கு கவிதைகள் வலுவானவை தானே?

அரவிந்தனிடமுள்ள கவிதை ஆற் லுக்கும், சொற்களின் லாவகத்திற்கும் வேகத்திற்கும் பல்வேறு மனநிலைகளின் பதிவுகளுக்கூடாக கருத்தின் மைய சிதறாத நிலைக்கு தம் கவிதைகளை ஏன் உட்படுத்திக் கொள்ளக் கூடாது என அவரிடம் கேட்க மனம் விழைகின்றது.

-யசோதரன்



படிப்பகம்

www.padippakam.com

# சொற்சதுரங்கம்–1

'நாழிகை' முதலாவது இதழை பெரும்பாலும் ஆதாரமாகக் கொண்டது.

**பரிசுத்தொகை £10.00**

**விடைகள் கிடைக்கவேண்டிய கடைசித் தேதி: 31.0194.**

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி:**

**Newsmedia International Limited**
**Park Royal House**
**23 Park Royal Road**
**London**
**NW10 7JH**

## இடமிருந்து வலம்:

1. சந்தூர் என்ற வடஇந்திய வாத்திய இசைக் கருவி வல்லுநர்களில் தென்னிந்தியரில் ஒருவர். பிரபல நடனமணி ஒருவரின் கணவர் (7)
4. மதுரைக்கு இப்படியும் ஒரு பெயர். ஒன்று சேருதல் என்றும் கருத்துப்படும்(3)
5. சிலந்தியினால் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்ட ஸ்கொட்லாந்து அரசன்(3)
8. பொலிசை தமிழில் இந்த துறை என்று அழைப்பர். நாயின் உயரிய குணங்களில் இது செய்வது ஒன்று(3)
10. பந்து இந்த வடிவமானது. (3)
11. கோயில் இல்லா இதில் குடியிருக்கவேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு(2)
12. நாற்படைகளில் இதுவும் ஒன்று. மற்றைய வழமாக படித்தால் கொடுக்க என்றும் வரும் (2)
13. நீர் கொண்டு செல்ல உதவும் பாத்திரம். நிறைவான இது தளம்பாது என்பது பழமொழி(3)
15. கைகேயி தசரதனிடம் கேட்ட இதில்-ராமன் பதினான்கு ஆண்டு வனவாசம் செய்ய வேண்டும் என்பது ஆகும் (3)
22. கள்வர்களுக்கு இது அவசியம்(4)
24. தேவர்களும் அசுரரும் பாற்கடலை கடைந்தது இதற்காக. 'கொஞ்சம் நஞ்சு-கொஞ்சம் இது" என்பது 'திருடா திருடா' படத்தில் வைரமுத்துவின் பாடல்(4)
26. "இது மங்கல மங்கையர் இது..." என்பது கவிஞர் கண்ணதாசனின் பாடல். இந்தப் பெயரில் தமிழ் வாரப் பத்திரிகையும் உண்டு(5)
30. உடு என்றும் சொல்லலாம். அணி என்றும் வரலாம்(2)
32. நாழிகையில் செந்தமிழன் எழுதும் பகுதிக்குப் பெயர். இது இல்லாவிட்டால் வீட்டிற்கு காற்றும் ஒளியும் வரமுடியாது-கதவல்ல(4)
34. பூச்சியினத்தைச் சேர்ந்தது. "பூவில் இது கூடும்- கண்டு பூவும் கண்கள் மூடும் ..." என்பது 'காதல்ஓவியம்' படத்தில் கவிஞர் வைரமுத்துவின் பாடல்(3)
37. இங்கிலாந்தின் முதல் பெண் பிரதமர்(4)
38. வாசலை அடைக்க இதை மூடவேண்டும்(3)
39. வழி எனலாம். "இதை வகுத்த பின்பு பயந்தென்ன லாபம்-பயணம் நடத்திவிடு மாறைந்திடும் பாவம்...." என்பது கவிஞர் கண்ணதாசனின் அபூர்வராகங்கள் படப்பாடல்(2)

## வலமிருந்து இடம்

7. யானையைச் சார்ந்த என்று பொருள்படும். விநாயகரை இந்த முகத்தோனே என்று அழைப்பர்(2)
14. பாலையும் தண்ணீரையும் பிரித்து உண்ணும் இதிகாசப்பறவை, நளனுக்கும் தமயந்திக்கும் தூது போனது (4)
17. பிணம் வாய் திறப்பது இதற்காக(3)
18. ஒன்று கூடும் இடம் எனலாம். "நல்லதொருகுடும்பம் பல்கலை இது..." என்று கவிஞர் கண்ணதாசன் தங்கப்பதக்கத்தில் பாடி வைத்தார் (4)
20. கணவனுக்கு இன்னொரு பெயர். இது பக்தி மனைவிமாருக்கு அவசியம் என்று முன்னோர் சொல்லி வைத்தார்கள்(2)
31. பறவைகள் உணவை தமது அலகால் இப்படி உண்ணும்(3)
35. தடுக்கி என்று பொருள் கொள்ளலாம் (3)


## மேலிருந்து கீழ்

1. நடைமுறை அலுவல், நடப்பு, பிரச்னை, தகராறு போன்ற விஷயங்கள் ஒன்று சேருதல்(5)
2. பருவ காலங்களில் ஒன்று(3)
3. பரதநாட்டிய பாணிகளில் ஒன்று. நடனமணி சித்ரா இதில் தேர்ச்சி பெற்றவர்(4)
4. பலர் ஒன்று சேர்ந்தால் இது ஆகும் (4)
6. வானத்தில் இதைப் பறக்க விடுவது குழந்தைகளுக்கென்ன வயது வந்தவர்களுக்கும் அலாதி பிரியம் எனலாம்(4)
7. நிலத்தின் கீழ் இது இல்லாவிட்டால் மரங்கள் பட்டுவிடும்(2)
9. முகம் எனலாம் "இதுவே சந்திர பிம்பமோ-மலர்ந்த சரோஜமோ..." என்பது தியாகராஜபாகவதர் பாடல்- சிவகவி படத்தில். (4)
14. "அழகுள்ள மலர் கொண்டு வந்தே என்னை இது இது செய்தபின்..." என்று பாரதியார் தீராத விளையாட்டுப் பிள்ளையைப் பாடி வைத்தார்(2)
17. இது, பாசங்களை துறந்துதான் சந்நியாசம் கொள்ளலாம்(4)
18. மரக்கறி வகை காய்களில் ஒன்று. இந்தக்காய் குழம்பும் பிட்டும் என்றால் ஒரு தனிச்சுவை (4)
19. பயில்வான்களுக்கு இத்தகைய தோள்கள் உண்டு. இத்தகைய தோள்கள் தினவெடுக்கும் - வீரருக்கு. இத்தகைய மனதுடன் ஒரு காரியத்திலும் இறங்கலாம் (6)
21. இதில் நின்றுதான் அரசியல்வாதிகள் தமது உரைகளை பகர்வார்கள். அரங்கம் என்றும் வரும்(2)
23. இது இல்லாவிட்டால் மனிதன் மூடன்(6)
25. தமிழகத்தில் ஜெயலலிதாவின் பதவி(5)
28. நிலத்தில் கிடப்பது. ஒன்று அழிந்தால் கடைசியில் இதுவாகும் என்பர்(2)
29. ஒரு காரியத்தை கெட்டதாக்கும் சொல். கடினமானது என்றும் பொருள் வரும்(2)
32. இந்தியாவில் ஆளும் கட்சிக்கு எதிர்கட்சி(3)
36. ஆண்டாளுக்கு இன்னொரு பெயர். பெண்களை இலக்கியத்தில் இப்படியும் சொன்னார்கள்(2)

## கீழிருந்து மேல்.

11. அரசியலில் தப்பான காரியம் நடந்தால் இப்படி கூறலாம்(3)
16. புதிய முகம் படத்தில் ஒரேஒரு காட்சியில் வந்தாலும் பெயர் தட்டிச் செல்லும் பாத்திரத்தில் வந்த நடிகர். பிரபல கதாநாயகன்(5)
24. ஆண்கள் பார்ப்பதற்கு நன்றாக இருந்தால் இப்படி அழைப்பர்- பாலசந்தர் இயக்கி மம்மூட்டி நடித்த படத்தின் பெயரும் இது (4)
27. பன்னிரண்டு ராசிகளில் ஒன்று(4)
35. பிச்சையை இப்படி செய் என்பர். இது செய்தார் உயர்குலத்தோர் என்றாள் ஒளவை(2)
38. இது சிறிதானாலும் காரம் பெரிது(3)

தொகுப்பு: ஜனா





படிப்பகம்

www.padippakam.com



தமிழ் அவைக்காற்று கலைக் கழகம் (லண்டன்) வழங்கும்

TPAS

# நாடக விழா 94

**1.4.94 தொடக்கம் 10.4.94 வரை**

**சுவிற்சர்லாந்தின் ஆறு பிரதான நகரங்களில் நடைபெறவுள்ளது**

**8.4.94 வெள்ளி மாலை 6.00 மணிக்கு**

VOLKSHAUS ZURICH
STAUFFACHER STR.60

**9.4.94 சனி**
**மாலை 6.00 மணிக்கு**

HOTEL EKKEHARD
RORSCHACHER STR. 50
ST. GALLEN

**மேலும்**

BERN
LAUSANNA
CHUR
LUGANO ஆகிய இடங்களிலும்

(விபரம் விரைவில் அறிவிக்கப்படும்)





## இடம்பெறவிருக்கும் நாடகங்கள்

- எரிகின்ற எங்கள் தேசம்
- மழை
- சம்பந்தம்
- பாரத தர்மம்
- இரு துயரங்கள்
- பசி
- பிரத்தியேகக் காட்சி
- ஐயா இலெக்‌ஷன் கேக்கிறார்
- போகிற வழிக்கு ஒன்று

நெறியாள்கை: க. பாலேந்திரா

மேலதிக விபரங்களுக்கு:
S.Kana, Tel: 01 255 9451 (swiss)

படிப்பகம்

www.padippakam.com




தினமணி ஆசிரியர் மாலன் அமெரிக்கா செல்லும் வழியில் லண்டன் வந்திருந்தார்.

லண்டன் 'ஈழகேசரி 'ஆசிரியர் ராஜகோபாலின் ஏற்பாட்டில் மாலனுடன் இலக்கியச் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

மாலன், அடிப்படையில் அவரே கூறுகிறபடி Anti-Establishment எழுத்தாளர்தானா என்றும் சிலர் கேள்வி எழுப்பக் கூடும்.

மாலன் சிறந்த பத்திரிகையாளர். சிறுபத்திரிகை 'வாசகனி'ல் தொடங்கி சாவியின் 'திசைகள்' , 'இந்தியா டுடே', தற்பொழுது தினமணி' என்று middle journalism தமிழில் நிலைபெறவித்திட்டவர்.

அன்றைய சந்திப்பிலும் அவர் அரசியல், இலக்கியம் போன்ற எல்லாவற்றிலுமே balanced ஆகப் பேசினார். திட்டவட்டமான அபிப்பிராயங்கள் உள்ளவர்.

சர்ச்சைக்குள்ளளாகியிருக்கும் இன்னொரு பத்திரிகை New Statesman and Society.

ஜான் மேயருக்கும், அவருக்கு catering செய்யும் ஒரு பெண்ணுக்குமான நெருக்கம் தொடர்பான கேள்விகளை அப் பத்திரிகை முன்வைத்தது. கன்சர்வேட்டிவ் குடும்ப மதிப்பீடுகள் போலியானவைதான் என்பது அதன் சாரம்.

அந்த பிரதி உடனே நீதிமன்றத்தால் தடைவிதிக்கப்பட்டு விற்பனையிலிருந்து வாபஸ் வாங்கப்பட்டது.

மேயரும் அந்தப் பெண்ணும் மானநஷ்ட வழக்குத் தொடர்ந்தார்கள்.

லட்சக்கணக்கான தொகை 'சட்டபூர்வமாக'க் கொடுத்தபோதும் New Statesman தன் நிலைப்பாட்டை வலியுறுத்துகிறது. வாசகர்களிடம் வழக்கு நிதி கேட்கிறது.

இந் நிதிக்கு எழுத்தாளர் சல்மன் ருஸ்டி கணிசமான தொகை கொடுத்தார் என்று, Daily Malil பத்திரிகை சல்மன் ருஸ்டிக்கு பொலிஸ் பாதுகாப்பை வாபஸ்பெறவேண்டும் என்கிறது.

நின்றுபோன மற்றொரு பத்திரிகை Marxism Today. சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சோஷலிச அரசுகள் வீழ்ந்தபின் The End என்ற அட்டைப் படத்தோடு அப்பத்திரிகை தனது கடைசி இதழை வெளியிட்டது.

எழுத்தாளர் அகஸ்தியரும் அண்மையில் பாரிஸிலிருந்து லண்டன் வந்திருந்தார். 'களரி' அமைப்பு சந்திப்பு ஒன்றை ஏற்பாடுசெய்திருந்தது.

சந்திப்பில் இலக்கியத்தைவிடவும் அரசியல்தான் அதிகம் பேசப்பட்டது.

மார்க்ஸிசம் அதன் நிர்ணயவாத தன்மையைத் தாண்டி வெகுதூரம் வந்துவிட்டது. மார்க்ஸீய வாதத்தை இன்னும் நிர்ணய வாதமாக்கிப்பார்ப்பது மார்க்ஸீயத்துக்கோ, அதன் விடுதலை நோக்கத்துக்கோ பெருமை சேர்ப்பது அல்ல.

அகஸ்தியர் மாக்ஸிசத்தை முக்காலத்துக்குமான முழு உண்மையாக நிர்ணயமாக்குகிறார். அவரின் நம்பிக்கையப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆயினும் , நம்பிக்கை துரதிருஷ்டவசமாக காலம் எழுப்பும் நெருக்கடிகளைத் தாங்கி நிற்கும் வல்லமைகொண்டதாக எக்காலத்துக்கும் இருப்பதில்லை.

- செந்தமிழன்

# பத்திரிகை உலகின் 'மகரிஷி'



இலங்கையில் சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக குரல் எழுப்பிய மாபெரும் பத்திரிகையாளன் வரிந்திர தார்ஸி வித்தாச்சி. 1958இல், பண்டாரநாயக்கா ஆட்சியில் சிங்கள காடையர்கள் கொழும்பு நகரிலும் பதவியா போன்ற குடியேற்றப் பகுதிகளிலும் தமிழர்களைக் கொன்றும், அங்கவீனப்படுத்தியும் வெறியாட்டம் நடத்திய காட்சிகளையெல்லாம் அம்பலப் படுத்தி, பிரதமர் பண்டாரநாயக்காவின் அசுர வேடத்தைக் கலைத்தார். கொழும்பில் சிங்களவர் நடத்திய 'சிலோன் ஒப் சேவர்' ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியராகவிருந்த சிங்களவரான தார்ஸி வித்தாச்சி, அந்தச் சமயத்தில் தமது நிருபர்களும் புகைப்படக்காரர்களும் சேகரித்த செய்தி விவரங்களிலும், புகைப்படங்களிலுமிருந்து தமிழருக்கு எதிராக நிகழ்ந்த கொடுமைகளையும், மனித உரிமை மீறல்களையும், இவற்றையெல்லாம் பார்த்துக் களித்துக்கொண்டிருந்த பண்டாரநாயக்காவின் கொடுங்கோன்மையையும் 'Emergency 58' என்ற நூலாக வெளியிட்டார். உடனடியாகவே அந்நூல் தடைசெய்யப்பட்டது. அடுத்த ஆண்டிலே தார்ஸி வித்தாச்சி நாட்டை விட்டு தப்பியோடவும் நேர்ந்தது. பண்டாரநாயக்கா தடைசெய்தாலும், அவர் ஆற்றிய பொதுப்பணிக்காக, பிலிப்பைன்நாட்டுத் தலைவரின் பெயரால் நிறுவப்பட்ட றேமன் மாக்ஸஸே சர்வதேச விருது 1959 ஆம் ஆண்டு தார்ஸி வித்தாச்சிக்கு வழங்கப் பட்டது.

தார்ஸி வித்தாச்சி ஓர் அபூர்வ மனிதர். உலகில் வேறெந்தப் பத்திரிகையாளரும் பெறாத அதியுன்னத நிலையை எட்டியவர். சாதாரண பள்ளி ஆசிரியர் ஒருவரின் மகனாகப் பிறந்து தாமே ஒரு தலைமை ஆசிரியராகப் பதவியேறி, எழுத்துத் துறையில் முன்னேறி, பத்திரிகை ஆசிரியராகவளர்ந்த அவர் இலங்கை யை விட்டு வெளியேறிய பின், தூரகிழக்கில் மீண்டும் உலகளாவிய The Asian பத்திரிகையின் ஆசிரியராக செயல்பட்டார். International Press Institute-IPI என்ற ஸ்தாபனத்தின் முதல்வராகவிருந்து பத்திரிகைத் துறையின் நேர்மைக்கும் ஒழுக்கத்துக்கும் வழிகாட்டினார். பின்னர் ஐ.நா. சபையின் அழைப்பை ஏற்று இருபத்தைந்து ஆண்டுகள் பணிபுரிந்து, உதவிப்பொதுச் செயலாளர் பதவிக்கு உயர்ந்து, UNICEF ஸ்தாபனத்தின் ஆலோசகராக இறக்கும் வரையும் கடமை புரிந்தார்.

பத்திரிகைத் துறைதான் தார்ஸி வித்தாச்சியின் உயிர் மூச்சு. ஐ.நா.சபையில் மிகப் பொறுப்பான பதவியில் இருந்தபோதும் உலக நாடுகளிலுள்ள பத்திரிகைகள் மூலமாக தமது அறப் போராட்டக் கட்டுரைகளை எழுதிக்கொண்டேயிருந்தார். 'நியூஸ் வீக்' சஞ்சிகையில் நீண்டகாலமாக அவர் எழுதிவந்தார்.

பத்திரிகைப் பணியில 'மகரிஷி'யாக உழைத்த தார்ஸி வித்தாச்சி தமது 71ஆவது வயதில் மனைவி சரோஜினியையும் நான்கு புதல்வர்களையும் ஒரு புதல்வியையும் விட்டு, கடந்த செப்டம்பர் 23ஆம் தேதி இங்கிலாந்தில் ஒக்ஸ்போர்ட்ஷயர் சின்னோர் என்ற இடத்திலுள்ள தமது இல்லத்தில் புற்றுநோயால் காலமானார். அவருடைய ஆத்மா, அவர் பிறந்த இலங்கை நாட்டின் இன்றைய அராஜகத்தை ஒழிக்க பரலோகப் பத்திரிகைகளில் எழுதிக்கொண்டேயிருக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

# WINGS WORLDWIDE TRAVEL

**77, HOE STREET, WALTHAMSTOW, LONDON E17 4SA**

**BEST FARES ON ALL SCHEDULE AND CHARTER FLIGHTS TO ANY DESTINATION OF YOUR CHOICE**

| Rtn. Fares | | | | |
|---|---|---|---|---|
| | COLOMBO | £370 | SINGAPORE | £380 |
| | MADRAS | £425 | BANGKOK | £350 |
| | TORONTO | £199 | SYD/MEL | £569 |

**RESERVATIONS**
**TICKETINGS**
**TRAVEL - INSURANCES**
**HOTELS**
**CAR - HIRE**
**&**
**FLY - DRIVE**

*Cheapest Return Fares To Colombo By Air Lanka!*

CALL US FOR DETAILS
ON

**081 - 521 6216**
**081 - 521 6456**

ONE CALL WILL SAVE YOUR MONEY AND TIME

படிப்பகம்

www.padippakam.com


PEARL ASSURANCE

For further information
and advice on our range of financial
servies including
**Pensions,*Mortgages,**
**Savings &**
**Investments and**
**Inheritance Tax**

*Call*
*K. Thananjaya Financial Adviser on*
*081 680 9787*

An appointed representative of the Pearl Group (members of which are members of Lautro and/or IMRO) only for the purpose of advising on and selling life assurance and investment products that bear the pearl name.

**Remember, your home is at risk if you do not keep up payments on a mortgage or other loan secured on it.*



**295 Balham High Road**
**Tooting Bec, London SW17**
**Tel: 081-682 2585 Fax: 081-682 2575**

Rajah & Co
Solicitors
Raja Thavarajah LL.B

Fixed fee
(Residential & Commercial Properties)
&
a full range of legal services available.
Conveyancing,
Immigration,
Landlord
&
Tenants disputes,
Criminal Court and
Police Station work undertaken.

Legal Aid available.

www.padippakam.com

எல்லாவிதமான
இலங்கை, இந்திய உணவுப் பொருள்கள்,
பத்திரிகை, சஞ்சிகைகள்,
Video, Audio கஸட்டுகள், CD கள்
இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட சாரங்கள்
குறைந்த விலையில்
மதுபான வகைகள்.

Ruby's

Ruby's

FOOD STORE & OFF LICENCE

52, High Street,
Southall
Middlesex
Tel: 081- 813 9663

பொருள்கள் வாங்கும்
அதிருஷ்டசாலி
ஒருவருக்கு
பாரிஸ் போய் வர
விமானச் சீட்டு ஒன்று இலவ
அத்துடன், இலங்கைப்
பத்திரிகை ஒன்றையும்
நீங்கள் இலவசமாகப் பெறலா

படிப்பகம்

www.padippakam.com

SHANKAR

முதன் முறையாக தமிழ் சினிமாப்பாடல்களில்
கரியோக்கி இசைத்தட்டுகள்
பிரபலமான சினிமாப்பாடல்களின் பின்னணி இசையில்
நீங்களும் பாடலாம்
£50 மட்டுமே

1001 Sing Along Karaoke

AVM KARAOKE



)கள் £1.99 இலிருந்து £5.99 வரை
ıdio கஸட்டுகள் 75p இலிருந்து £1.50 வரை
;ிதாக வெளிவந்த
ஸ்திரீய சங்கீத, பக்திப் பாடல்களுடன்
பி.எம்., சங்கீதா, கீதாஞ்சலி, வாணி CD க்கள்.

னைத்து இலங்கை மளிகைப் பொருள்கள்,
,ணிடப்பட்ட மீன் வகைகள் யாவும் மொத்த விற்பனை விலையில்!

**SHANKAR & CO LTD**
**231 NORTHOLT ROAD**
**SOUTH HARROW**
**MIDDLESEX**
**TEL:081-426 8960**
**FAX:081-681 5241**

படிப்பகம்